பக்கங்கள்
24

# புதுவிதி
PUTHU VITHI

விலை
20/=

புதுமை : 01 | 01 ஏப்ரல் 2017 | விதி : 42



தேவையா
இந்த விளம்பரம்?



இக்கரைப் பனைகளும்
அக்கரை மவுசும்



அமைச்சர்
ஐங்கரநேசனுக்கு…!




யா/ திருக்குடும்ப
கன்னியர்மடம்




'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறாவடு




■ சயந்தன்

நான் வன்னிக்குத் திருப்பி அழைக்கப் போட்ட போது, தவபாலன் சொன்னது சரியானது தான் என்பதை உணர்ந்து கொண்டேன். சண்டை செய்வதை விட சமாதானம் பேசுவது மிகக் கடினமாகத் தான் இருந்தது. ஈ.பி.டி.பிக்காரனுக்கு முகத்தில் குத்தியதற்கெல்லாம் கூப்பிட்டு விசாரிக்கிற அளவிற்கு சமாதானம் எல்லாவற்றையும் தலைகீழாக மாற்றிவிட்டிருந்தது. கண்காணிப்புக் குழுவினர் சம்பவம் பற்றிய அறிக்கைகளை வன்னிக்கு அனுப்பியிருந்தனர். அவர்கள் கண்டனமும் தெரிவித்திருந்தனர்.

நான் முழுமையாக அனைத்தையும் விவரித்தேன். தண்டனைகளைப் பற்றி நான் கவலைப்படவில்லை. அது பழகிப்போன ஒன்று. அண்மையில் பரந்தன் சந்தியை மணிக்கு எழுபது கிலோமீற்றர் வேகத்தில் நான் கடந்தததைக் காவல்துறை பதிவுசெய்து, மேலிடத்துக்கு அனுப்பியிருந்தது. அந்தத் தாளில் 'மிகை வேகம்' என்ற தலைப்பில் சகல விவரங்களும் எழுதப்பட்டிருந்தன. பனிஸ்மென்டாக கிளிநொச்சியிலிருந்து பரந்தன் சந்தி வரை பெற்றோல் அற்ற மோட்டார் சைக்கிளை உருட்டிக் கொண்டு போகவேண்டியிருந்தது. இப்படியாக பனிஸ்மென்ட் ஒரு பிரச்சினை இல்லை. எதையும் எதிர்கொண்டு விடுவது என்றிருந்தேன். ஆனால் அது முடியாமற்போனது. அந்த முடிவினை நான் எதிர்பார்த்திருக்கவில்லை.

நான் யாழ்ப்பணத்திலிருந்து மீளப் பெறப்பட்டேன்.

நான் அதிருப்தியுற்றிருந்தேன். திரும்பவும் என்னை அங்கு அனுப்பி விடும்படி கேட்டிருந்தேன். சண்டை நாள்களின் போது "என்னைக் களமுனைக்கு அனுப்புங்கள்" என்ற கோரிக்கைகள் இயக்கத்தில் சாதாரணமானவையாக இருந்தன. "அது எனது சொந்த ஊர், அங்கே என் முற்றத்தில் நான் மகிழ்வோடு விளையாடியிருந்தேன். ஆகவே அதை மீட்கும் சண்டையில் நான் கட்டாயமாக இருந்தே ஆக வேண்டும்" என்று போராளிகள் எழுதிக் கேட்பார்கள்.

அப்படியேதும் இல்லாத எனது வேண்டுகோள் புதிதாகவும், புதிராகவும் இருந்திருக்க வேண்டும். ஒரு காலைப் பொழுதில் அது பற்றி விசாரிக்க வந்தவர் அரசியல் துறையில் முக்கிய பொறுப்பில் இருந்தார். அண்மையில்தான் பிரான்ஸ், சுவிஸ், நோர்வே என்று பயணத்தை முடித்து வந்திருந்தார். ஒன்றிரண்டு தடவை அரசியல் வகுப்புகளுக்கும் வந்திருந்தார். அருமையான மனிதர். அவர் என் மீதான விசாரணையை இந்தக் கேள்வியுடன் ஆரம்பித்தார். "யாரப்பன் அந்தப் பெட்டை?"

★ ★ ★

பல்கலைக் கழகத்தின் சுற்று வீதிகளில் சிவப்பும் மஞ்சளுமான முக்கோண வடிவ வண்ணக் கொடிகள் மெல்லிய கயிற்றில் கோர்க்கப்பட்டு வீதியின் இருமருங்கிலும் நின்ற கம்பங்களை இணைத்துக் கட்டப்பட்டிருந்தன. அவை கண்ணுக்கு எட்டிய தூரம் வரை நீண்டிருந்தன. தெருவின் வளைவுகளிலிருந்த மின்சாரக் கம்பங்களின் உச்சத்தில் ஆங்காங்கே லவுட் ஸ்பீக்கர்கள். அவற்றிலிருந்து தேனிசை செல்லப்பாவின் குரலில் வரிகள் புரியாத இரைச்சலில் பாடலொன்று ஒலித்தபடியிருந்தது. மேடை அருகே ஊருக்கே சமைக்குமாற் போன்று பெரியளவு பொங்கற் பானையொன்றை வைத்திருந்தார்கள். பானையில் வளைவான எழுத்துக்களில் 'பொங்கு தமிழ்' என்று எழுதப்பட்டிருந்தது. மைதானம் நிறையுமாற் போல சனங்கள் வந்துகொண்டிருந்தார்கள்.

திருவிழா ஒன்றில் நிற்கின்ற உணர்வோடு அகிலா நின்றிருந்தாள். அவள் சிவப்பு நிறத்தில் நீளக் காற் சட்டையும் மஞ்சள் வண்ணச் சட்டையும் அணிந்திருந்தாள். இடுப்பில் சிவப்பு ரிபன் ஒன்றைச் சுற்றியிருந்தாள். கைகளில் தமிழ்த்தேசியம், மரபு வழித்தாயகம், சுயநிர்ணய உரிமை என தலைப்பிடப்பட்டிருந்த துண்டுப் பிரசுரங்களை அவள் விநியோகித்த படியிருந்தாள். விழிகள் சுற்றும் முற்றும் எவரையோ தேடிக் கொண்டிருந்தன.

சென்ற ஒன்றி ரண்டு மணி நேரமாக வளாகத்தைச்சுற்றி வந்தாயிற்று. அமுதன் தென்படவேயில்லை.

இவனை இப்படியெங்காவது தான் சந்திக்க முடிகிறது. நாலு வார்த்தை பேசி மனம் நிறைய முடிகிறது. கொஞ்சம் சிணுங்கவும் வெட்கப்படவும் முடிகிறது. அன்றைக்கு இரவு தூங்க முடிகிறது. "கள்ளன்" என்று அகிலா தன்பாட்டில் சொல்லிக் கொண்டாள்.

முதன்முதலாக சற்றுக் காலத்தின் முன்னர் ஒரு சந்திப்புக்காக, யாழ். மாவட்ட அரசியற்துறைக்காரரோடு இவன் பல்கலைக்கழகத்திற்கு வந்திருந்தான். மாணவர்களுக்கும் அவர்களுக்குமான கூட்டமாக அது ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அவர்களுக்கான கதிரைகள் முன்னால் போடப்பட்டிருந்தன. இவன் தனக்கான இருக்கையில் அமர்ந்திருக்கவில்லை. அங்குமிங்குமாக நோட்டமிட்டபடி திரிந்தான்.

குள்ளமான, அடர்த்தியான தும்புத்தடி மீசைக்காரர் ஒருவர் "இந்தச் சமாதானம் நிலைக்குமென்று நீங்கள் நினைக்கிறீங்களா?" என்று ஆரம்பித்தார்.

"ரணிலின்ரை நடவடிக்கைகள் நம்பிக்கையளிப்பதாகத் தானே தலைவர் பத்திரிகையாளர் சந்திப்பில் சொல்லியிருக்கிறார்" என்று மாணவனொருவன் எழுந்து சொன்னான். அப்பொழுது கைகளை அசைத்து அவனை உட்காரச் சொன்னவர் "அது ராஜதந்திர அறிவிப்பு" என்று சொன்னார். தொடர்ந்தும் நீண்ட நேரத்துக்கு சந்திப்பு நீண்டது.

இறுதியாக இவன் பேசத் தொடங்கினான். கொஞ்சம் பதற்றப்பட்டது போலத் தோன்றிற்று. "வணக்கம், நான் அமுதன்" என்று ஆரம்பித்தான். அதிகம் பேசவில்லை. முடிக்கும்போது "இதுவொரு அரசியல் போர். இதில சில அழுத்தங்களை நாங்கள் செய்யமுடியாது. நீங்கள் தான் செய்ய வேண்டும்" என்று முடித்தான். அப்பொழுது வியர்த்திருந்தான்.

அன்றைக்கு மாணவர்களை உள்ளடக்கிய செயற்பாட்டுக் குழுவொன்றை அவர்கள் அமைத்தபோது, எவரோ அகிலாவின் பெயரையும் அதற்குப் பரிந்துரைத்தார்கள். அவளுக்கு சற்று பெருமையாகவும் இருந்தது. அதற்கடுத்த நாள்களில் ஒன்றிரண்டு தடவைகள் அவளும் நண்பர்களும், இவனது பணியகத்திற்குப் போகவேண்டியிருந்தது. பிறிதொருநாள் அகிலா தனியே போகும்படியாய் அந்தச் சம்பவம் நிகழ்ந்தது.

அகிலாவுக்கு 'ஈவ் டீசிங்' என்ற வார்த்தை அவ்வளவு நெருக்கமானதாயிருக்கவில்லை. அவள் ஆனந்த விகடன், குமுதம் முதலான புத்தகங்களின் ஊடாகவே அந்த வார்த்தையை அறிந்து வைத்திருந்தாள். ஆயினும் அன்றைக்கு அந்த சம்பவத்தை 'ஈவ்டீசிங்' என்றே அவள் முறையிட்டாள்.

பல்கலைக்கழகத்துக்குச் செல்லும் வழியில் பெரும் மழையொன்று பெய்து ஓய்ந்திருந்த போதும் இலேசாகத் தூறியபடியிருந்தது. அகிலா சைக்கிளில் சென்று கொண்டிருந்தாள். அவளது நண்பிகளில் ஒரு சிலர் ஸ்கூட்டி வாங்கியிருந்தார்கள். சமாதானத்துக்குப் பின்னர் யாழ்ப்பாணத்துக் கடைகளிலேயே ஸ்கூட்டி வாங்கக் கூடியதாக இருக்கிறது. அகிலா ஒன்றிரண்டு தடவை ஸ்கூட்டி ஓட்டிப் பார்த்திருக்கிறாள். ஏறி உட்கார்ந்தபோது, அவளுக்குள் அடங்கி விடுவதான அளவில் அது இருந்தது. சீரான வேகத்தில் பயணம் இதமாக இருந்தது. அப்படியொன்றை வாங்கித்தரும்படி அப்பாவிடம் கேட்டிருக்கிறாள். அவள் கேட்டால் அவர் ஒருபோதும் மறுத்ததில்லை. இரண்டொரு மாதங்களில் கிடைத்துவிடும்.

மற்றுமொரு மழை பெய்யக்கூடும் எனத் தோன்றியதால் அகிலா குடையை ஏந்தியிருந்தாள். குண்டும் குழியுமான வீதிகளில் வெள்ளம் தேங்கி ஸ்கேர்ட்டில் தெறித்தபடியிருந்தது. அருகில் சென்ற வாகனங்களும் சேற்றை புளிச் புளிச்செென அள்ளித் தெளித்தபடியிருந்தன. ஒரு கையால் ஹாண்டிலைப் பிடித்த படி சேற்று நீரை விலத்தியபடி ஓடினாள். அப்பொழுதுதான் அவளுக்குப் பின்புறத்தே முதுகுச் சட்டையில் சுளீரென்று உறைக்குமாற் போல ஐந்து முரட்டு விரல்கள் அழுத்தமாக பதிந்து கீழ் நோக்கித் தடவி விலகின.

**(வலிகள் இன்னும்...)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# தேவையா இந்த விளம்பரம்?

ஆதங்கன்

"எங்கள் தலைவன் வருவதைத் தடுக்காதே" என்ற கோசத்தோடு கையில் ரஜினிகாந்தின் படத்தை வைத்துக் கொண்டு, யாழ்ப்பாணத்தின் நல்லூரில் இருநூற்றைம்பது பேருக்கும் அதிகமானோர் ஆர்ப்பாட்டம் செய்வார்கள் என்று யாரேனும் கனவு கூட கண்டதுண்டா? கனவில் கூட காணக்கிடைக்காத அந்த அரிய காட்சியை கடந்த திங்கட்கிழமை காணும் பாக்கியம் பலருக்கும் கிடைத்தது. "ஈழத்துக் கலைஞர்கள்" என்ற அடைமொழியோடு "ரஜினி வருவதை தடுத்தமையைக் கண்டித்து " நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் அனைவருமே அப்பாவி மக்கள். ஏன் வந்தோம், எதற்கு கொண்டுவரப்பட்டு இப்படி சுலோகங்களை ஏந்தியிருக்கிறோம் என்பது கூட அவர்களில் பலருக்கும் தெரிந்திருக்கவில்லை. அவர்கள் செய்த குற்றமெல்லாம் போர் நிகழ்ந்த பூமியில் பிறந்ததும், அந்த போரால் எல்லாவற்றையும் இழந்து பிறர் கையை எதிர்பார்க்குமளவுக்கு பொருளாதாரத்தில் நலிந்து போனதும் தான்.

போரால் பாதிக்கப்பட்ட 150 குடும்பங்களுக்கு ஞானம் அறக்கட்டளை நிறுவனத்தால் வவுனியாவில் வீட்டுத்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதற்கான பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு, வீடுகளும் அவர்களுக்கான காணிகளில் கட்டி முடிக்கப்பட்டு விட்டன். இந்த நிலையில் தான் "தென்னிந்திய சுப்பர் ஸ்ரார் ரஜினிகாந்த் அந்த வீட்டுத்திட்டத்தின் திறப்புகளை பயனாளிகளுக்கு கையளிக்கவுள்ளார்" என்ற அறிவிப்பை லைக்கா நிறுவனம் வெளியிட்டது. ஞானம் அறக்கட்டளையால் அமைக்கப்பட்ட வீடுகளுக்கும் , ரஜினிக்கும் , லைக்காவுக்கும் என்ன தொடர்பு? என்று பலரும் குழம்பலாம். அப்படி குழம்புபவர்களுக்கு அண்மைக்கால சினிமா செய்திகள் தெரியவில்லை என்றே அர்த்தப்படுத்த முடியும்.

பிரிட்டனில் கொடிகட்டிப் பறக்கும் லைக்கா தொலைபேசி வலையமைப்பு நிறுவனத்தின் உரிமையாளர் ஒரு ஈழத்தமிழர். ஆரம்பத்தில் தொலைபேசித்துறையில் காலடியெடுத்து வைத்த லைக்கா, பின்னர் தமிழ் சினிமா படங்களை தயாரிக்கும் பணியிலும் இறங்கியது. நடிகர் விஜய் நடிப்பில் வெளிவந்த "கத்தி" திரைப்படம் லைக்காவின் தயாரிப்பே. ஆனால் லைக்காவுக்கும் , இறுதிப்போரில் ஈழத்தமிழர்களைக் கொன்று குவித்த ஆட்சியாளரான மஹிந்தவுக்கும் நெருங்கிய தொடர்புகள் இருப்பதாக அப்போது சர்ச்சைகள் எழுதிருந்தன. லைக்கா உரிமையாளரும், அந்த நிறுவன அதிகாரிகளும் இலங்கையின் பல்வேறு பகுதிகளுக்கும் இலங்கை விமானப்படையின் ஹெலிகொப்ரர்களில் பறந்து திரிந்த புகைப்படங்கள் இணையங்களில் வைரலாக, லைக்கா நிறுவனத்துக்கான எதிர்ப்பு தமிழகத்தில் சுனாமியானது. இந்த எதிர்ப்புக்காரணமாக "கத்தி" திரைப்படம் அறிவிக்கப்பட்ட நாளில் வெளிவருவது சந்தேகமானதாக மாறியது. எனினும் பின்னர் திரைப்படத்தில் லைக்கா நிறுவனத்தின் பெயரும், அவர்களின் வியாபாரக் குறியீடும் இடம்பெறக்கூடாது என்ற நிபந்தனையோடு படத்தை வெளியிட தமிழக அமைப்புகள் இணங்கின. ஆயினும் இலங்கையிலும், புலம்பெயர் நாடுகளிலும் கத்தி திரைப்படம் லைக்கா நிறுவனத்தின் அடையாளத்தையும், பெயரையும் தாங்கியே வெளியானது.

அதன் பின்னர் லைக்காவையும் மஹிந்தவையும் தமிழக மக்கள் மறந்து போனார்கள். இந்த மறதியின் காலத்தைப் பயன்படுத்திக் கொண்ட லைக்கா இந்த முறை இன்னும் பலமாக தமிழக சினிமாவில் காலூன்ற நினைத்தது. சுப்பர் ஸ்ரார் ரஜினிகாந்த், இயக்குநர் ஷங்கர், ஹிந்தி நடிகர் அக்சய் குமார் என இந்திய சினிமாவின் அதியுச்ச நட்சத்திரங்களுடன் களமிறங்கியது. ஏற்கனவே வெளிவந்து வெற்றி பெற்ற "எந்திரன்" திரைப்படத்தின் இரண்டாம் பாகமாக இந்தப் படம் "2.0" என்ற பெயரில் தயாராகி, இப்போது வெளியீட்டை நெருங்கியிருக்கிறது. இந்த நிலையில் தான் லைக்கா நிறுவனத்தின் உப நிறுவனமான "ஞானம் அறக்கட்டளை" மூலம் போரால் பாதிப்புற்றோருக்கான 150 வீடுகளும் கட்டி முடிக்கப்ப்பட்டிருந்தன. 'கத்தி' பட வெளியீட்டின் போதிருந்த எதிர்ப்பலை அடங்கியிருந்ததால், இம்முறை "2.0" படத்துக்கு பரபரப்பான "இலவச விளம்பரங்கள்" எதுவும் கிடைக்காது என்று லைக்காவுக்கு புரிந்தது. அதனால் ரஜினியை வைத்து ஒரு நாடகத்தை அரங்கேற்றியது.

"150 வீடுகளையும் கையளிக்க ரஜினி இலங்கை வருகிறார்" என்ற செய்தி உலகெங்கும் பரவியது. சமூக வலைத்தளங்களில் ரஜினியின் வருகையை எதிர்த்தும் ஆதரித்தும் பதிவுகள் இறக்கை கட்டிப் பறக்கத் தொடங்கின. தமிழகத்திலும் அடங்கிக் கிடந்த லைக்கா எதிர்ப்பும் புத்துயிர் பெற்றது. பிறகென்ன , லைக்கா நினைத்தது போல ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக குரலெழுப்பும் திருமாவளவனும், வேல்முருகனும் " ரஜினி இலங்கைக்கு போகக் கூடாது" என்று போர்க்கொடி தூக்கினார்கள். மஹிந்தவுடன் மறைமுகமாக கைகோர்த்த ஒரு நிறுவனத்தின் சார்பில் போரால் வெந்த மக்களைப் பார்க்க செல்வது அந்த மக்களை இன்னும் வேதனைப்படுத்தும் என்பதே அவர்களின் வாதம். இந்த நிலையில் திடீரென ரஜினிதரப்பில் ஒரு அறிக்கை வெளியானது. "புனிதப்போர் நிகழ்ந்த மண்ணுக்கு சென்று அங்கு மாவீரகளினதும், மக்களினதும் சுவாசத்தை நானும் சுவாசிக்க விரும்பினேன். இலங்கை ஜனாதிபதி மைத்திரியைச் சந்தித்து இந்திய மீனவர்களை இலங்கைக் கடற்படை தாக்குவது குறித்த எனது கண்டனத்தை தெரிவிக்க விரும்பினேன். ஆனால் இப்போது திருமாவளவன், வேல்முருகன் ஆகியோரின் அன்புக் கோரிக்கைக்கு அமைவாக இலங்கைப் பயணத்தை கைவிடுகிறேன். ஆனால் இன்னொரு சந்தர்ப்பத்தில் நான் இலங்கை மக்களை பார்க்கச் செல்லும் போது இது போல தடை போடமால் இருங்கள்" என்ற சாரப்பட அந்த அறிக்கை அமைந்தது.

உண்மையில் லைக்கா நிறுவனம் நினைத்திருந்தால் ரஜினிக்கு மனம் இல்லாவிட்டாலும் இலங்கைக்கு வந்துதான் ஆகவேண்டும். "2.0" படத்தில் நடிப்பதற்காக ரஜினிக்கு கொடுத்த சம்பளத்துக்காக அவர் இலங்கைக்கென்ன, சோமாலியாவுக்கு கூட "வா" என்று லைக்கா அழைத்தால் போகத்தான் வேண்டும். இப்படி அறிக்கையெல்லாம் விட்டு வரமாட்டேன் என ரஜினி அடம்பிடிக்கவும் முடியாது. உண்மையில் ரஜினியின் இலங்கைப் பயண அறிவிப்பு, போராட்டம், கைவிடுகை என்பனவெல்லாம் லைக்காவின் நாடகம் தான். ஏனெனில் இன்னும் சில வாரங்களுக்கு ரஜினியும் இலங்கைப் பயணமும் தான் பிரதான பேசுபொருளாக இருக்கப் போகின்றன. இதுதான் லைக்காவுக்கு வேண்டும். இந்த சர்ச்சையை வைத்தே "2.0" படத்துக்கான விளம்பரத்தை இலகுவாக அது செய்துவிடும். ரஜினி இலங்கைக்கு செல்லப்போகிறார் என்று அறிவிக்கும் போதே, அந்தப் பயணத்துக்கு இலங்கையிலும் தமிழகத்திலும் கடும் எதிர்ப்புக் கிளம்பும் என லைக்காவுக்கு நன்கு தெரிந்தே இருந்தது. அந்த நிறுவனம் விரும்பியதும் இத்தகைய எதிர்ப்பைத்தான். இதெல்லாம் விளம்பரப்படுத்தல் உத்திகள். வணிக உலகில் இவையெல்லாம் சகஜம். ஆனால் இதற்குப் பின்னர் லைக்கா நிறுவனம் நடந்து கொண்ட விதம் தான் அநாகரீகத்தின் உச்சமாக அமைந்தது.

தன் விளம்பரப்படுத்தலின் தகிப்பை இன்னும் அதிகரிக்கச் செய்வதற்காக மிகக் கேவலமான ஒரு வேலையில் அந்த நிறுவனம் இறங்கியது. கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு அவசர அவசரமாக யாழ்ப்பாண நகரைச் சுற்றிலும் மிகப்பெரிய வர்ணச் சுவரொட்டிகள் பரவலாக ஒட்டப்பட்டன. சுவரொட்டிகள் அச்சிட்ட செலவு, ஒட்டியவர்களுக்கான கொடுப்பனவு, உணவு, மதுபானம் என எல்லாமாக 5 லட்சம் ரூபாவுக்கும் அதிகமான தொகை கரைக்கப்பட்டது. அப்படி ஒட்டப்பட்ட சுவரொட்டிகளில் அடுத்த

(19ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்தவார சமூக இணையத் தரவரிசை

## 1 சட்டை கிழிந்த ரஜினியும் லைக்காவும்




ரஜினிகாந்த் இலங்கை வருகை தொடர்பான அறிவிப்பும், இதைத் தொடர்ந்து எழுந்த எதிர்ப்புக்களால் பயணத்தை நிறுத்திய அறிவிப்பும் கடந்தவாரம் சமூக வலைதளங்களில் தீயாய் பரவியது.

ரஜினியின் வருகை ரத்தானமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து யாழ்ப்பாணம் முழுவதும் "வடக்கு ஈழத்து கலைஞர்கள்" என்ற பெயரில் அநாமதேயமானவர்கள் ஒட்டிய போஸ்ரர்களும், நல்லூரில் கூலிக்கு வந்தவர்களால் செய்யப்பட்ட ஆர்ப்பாட்டங்களும் எரிந்து கொண்டிருந்த தீயை மேலும் வளர்த்தன.

சில சமூகவலைத் தளக்காரர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் பேசி அவர்களின் தடுமாற்றமான, பொருந்தாத பதில்களை பதிவேற்றி அவர்களின் உண்மை முகத்தை தோலுரித்துக் காட்டியிருந்தனர்.

ரஜினி, அவரரை அழைத்து வரத் தயாரான லைக்கா நிறுவனம் ஆகியவை தொடர்பிலும் தாறுமாறான பதிவுகள் பறந்தன. லைக்கா நிறுவனத்தின் வியாபார தந்திரம், பிற்போக்குத்தனம் குறித்தும் கருத்துக்களை பதிய பலர் தவறவில்லை. சிலர் ரஜினிக்கும் லைக்கா நிறுவனத்துக்கும் ஆதரவான பதிவுகளை பதிவு செய்தமையும் ஆச்சரியமே.

கடந்த வாரம் சமூக வலைதளப் பதிவர்களுக்கு தீனி போட்டு ரஜினியும் லைக்காவும் சட்டை கிழிந்ததுதான் மிச்சம்.

## 2 ஓ.எல். பரீட்சை பெறுபெறு




ஓ.எல். பரீட்சை பெறுபேறுகள் செவ்வாய் நள்ளிரவு வெளியாகின. அடுத்த கணத்திலிருந்தே அவை தொடர்பான பதிவுகளும் சமூக வலைதளங்களில் உலாவத் தொடங்கி விட்டன.

ஓ.எல். பரீட்சைக்கு தோற்றியவர்கள், பரீட்சையில் நல்ல பெறுபேறு பெற்ற சகோதரர்கள், உறவினர்கள், நண்பர்களுக்கான வாழ்த்துக்கள் அவர்களின் பெறுபேறுகளுடன் பகிரப்பட்டன. கூடவே அவர்கள் தொடர்பான குறிப்புக்களையும் பதிவிட சமூக வலைதளக்காரர்கள் மறக்கவில்லை.

சில நண்பர்கள் தாங்கள் ஓ.எல். பரீட்சைக்கு தோற்றியபோது நடந்த சம்பவங்களையும், தங்களின் சிறந்த பெறுபேறுகளையும் இதுதான் சந்தர்ப்பம் என்று பதிவிடத் தவறவில்லை.

## 3 அடிவாங்கிய சிங்கம்




நீண்ட காலத்துக்குப் பின்னர் விளையாட்டு அதுவும் கிரிக்கெட் போட்டி தொடர்பில் சமூக வலைதளங்களில் அதிக பதிவுகள் கடந்த வாரம் பதியப்பட்டன.

பங்களாதேஷ் அணியிடம் இலங்கை அணி பெற்ற மோசமான தோல்வியே இந்தப் பதிவுகள் பகிரப்பட முக்கிய காரணம். பொதுவாக இந்தியா - இலங்கை மோதும்போது இரு அணி ரசிகர்களும் கடுமையாக மோதிக் கொள்வார்கள். இலங்கை அணி பங்களாதேஷிடம் வாங்கிய மரண அடியை இந்திய ரசிகர்கள் மகிழ்ச்சியுடன் கொண்டாடி பதிவுகளை இட்டார்கள்.

இலங்கை ரசிகர்களும் அவர்களை விடவில்லை பதிலுக்கு அவர்கள் முன்னர் வாங்கிய படுதோல்வி ஆட்டங்களை பகிர்ந்து கொண்டார்கள். சிலர் சிங்கம் மீண்டும் எழும் என்று பழைய போட்டிகளை உதாரணம் காட்டி நம்பிக்கை "ரொனிக்" கொடுத்தார்க்ள். இலங்கை அணிக்கு அதிக ஆதரவு கொடுத்து சமூக வலைத் தளங்களில் பேசுபவர்கள் சிலர் முகநூல் பக்கம் வருவதை நிறுத்திக் கொண்டுவிட்டார்கள்.

## இந்தவார மீம் (Meme)



தமிழ்நாட்டில் என்ன நல்லகாரியம் செய்து
விட்டாய் என்று
தமிழீழம் போக தயாரானாய்?




## • சுவரில் கொய்தவை •

Vigneswaran Kajeepan

கூலிக்கு மாரடிக்கும் குத்தகைக்காரர்களாக மாறுகின்றார்களா தமிழர்கள்?
மகிந்த பாணியில் ஏமாற்றி அழைத்துவரப்பட்டவர்களை கேள்விகளால் வதைத்து எடுத்த யாழ்முற்போக்கு இளைஞர்கள்

கோங்காதரன் மயூரன்

என் வாழ்க்கை ஒரு பெண்ணிடம் தோற்று...
கேள்விக்குறியாக முற்றுப்பெறும் என்று கனவிலும் கூட நினைத்ததில்லை...

Aniss Thushyan

நேரம் ஆகிடிச்சு தூங்குவம் என்பவன் மனிதன். தூக்கம் வந்திடிச்சு துங்குவம் என்பவன் மகிழ்ச்சியான மனிதன்.

Appu Piratheepan

ரஜினி இன்னும் தன்னை பாட்ஷாவாக நெனைச்சிட்டு இருக்காரு போல
லிங்காவாக மாறி ரொம்பவருஷமாச்சு.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுவிதி
PUTHU VITHI

தொடர்புக்கு:
ஆசிரிய பீடம் : 021 493 7777
விநியோகம் : 021 492 7470
விளம்பரம் : 021 492 7466

107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
puthuvithi@gmail.com

## தொடரவேண்டும் பெறுபேற்று அறுவடை

கடந்த வாரம் க.பொ.த சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியிருந்தன. அண்மைய வருடங்களாக பெரும்வீழ்ச்சியைச் சந்தித்திருந்த வடக்கு மாகாண கல்வித் துறைக்கு இந்தப் பெறுபேறுகள் மீளெழுச்சியைக் கொடுத்திருக்கின்றன. முன்னரெல்லாம் அத்தி பூத்தாற்போல அங்கொன்றும் இங்கொன்றுமாகப் பெறப்பட்டிருந்த 9ஏ பெறுபேறுகள் இம்முறை அநேக பாடசாலைகளில் தாராளமாகவே அறுவடை செய்யப்பட்டிருக்கிறது. அதிலும் யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் 52 மாணவிகள் சகல பாடங்களிலும் ஏ சித்தியையும், 58 மாணவிகள் 8ஏ சித்தியையும் பெற்றதோடு அந்த கல்லூரியில் இருந்து க.பொ.த. சாதாரண தர பரீட்சைக்கு தோற்றிய 240 மாணவிகளும் உயர்தரத்தை கற்பதற்குரிய அடைவை எட்டியிருக்கிறார்கள். உண்மையில் இதுவொரு மகத்தான கல்விச்சாதனைதான்.

வேம்படி மகளிர் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி என்பன "தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த திறமையான மாணவர்களை மட்டுமே வடிகட்டி எடுப்பதால்தான் இப்படி ஏ சித்திகளில் அமோக விளைச்சலைப் பெற முடிந்திருக்கிறது" எனச் சொல்கிறார்கள். அவர்கள் சொல்வது ஒருவகையில் உண்மையெனினும், இன்னொரு வகையில் தவறானதாகவே இருக்கிறது. என்னதான் திறமையான மாணவர்களை தரம் 6 இற்குள் உள்வாங்கினாலும் அந்த மாணவர்களின் திறமையை மேலும் புடம்போடும் வல்லமை எல்லோருக்கும் வாய்க்காது. புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றுவிட்டதால் சில மாணவர்கள் தங்களால் எல்லாப் பரீட்சைகளிலும் 'பாஸ்' பண்ண முடியும் என்ற எண்ணம் வந்து, படிப்பைக் கோட்டைவிட்ட சந்தர்ப்பங்கள் பலவுண்டு. எனவே என்னதான் வடிகட்டி மாணவர்களை உள்வாங்கினாலும் அவர்களின் திறமைகளை மங்கவிடாது அதனை இன்னும் கூர்மையாக்கியமையாலேயே இப்படி யான உயர் பெறுபேறுகளை அடைய முடிந்திருக்கிறது.

உயர்தரப் பெறுபேறு போல சாதாரண தரப் பெறுபேறுகள் பல்கலைக்கழக அனுமதியைத் தீர்மானிக்கும் போட்டிப் பரீட்சையாக இல்லாவிடினும், என்ன பாடத்துறையை தெரிவு செய்ய வேண்டும் என்பதை முடிவு செய்பவையாக இருக்கின்றன. இந்த முடிவுதான் அவர்களின் எதிர்காலம் எந்தத் திசை நோக்கிப் பயணிக்கப்போகின்றது என்பதை கோடிகாட்டி நிற்கும். சாதாரண தரத்தில் உயர் பெறுபேறுகளை எடுத்த மாணவர்கள், தவறான பாடத்தெரிவாலும், அக்கறையின்மையாலும் உயர்தரத்தில் சாதிக்கத் தவறும் சந்தர்ப்பங்கள் பல நிகழ்ந்துள்ளன. எனவே சாதாரணதரத்தில் 9ஏ எடுத்துவிட்டோம்தானே என்ற அலட்சியத்தை விடுத்து, இந்த 9ஏ பெறுபெற்றை பெறுமதியான ஒன்றாக மாற்றுவதற்காக பாடுபடவேண்டும். இப்போது எப்படி பெறுபேற்றில் அமோக அறுவடையைப் பெற்றுக் கொடுத்தீர்களோ அதை உயர்தரத்தில் பன்மடங்காகக்க அக்கறையோடு கல்வியைத் தொடருங்கள்.

தனியே 9ஏ எடுத்தவர்கள் மட்டும்தான் உயர்தரத்தில் சிகரம் தொடுவதில்லை. அடிப்படை பெறுபேற்றோடு உயர்தரத்துக்கு தகுதியான பலர் உயர்தரத்தில் சாதித்து பல வெற்றிகளை ஈட்டியுள்ளார்கள். அத்தோடு இம்முறை பரீட்சையில் சித்தி பெறத் தவறியவர்கள் 'இத்தோடு எங்கள் கல்வி முடிந்தது' என அப்படியே இருந்துவிட வேண்டாம். இன்னும் முயலுங்கள். இம்முறை கிட்டாத வெற்றிக்கனியை அடுத்த முறையேனும் எட்டிப் பறிக்க தீவிரமாக உழையுங்கள். முயற்சி திருவினையாக்கும். ஒருபோதும் முயற்சியை மட்டும் இழக்கவேண்டாம்.

சார்ந்தோர் அனைவருக்கும் வாழ்த்துக்கள்..!

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'



# அஸ்தமன அவகாசம்

**வர்சி**

அனைவரும் எதிர்பார்த்ததைப் போலவே போர்க்குற்றம், பொறுப்புக்கூறல் அத்துடன் ஐ.நாவுடன் இணங்கிய விடயங்களுக்கு தீர்வு காணும் வகையில் இலங்கை அரசாங்கத்திற்கு இரண்டு வருடகால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த இரண்டு வருடகாலப் பகுதியில் ஐ.நாவுக்கு அளித்த அல்லது இணங்கிய விடயங்களை இலங்கை அரசாங்கம் அமுலாக்கவேண்டும்.

சர்வதேசம் இலங்கை அரசாங்கத்தை நம்புகிறதோ இல்லையோ தமிழ் மக்கள் அரசாங்கத்தை நம்பத் தயாராக இல்லை. ஏனெனில் இலங்கையில் ஆட்சிக்கு வரும் அரசாங்கங்கள் ஒவ்வொன்றும் அளிக்கும் வாக்குறுதிகள் அனைத்தும் காற்றில் பறந்ததே வரலாறு. தற்போது கூட அரசாங்கம் ஐ.நாவில் ஒரு கதையையும் நாட்டில் ஒரு கதையையுமே பேசி வருகிறது. தனது ஆட்சிக்கு நெருக்கடி ஏற்படும்போதெல்லாம் யாருடைய காலிலும் விழத் தயாராக உள்ள அரசாங்கம் அந்த நெருக்கடி தணிந்ததும் அதனை அப்படியே மறந்துவிடும். இதுதான் கடந்தகால வரலாறு.

அண்மையில்கூட கலப்பு நீதிமன்றம், வெளிநாட்டு நீதிபதிகள் பங்கேற்பு தொடர்பில் சர்வதேசம் கோரியவேளை, யாழ்ப்பாணம் வந்த ஜனாதிபதி மைத்திரி, பலாலியில் படையினர் மத்தியில் உரையாற்றியபோது -

"இதற்கெல்லாம் தான் மறுப்புத் தெரிவித்து, தனது முதுகெலும்பை சர்வதேசத்திற்கு காட்டிவிட்டதாக" தெரிவித்திருந்தார். பிரதமர் ரணிலும் கலப்பு நீமன்றம் அமைக்கப்படாது என்கிறார். அதேபோன்று யாழ்ப்பாணம் வந்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா அம்மையாரும் "நாட்டை மீட்ட இராணுவத்தை நாங்கள் ஒருபோதும் காட்டிக்கொடுக்கமாட்டோம்" என்கிறார்.

இதைவிடச் சுதந்திரக்கட்சியின் அமைச்சர் பைசர் முஸ்தபாவோ "போர்க்குற்றம் என்ற ஒன்றே இடம்பெறவில்லை பிறகேன் விசாரணை?" என்கிறார். இவ்வாறு ஜனாதிபதி முதற்கொண்டு அமைச்சர்கள், படைஅதிகாரிகள் மற்றும் தீவிர பௌத்த இனவாதிகள் வரை யாருமே தமிழருக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை விசாரிக்கத் தயாராகவில்லை. மாறாக புலிகளே போர்க்குற்றம் புரிந்தனர் என்று ஜெனிவாவில் ஐ.நாவிற்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்கள்.

ஆனால் தமிழர் மீதான படையினரின் போர்க்குற்றங்கள் தொடர்பாகக் காத்திரமான அறிக்கையை அளிக்கத் தமிழர் பிரதிநிதிகள் தவறவிட்டதோடு, கால அவகாசத்தையும் வரவேற்றுள்ளார்கள்.

இவ்வளவு காலமும் இலங்கை அரசுக்கு வழங்கப்பட்ட கால அவகாசத்தில் எதனை ஆட்சியாளர்கள் சாதித்தார்கள்" என்ற கேள்விக்குப் பதில் இல்லை. இராணுவத்தினர் ஆக்கிரமித்துள்ள தமது காணிகளை விடுவித்து தம்மைத் தமது சொந்த நிலங்களில் குடியமர்த்துமாறு மக்கள் போராட்டங்களை மாதக்கணக்கில் நடத்திவருகின்றனர். ஆனால் அமைச்சர் சுவாமிநாதனோ கேப்பாபுலவில் தமது காணிக்காக போராடும் மக்களுக்கு "இரண்டு நாட்களில் தீர்வு" என்று சொல்லி நாட்கள் வாரங்களாகி, வாரங்கள் மாதங்களாகவும் போகின்றன.

அதேபோன்று காணாமற் போனோரின் உறவுகள் நடத்தும் போராட்டத்திற்கும் எவரும் தீர்வு கொடுப்பதாக இல்லை. மாறாக அரசியல்வாதிகள் எல்லோரும் தமிழரின் துயரில் அவர்கள் குளிர் காய்ந்து கொண்டும் அரசியல் செய்து கொண்டும் இருக்கிறார்களே தவிர தமிழருக்குத்தான் எவ்வித தீர்வும் கிடைப்பதாக தெரியவில்லை. அதேபோன்றுதான் அரசியல் கைதிகளின் விடுதலையும்.


இறுதிப்போரின் போது போர்க்குற்றங்களில் படையினர் ஈடுபடவேயில்லை என்று எந்த அடிப்படையில் அரசு கூறுகிறது? போர்க்குற்றங்கள் இடம்பெறவில்லையெனில் வீதிக்கு வீதி நாயைச் சுடுவதுபோல் தமிழ் இளைஞர், யுவதிகள் கொல்லப்பட்டது பொய்யா? காணாமல் ஆக்கப்பட்டவர்கள் மற்றும் வெள்ளைவான் கடத்தல்கள் எல்லாம் சோடிக்கப்பட்ட கதைகளா ?

இதேவேளை ஒரு நாட்டின் இராணுவம் விரும்பினால் கூலிப்படையை உருவாக்கலாம் என்றும் எனினும் தனது காலத்தில் அப்படி உருவாக்கப்படவில்லை என்றும் கோத்தபாய கூறியுள்ளார். இப்படி அவர் கூறியதன் மூலம் மறைமுகமாக கொலைகார கூலிப்படையை இராணுவத்தின் மூலம் அரசு ஏவியிருப்பது புலனாகின்றது. ஆனால் இதையெல்லாம் அரசு கண்டுகொள்ளவோ, அந்தக் கூலிப்படை குறித்து விசாரணை செய்யவோ இல்லை. வாஸிம் தாஜூதீன் கொலை வழக்கில் போதிய ஆதாரங்கள் கிடைத்த பின்னும் பூனை போல கண்ணை மூடிக் கொண்டிருக்கும் அரசு கோத்தபாயவை போர்க்குற்றம் தொடர்பில் விசாரிக்கும் என நினைப்பதை விட முட்டாள்தனம் வேறோன்றுமில்லை.

தற்போது இன்னும் இரண்டு வருட கால அவகாசம் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி மைத்திரி தனது ஆட்சிக்காலத்தின் மூன்றாவது வருடத்தில் உள்ளார். இன்னும் மூன்று வருடங்கள் தான் அவரது ஆட்சிக்காலம் மிச்சமாகவுள்ளது. வாய்க்கு வாய் தமிழரால்தான் அதிகாரத்திற்கு வந்ததாக கூறும் மைத்திரிபால தனது அதிகாரம் அஸ்தமிக்க முன்னராவது தமிழர்களுக்கு ஏதும் நன்மைகளை பெற்றுத்தருவாரா?

K


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எழுத்தே எல்லாமுமாக...

■ மணிகண்டன்

## அசோகமித்திரன் - சில குறிப்புகள்



அப்பாவை மருத்துவமனையில் சேர்த்த பிறகு மருத்துவர்கள் நம்பிக்கையிழந்திருந்த தருணத்தில் கடவுளிடம் மனமுருகி வேண்டியது ஒன்றுதான் - 'ஒருவேளை அவரை எடுத்துக் கொள்வதாக இருந்தால் தூக்கத்திலேயே வலியில்லாமல் எடுத்துக் கொள்' என்றேன். அப்படியேதான் நடந்தது. இதை யாரிடமும் சொல்லாமல் உள்ளுக்குள்ளேயே வைத்துக் கொண்டேன். நாம் வேண்டுவதற்கு கடவுள் செவி மடுக்கும் போது 'அப்பாவைக் காப்பாற்று' என்றுதான் வேண்டியிருக்க வேண்டுமோ என்று குற்றவுணர்ச்சியும் கூட இருந்தது. எல்லாம் முடிந்த பிறகு எடுத்துச் சென்று எரித்துவிட்டு வந்த போது மனதுக்குள் வெறுமை குடி கொண்டிருந்தது. எவ்வளவு நாட்களுக்குத்தான் வெறுமையுடனேயே சுற்றுவது? வெளி வந்துதானே ஆக வேண்டும்.

ஊரில் இருக்கும்போது அப்பா பெங்களூரில் இருப்பதாக நினைத்துக் கொள்வேன். பெங்களூரு வந்த பிறகு அப்பா ஊரில் இருப்பதாக நினைத்துக் கொள்வேன். இன்றைக்கு வரைக்கும் அப்பா பிரிந்துவிட்டதாகவே நினைப்பதில்லை. ஏதாவதொரு சமயத்தில் மட்டும் அப்பா நம்மிடம் இல்லை என்கிற எண்ணம் வருவதுண்டு. ஆனால் பூபதி ராஜா என்கிற நண்பர் அப்பா இறந்த இரண்டாவது தினத்தில் அழைத்து 'ஆன்மா இங்கதான் இருக்கும்...சினிமா மாதிரி பேய், பிசாசு, கடவுள் என்றெல்லாம் இல்லை...நம்மைச் சுற்றி இருக்கிற மாதிரியே இருக்கும்' என்றார். உண்மையிலேயே அது மிகப் பெரிய ஆறுதல். நம்முடன்தான் இருக்கிறார் என்கிற ஆசுவாசத்தை அதுதான் கொடுத்தது.

எழுத்தாளர் அசோகமித்திரன் இறந்துவிட்டதாகக் கேள்விப்பட்ட போது சட்டென்று ஒரு முள் இடறியது போல இருந்தது. அதோடு சரி. எப்படி யோசித்துப் பார்த்தாலும் அவரது எழுத்துக்களும் படைப்புகளும் கொண்டாட்டத்திற்கானவை. தமது எண்பத்தைந்து ஆண்டு கால வாழ்க்கையில் எவ்வளவு எழுத வேண்டுமோ அவ்வளவு எழுதிவிட்டுச் சென்றிருக்கிறார். பூர்த்தியான வாழ்க்கை. பூங்கிழவனாக மாறிய பிறகு பூ உதிர்வது போல விழுந்திருக்கிறார். உடனடியாக ஒப்பாரி வைத்து அந்த மாபெரும் மனிதனுக்கு கண்ணைக் கசக்க வேண்டியதில்லை எனத் தோன்றியது.

அ.மியை இரண்டு முறை நெருக்கமாகவும் ஒரு முறை சற்றே தள்ளியும் சந்தித்திருக்கிறேன். முதன் முறையாக ஹைதராபாத்தில். அப்பொழுது அசோகமித்திரனின் மகன் அங்கேயிருந்தார். மறைந்த எழுத்தாளர் எஸ்.வி.ராமகிருஷ்ணனும் அ.மியும் காரில் பின்பக்கமாக அமர்ந்து கொண்டார்கள். அவர்கள் இருவரும்தான் பேசினார்கள். நான் முன்பக்க இருக்கையில் அமர்ந்து திரும்பிப் பார்த்து அவர்கள் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்தேன். இரண்டாம் முறையாக அவரைச் சென்னையில் சந்தித்தேன். அப்பொழுது வெகு நெருக்கத்தில் சந்தித்தேன் என்றாலும் அதிகம் பேசிக் கொள்ளவில்லை. அப்பொழுது எஸ்.வி.ராமகிருஷ்ணன் மறைந்துவிட்டார். 'அவர் போய்ட்டாரு.. அடுத்து நான் எப்போன்னு தெரியல' என்று சிரித்தார். அதைச் சிரிப்பு என்று சொல்ல முடியாது. அவரது புன்னகையில் எப்பொழுதும் மெல்லிய சோகம் நிறைந்திருப்பதாகவே தெரியும். மூன்றாவது முறையாக காலச்சுவடு நடத்திய நிகழ்ச்சியொன்றில் சில வினாடிகள் பார்க்க முடிந்தது.

'ஞாபகமிருக்கா சார்?' என்ற போது அவருக்குத் தெரியவில்லை. பெயரைச் சொல்லி ஹைதராபாத்தில் சந்தித்திருக்கிறோம் என்ற போது நினைவுபடுத்திக் கொண்டார்.

இடைப்பட்ட காலத்தில் அவரது பதினெட்டாவது அட்சக்கோடு நாவலுக்கு முன்னுரை எழுதும் வாய்ப்பு எனக்குக் கிட்டியிருந்தது. அந்த வாய்ப்புதான் எழுத்தைப் பொறுத்தவரையிலும் எனக்குக் கிடைத்த மிகப்பெரிய அங்கீகாரம் என நம்புவதுண்டு. அந்நாவலின் களம் ஹைதராபாத்தும்-செகந்திராபாத்தும். அந்த ஊருடன் நேரடித் தொடர்பில் இருந்ததால் முன்னுரை எழுதச் சொன்னார்கள் என நினைக்கிறேன். எழுதிக் கொடுத்த பிறகு அதை புத்தகத்திலும் இணைத்துவிட்டார்கள்.

'உங்க பேரைச் சொன்னாங்க.. ஹைதராபாத்தில் நாம பார்த்தது ஞாபகம் வரலை...நீங்க ரொம்பச் சின்னப் பையனா இருப்பீங்கன்னு நினைக்கல' என்றார். இதற்கு என்ன பதில் சொல்ல வேண்டும் என்று தெரியவில்லை. அ.மி அப்படித்தான் - மனதில் நினைப்பதை அப்படியே சொல்லிவிடுவார். ஒரு குழந்தை தன்மையை அவரது பேச்சிலும் செய்கையிலும் உணர முடியும்.

'இப்போ எங்க இருக்கீங்க?' என்றார்.

'பெங்களூரு சார்' என்றேன். 'சிக்க வீர ராஜேந்திரன் படிச்சிருக்கீங்களா? படிக்கலைன்னா படிங்க' என்றார்.

அசோகமித்திரன் இறந்துவிட்ட செய்தியைக் கேள்விப்பட்ட பிறகு இரண்டு நாட்களாக அந்த நாவலைத்தான் வாசித்துக் கொண்டிருக்கிறேன். *1956* ஆம் ஆண்டில் மாஸ்தி வெங்கடேச அய்யங்காரால் கன்னடத்தில் எழுதப்பட்டு தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட நாவல் அது. குடகு, மடிகேரி, பெங்களூரு எல்லாம் நாவலின் களம். "பெங்களூரில் இருக்கிறேன்" என்று சொன்னதனால் வாசிக்கச் சொல்லியிருக்கக் கூடும். நாவலை முடித்துவிட்டு மீண்டுமொருமுறை பதினெட்டாவது அட்சக்கோடு நாவலை வாசிக்க வேண்டும் என முடிவு செய்து வைத்திருக்கிறேன்.

[illegible] இறந்து போன போது அவரது குடும்பம் பற்றிய வலி அதிகமாக இருந்தது. அவர் இன்னமும் எழுதியிருக்க வேண்டும் என்ற எண்ணமிருந்தாலும் அவரது பிள்ளைகளுக்காக இன்னமும் வாழ்ந்திருக்க வேண்டும் என்று வருந்தினேன். அ.மி அப்படியில்லை. எல்லாக் காலத்திலும் தமிழ் வாசகர்களோடு வாழ்ந்து கொண்டேயிருக்கிற அளவுக்கு எழுதிக் குவித்திருக்கிறார். ஆரம்பகட்ட வாசகன் என்றாலும் கூட தைரியமாக 'அசோகமித்திரனிலிருந்து வாசிக்க ஆரம்பிங்க' என்று பரிந்துரைக்கிற எளிமையான எழுத்துக்களை எழுதிக் கொண்டேயிருந்தார்.

சாமானிய மனிதர்களைத் தமது எழுத்தின் பாத்திரங்களாக நிரப்பிவிட்டு நம்மிடையே உலவவிட்டிருக்கிறார். அப்பா இறந்ததை எப்படி ஏற்றுக் கொள்ள முடிந்ததோ அப்படியேதான் அசோகமித்திரன் இறந்ததையும் ஏற்றுக் கொள்ள முடிகிறது. அவர் சென்னையில் தமது வீட்டில் இருந்து கொண்டிருப்பதாகவே நினைத்துக் கொண்டிருக்கலாம். அவர் எழுதியதையெல்லாம் திரும்பத் திரும்ப வாசித்துக் கொண்டேயிருக்கலாம்.

அசோகமித்திரன் பற்றிய ஒரேயொரு குறை உள்ளதெனில் அது ஞான பீட விருது. அவ்விருதுக்கு எல்லாவகையிலும் தகுதி வாய்ந்த எழுத்தாளர் அவர். ஆனால் அரசியலும் சாதியமும் அவருக்குக் கடைசி வரைக்கும் கிடைக்காமல் செய்துவிட்டன. அது விருதுக்குத்தான் அவமானம். அவர் தனது கோணவாய்ச் சிரிப்பில் புறந்தள்ளிவிட்டு போய்விட்டார். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டமைப்பும் புலிகளும் 2

- துயாளன்






அந்தப் பிரசுரத்தில் பிள்ளையான் வேடன் - கருணா கோவணத்துடன் திரிந்தவர் என்றும்- சம்பந்தன் ஐயா தூக்கிக் காட்டினார் எனவும் இவர் கொச்சையாக எழுதியிருப்பதும் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது.

இவ்வாறானவரைத் தனது பரமார்த்த குருவாக ஏற்றுக்கொண்ட சிஷ்யன் ஒருவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கத்தில் புலிகளுக்கு பங்கே இல்லை என நிறுவ முயல்கின்றார். தாய் எட்டடி பாய்ந்தால் குட்டி பதினாறடி பாயுமல்லவா? நல்லவேளை தமிழீழ விடுதலைப் புலிகளைப் பிரபாகரன் உருவாக்கவில்லை என்று சொல்லாமல் விட்டார்கள். அந்தளவில் புண்ணியம் தான். வரலாறு என்பது சம்பந்தப்பட்டவர்களால் எழுதப்படுவது அல்லது அந்தச் சம்பவங்களுடன் உணர்வுரீதியாகப் பங்களித்தவர்கள் அவற்றைச் சரியாக உள்வாங்கி வெளிப்படுத்துவது (உதாரணம் - நா.யோகேந்திரநாதன்) விறாந்தையில் நின்று வந்ததை வாங்கி விழுங்கிவிட்டு ஏப்பமிட்டவர்களால் எழுதப்படுவதல்ல. சுமார் 18 வருட காலம் விடுதலைப் புலிகள் பத்திரிகையின் ஆசிரியராக விளங்கியவர் சிலரது பெயர்களை குறிப்பிட்டு "இவர்களை நாங்கள் வாழ்க்கையில் ஒரு நாளும் கண்டதில்லையே? நீங்கள்தான் இவர்களை பற்றி சொல்கிறீர்கள் என இம் முறை மாவீரர் நாள் நிகழ்வின் போதுஒருவரிடம் வினாவினார். உண்மையில் தலைவர் பிரபாகரன் கலந்துகொண்ட புலிகளின் உத்தியோகபூர்வ பத்திரிகையாளர் மாநாடுகளில் இவ்வாறானவர்களை அவர் கண்டதில்லை. இவர்கள் சரியாகப் பொறுப்பாகச் செய்திகளைத் தருவார்கள் என்று எந்த ஒரு ஊடகமும் நம்பவில்லை. அதனால்தான் தமது நிறுவனத்தின் சார்பில் இவர்கள் எவரையேனும் அனுப்பவில்லை.

கூட்டமைப்பின் உருவாக்கத்தில் தமக்கு பங்குண்டு என்று இவர்களும், புலிகளுக்கு கூட்டமைப்பின் உருவாக்கத்தில் பங்கில்லை என இவர்களின் ஒருவரின் சிஷ்யனும் நிறுவமுயல்வதன் காரணம் என்ன?

குறிப்பாக வடக்கில் எதாவது சம்பவங்களைச் சொல்லப்போனால் எல்லோரும் கிழி கிழி என்று கிழித்துவிடுவார்கள். எனவே கிழக்கில்தான் தமது மகா பங்களிப்பு இருந்ததாகக் காட்ட முனைகின்றனர். எதைச் சொன்னாலும், அவர்கள் நம்பிவிடுவார்கள் என்று எண்ணுகிறார்களா? சம்பவங்களுடன் சம்பந்தப்பட்டோர் முழுமையாக ஒழிந்து போனார்கள். எஞ்சியிருப்பவர்கள் தம்மை வெளிக்காட்டிக் கொள்ள முயலமாட்டார்கள். அவர்களுக்கு பாதுகாப்புப் பிரச்சினை. எமக்குத்தான் கருணாவின் புண்ணியத்தில் அரசியல் அடைக்கலம் கிடைத்து விட்டதே! இனி நாம் சொல்வதுதான் வரலாறு என எண்ணுகிறார்கள். துஷ்டனின் கையில் அகப்பட்ட கிளி எப்படி உருவாக்கப்பட்டதோ அப்படியாகவா எமது வரலாறு பதியப்படப் போகிறது?

★ ★ ★

புலம்பெயர் தமிழர்களிடையே ஒரு கோளாறு உண்டு. ஒரு பத்திரிகையாளன் எவ்வளவு நாகரிகமில்லாமல், உண்மைக்குப் புறம்பாக கற்பனையில் எதை எழுதினாலும் பரவாயில்லை. கருணாவையும், பிள்ளையானையும் தாக்கினால் போதும். அவரைத் தேசியவாதி என்று உச்சக் கொம்பில் ஏற்றி விடுவார்கள். வீடுதேடிப் போய்ப் பாராட்டவும் செய்வார்கள். அவர்களுக்கு பாராட்டு விழா நடந்தால் பாதுகாப்பளிக்கவும் செய்வார்கள். இவர்கள் தமது எழுத்தினூடே போராட்டத்துக்கு, தேசியத்துக்கு எதிரான கருத்துக்களை வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவதுபோல் ஏற்றுவதைக் கண்டு கொள்ளமாட்டார்கள். குள்ளத்தனமாக எழுதுவதைக் கண்டுபிடிக்க தெரியாது என்பதே உண்மை.

## தட்டிக்கேட்க ஆளில்லாவிட்டால்...?

பத்திரிகைச் சுதந்திரம் என்ற கவசத்தில் இவர்கள் இவ்வளவு கோளாறுகளையும் செய்வதற்கேதுவான வழிகளைத் திறந்தது புலம்பெயர் தேசத்தில் பொறுப்பாக உள்ளவர்களே. அரசியல் அடைக்கலம் பெற்று வந்த இவர்களுக்கு சிவப்புக் கம்பளம் விரித்து தமது ஊடகங்களில் பெருந்தொகையான பணத்தைக் கொடுத்து எழுத விடுவார்கள். பணம் மிதமிஞ்சிய நிலையில் இவர்கள் "பிரபாகரனுக்குத் தேசியத் தலைவர் என்ற பட்டத்தைக் கொடுத்தது யார்? எனப் பல வருடங்களாகப் போராளிகளாக இருந்தவர்களைப் பார்த்து கேள்வி கேட்பார்கள். எதையும் பற்றிக் கவலைப்படாமல் பிள்ளையான் வேடன் - கருணா கோவணத்துடன் திரிந்தவர் - என்று எழுதுவதுதான் தேசியப் பற்று எனத் தவறாக விளங்கியமையே காரணம்.

மேலும் - சுதுமலையில் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தைத்தான் ஏற்றுக்கொண்டதாக தலைவர் கூறவில்லை. மாறாக "சிங்கள இனவாத பூதம் இந்த ஒப்பந்தத்தை விழுங்கும் காலம் வெகுதூரத்தில் இல்லை" என்றே அவர் குறிப்பிட்டார். அதைத் திரிபுபடுத்தி பிரபாகரன் ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டார் என்று இவர்கள் கூறுவதைக் எவரும் மறுத்துப் பேசவில்லை. அதனால்தான் இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கத்துக்குப் புலிகள் காரணமல்ல என்று ஒருவரும் தாங்களே உருவாக்கினர் என்று மற்றொருவரும் கூறும் நிலை ஏற்பட்டது.

• யாழ்ப்பாணம், நாயன்மார்கட்டு இராஜேஸ்வரி வீதியில் பொட்டம்மான் குடும்பத்தினருக்குச் சொந்தமான வீடு ஒன்று உள்ளது. பொட்டம்மானுக்கு நேரே மூத்த அண்ணன் சிவஞானகுமார் ஜேர்மனியிலிருந்து வரும் நாள்களில் இந்த வீட்டின் ஒரு அறையில் தங்குவதுண்டு. இந்த வீட்டை படையினரின் ஆதரவாளரானஒரு குடும்பம் அபகரித்தது. அந்தக் குடும்பத்துக்கு சிவஞானகுமார் ஒரு அறையில் தங்குவது பிடிக்கவில்லை. அதன் விளைவாகவே சிவஞானகுமார் அடிக்கடி விசாரணைக்குள்ளாக்கப்பட்டார். இவ்வாறே ஒரு சம்பவத்தின் பின்னர், திரும்பிவரும் வழியில் அவர் உயிரிழந்தார். அது மகிந்தாவின் காலம். எனவே இவரது குடும்பத்தினர் இங்கே வந்து சொந்த ஊரில் இறுதிச் சடங்கு செய்ய முடியாமற்போயிற்று. சடலம் ஜேர்மனிக்கு அனுப்பப்பட்டது.

அதேபோல் கனகரத்தினம் வீதியில் உள்ள காணியும் இன்னொரு பகுதியினரால் அபகரிக்கப்பட்டது. எங்களை இராணுவம் தான் இங்கே இருக்கச் சொன்னது. நாங்கள் கடைசிவரை இங்கிருந்து போகமாட்டோம் என அக்குடும்பம் சொல்கிறது. அதாவது எதிர்த்துக் கேள்வி கேட்பதற்கு ஆளில்லாவிட்டால், தேசிய பாதுகாப்புப்பின் பேரால் அதனை அனுபவிப்பவர்கள் தமக்கே அது சொந்தம் என்பார்கள். அது போலத்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வரலாறோடு சம்பந்தப்பட்டவர்கள் வாய்திறக்க முடியாதவர்கள். எனவே போலிகளான நாமே அரசியல் அடைக்கலம் பெறும் வாய்ப்புக்களை பெற்றுவிட்டோம். முக்கிய பிரமுகரான தராகியும் புலிகள் தரப்பில் இவ் விடயங்களைக் கையாண்ட மிக முக்கிய பிரமுகரும் இன்று உயிரோடு இல்லை.
எனவே இராஜேஸ்வரி வீதி வீட்டில் குடியிருப்பவர்கள் தமது சொந்த வீடு என்ற நினைப்பில் அடிக்கடி விழாக்கள், வைபவம் என கூத்தடிப்பது போல் இவர்களும் தாங்களே வரலாற்று நாயகர்களாகக் கூத்தடிக்கின்றனர். உண்மையில் வரலாறு என்ன? யாழ்ப்பாண இடப் பெயர்வுக்கு முன்னரே கூட்டமைப்பின் உருவாக்கத் துக்கு பிள்ளையார் சுழி போடப் பட்டுவிட்டது என்பது இப்பேனா வீரர்களுக்குத் தெரியாது.

## புலிகளில் இணைய வந்த தராகி

தராகி எனும் சிவராம் உண்மையில் புலிகள் இயக்கத்தில் சேரவே யாழ்ப்பாணத்துக்கு 1983 இல் வந்தவர். பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவர் மூலம் புலிகளுடன் தொடர்பு கொண்டார். எனினும் புலிகள் இயக்கத்தின் அப்போதைய நடைமுறையின் படி அவரை உடன்டியாக உள்ளீர்க்க முடியாமற்போயிற்று. ஒருவரின் தொடர்பு கிடைத்தால், அவரைப் பற்றிய தகவல் சில காலம் ஆராய்ந்து, சிறு சிறு வேலைகளைக் கொடுத்து, அவற்றை எப்படிச் செய்கிறார் எனக் கணித்து, சில சந்திப்புகளுக்கு ஏற்பாடு செய்து, குறிப்பிட்ட நேரத்தில் அக்கறையுடன் இவற்றில் கலந்து கொள்கிறாரா? என ஆராய்ந்த பின்பே அவரை உள்வாங்க முடிவெடுக்கப்படும். அதற்கிடையில் அவரது தனிநபர் ஒழுக்கம் பற்றி பல வழிகளிலும் ஆராயப்படும்.

சிவராம் தொடர்பு கொண்டது. பிரான்சிஸ்சை கிழக்கின் முதற் போராளியான பாசி என்று அழைக்கப்படும் பாலிப் போடி சின்னத்துரை (யோகன்பாதர்) தேர்ந்தெடுக்கப்பட்ட போராளிகளுடன் தானும் பயிற்சி பெறுவதற்காக இந்தியாவுக்குச் சென்று விட்டார். போகும்போது அரசியல் தொடர்புகளைப்பேண பிரான்சிஸ்சை (இராசையா சடாட்சரபவான், கல்லாறு) நியமித்தார். அக்கால கட்டத்திலேயே பிரான்சிஸ் தராகியை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைத்தார்.

எனினும் தராகி எதிர்பார்க்கும் வேகத்தில் உள்ளீர்க்க முடியாதென்ற விடயம் அவருக்கு சுட்டிக்காட்டப்பட்டது. அப்போதுரெலோவும், புளொட்டும் ஆளணியை எந்த வித்த்திலும் அதிகரிக்க வேண்டுமென்ற நிலைப்பாட்டில் இருந்தன. தராகி புளொட்டில் இணைந்து கொண்டார். வவுனியா முதலான இடங்களெல்லாம் அவருக்கு அத்துபடியாகின எனினும் -

காந்தியம் என்ற அமைப்பை நடத்தி வந்த சந்ததியார், தமிழீழ கழுகுகள் படையை நடத்திய பின்னர் புளொட்டில் இணைந்து கொண்ட ராஜ்மோகன் போன்றோர் உட்கட்சிப் பூசலினால் காணாமல் போனதும் இவர் தளம்பத் தொடங்கினார்.

புலிகளின் சுவரொட்டிகளை ஒட்டச் சென்ற பாடசாலை மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டமையும், மெண்டிஸ் போன்றோரின் அடாவடித்தனமும் அவருக்கு விரக்தியை உண்டுபண்ணின.

1986 இல் புலிகள் புளொட் இயக்கத்தைத் தடை செய்ததும், அவர் தனது நடவடிக்கைகள் அனைத்தையும் நிறுத்திக்கொண்டார். இந்திய இராணுவகாலத்தில் புலிகள் இயக்கத்தில் இருந்த சில நண்பர்களின் அறிவுறுத்தலுக்கமைய கொழும்பு வாசியாகி முழு நேர பத்திரிகையாளராக மாறினார். அவருக்குஇருந்த ஆங்கிலப் புலமை, பிரதேச ரீதியான அறிவு அவரது கட்டுரைகளில் பரிணமித்தன. ஊடகவியலாளர்களுடன் உறவைப் பலப்படுத்துவதில் அவர் கவனம் செலுத்தினார்.

(மறுபக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

எனினும் ஊடகவியலாளர் நித்தியானந்தனை புளொட் மரணத்தின் வாசலைத் தொடுமளவுக்கு படுகாயப்படுத்தியதை அடுத்து, தமது நடவடிக்கைகளில் நிதானத்தைக் கையாண்டார். நித்தியானந்தன் பின்னர் விடுதலைப் புலிகளுடன் இணைந்து மாவீரர் ஆனார்.

நித்தி மீதான தாக்குதலை கண்டிக்கும் துணிவு எவருக்கும் இல்லை.

நித்தியின் மீதான தாக்குதலை இன்றைக்குத் தாம் மூத்த ஊடகவியலாளர்கள் என்றும் - மட்டக்களப்பின் வரலாற்றைப் புரட்டிப் போட்டவர்கள் என்றும் - மார்தட்டும் எவருமே கண்டிக்கவில்லை என்பதே வரலாறு.

லேக்ஹவுஸிலிருந்து வந்தவர்களுக்கு இவ்வாறான துணிவு எப்படி ஏற்படும்?.

இந்திய இராணுவத்தின் வெளியேற்றத்தைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி நடத்திய நிகழ்வுகளிலோ வாகரை மாநாட்டிலோ இவர்களின் தலைக் கறுப்போ, நரையோ தென்படவில்லை. வீரகேசரி சார்பாக குமரகுருவும், தற்போது மட்டக்களப்பு பி.பி.சி. நிருபராக இருக்கும் உதயகுமாருமே அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தை சந்தித்தனர்.


அக் காலகட்டத்திலும், இரண்டாம் ஈழப் போர் தொடங்கிய பின்னரும் மட்டக்களப்பு அரசியல் பணிமனையில் தொடர்பாளராகவும், கரிகாலன் யாழ்ப்பாணம் சென்ற பின் 1993 இல் மட்/அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளராகவும் விளங்கிய குஞ்சு மாஸ்டர் (தமிழன்பன்) என்பவரையே தெரிந்திராத நிலையில் தான் தாங்கள் தேசியவாதிகள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கியவர்கள் என்று மார்பு தட்டுகின்றனர்.

## கொப்பேகடுவாவின் ஆசீர்வாதம் லிங்கநாதனுக்கு

இரண்டாம் ஈழப்போர் தொடங்கிய பின்னர், தமக்கு விசுவாசமான ஆயுதக் குழுவாக இருந்து கொண்டு, சிவில் நிர்வாகத்தை நடத்தக்கூடிய ஒரு இயக்கம் ஒன்றைத் தெரிவு செய்ய வவுனியாக் கட்டளைத் தளபதி டென்சில் கொப்பேகடுவ தீர்மானித்தார். அதற்கு புளொட்டே பொருத்தமானதாக அவருக்குத் தெரிந்தது. ஏனெனில் ஈ.பி.ஆர்.எல்.எப், ரெலோ போன்றவை இந்தியாவின் செல்லக் குழந்தைகளாக இருந்தவை. புளொட் ஒன்றுதான் பொருத்தமானது. மாலைதீவில் புரட்சி செய்யப்போய் நொந்து கெட்டிருக்கும் இயக்கம் என்ற வகையில் அதுதான் சொன்னதைச் செய்யும் என அவர் நம்பினார்.

வவுனியா நகரசபைத் தேர்தலில் புளொட்டைக் களமிறக்கினார். இன்று வடக்கு மாகாண சபையின் விவசாய அமைச்சர் பதவியை எதிர்பார்த்து அது கிடைக்காத நிலையில், தற்போதைய அமைச்சர் பொ. ஐங்கரநேசனுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை சுமத்தும் லிங்கநாதன் கொப்பேகடுவவினால் ஆசீர்வதிக்கப்பட்டவரே.

அவரே நகரசபைத் தலைவரானார். அரசின் முதல் தெரிவான புளொட்டுக்கே வரி அறவீட்டில் முன்னுரிமை. வவுனியாவிலிருந்து புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வரும் பாரஊர்திகளுக்கான





வரியைச் செலுத்தும்போது புளொட்டுக்கு அடுத்ததாகத்தான் ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப் முதலான இயக்கங்களைக் சுட்டிக்காட்டுபவர். தாம் இரண்டாம் தர இயக்கங்களாக அரசால் பார்க்கப்படும் நிலை, புலிகள் மீதான அச்சத்தினால் நிம்மதியாக நித்திரை கொள்ளாத அவலம் - இதை விட மட்டக்களப்பில் ரெலோவின் ஜனா. ஈ.பி.ஆர்.எல்.எப் வின் ராசிக்குழு நேரடியாக படைகளால் வழிநடத்தப்பட்டமை. போன்றவை அவர்களுக்கு சலிப்பூட்டின. மாற்றுவழிக்கான கதவுதிறக்காதா எனக் காத்திருந்தனர்

இதேவேளை - பொட்டம்மானும் அவருக்கு நெருக்கமானவர்களும் எத்தனை முனைகளில் பகையைக் குறைக்கலாம் விடுதலைப் போருக்குச் சாத்தியமான வகையில் எவர் எவரை அணுகலாம் எனச் சிந்தித்தனர். அந்த வகையில் அவர்களது முதல் தெரிவுதராகியாக இருந்தது. அவரது கட்டுரைகளில் இருந்த விடயங்கள் அவரைச் சந்திப்பதை விரைவுபடுத்தியது. (புலிகள் வெளியிட்ட மொழி பெயர்ப்புக் கட்டுரைகள் நூல்களில் கணிசமான இடத்தைப் பிடித்தவை தராகியுடையனவே. (இவ் வெளியீடுகளில் யோகிமிகவும் ஆர்வம் காட்டினார்.)

## பொட்டம்மானுடன் தராகி முதல் சந்திப்பு

1994 சந்திரிகாவுடனான பேச்சு வார்த்தைக் காலங்களில் தராகியுடனான சந்திப்பு இடம் பெற்றது. யாழ். போதனா வைத்தியசாலைக்குப் பின்புறமாக உள்ள விக்ரோரியா வீதியிலுள்ள சுபாஷ் ஹோட்டலில் இவர் தங்கியிருந்தார். (இதே ஹோட்டலில் பி.பி.சி. ஆனந்தியும் தங்கியிருந்தார்.) நுணாவிலில் உள்ள ஒரு இடத்தில் இவருடனான சந்திப்பு இடம் பெற்றது. இருதரப்பினரும் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ள இந்தச் சந்திப்பு வழி வகுத்தது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கத்துக்கான அடித்தளம் இதில் தான் போடப்பட்டது. குளுவன் மாடுகள் போன்று திரியும் இயக்கங்களுக்குக் கயிறு எறிந்து குணத்தை மாற்றும் பொறுப்புத் தராகியிடம் ஒப்படைக்கப்பட்டது. இது இலேசான விடயமல்ல. இவ்வளவு காலமும் தமது கட்டுப்பாட்டில் இருந்த ஆயுதக் குழுக்களின் கவனத்தைப் புலிகள் பக்கம் திருப்புவது படையினரால் ஏற்க முடியாது. இது தெரிந்தும் அபாயகரமான இப் பணியில் அவர் இறங்கினார்.

★ ★ ★

## முதல்தெரிவு ரெலோ

திரு. சிவராமிடம்ஒப்படைக்கப்பட்ட பணியைச்சாத்தியமாக்க முதல் தெரிவாகத் தெரிந்தது. தமிழீழ விடுதலை இயக்கமே. ஏனெனில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப காலங்களில் அதிகளவு புரிந்துணர்வுடன் செயற்பட்டவை புலிகளும், ரெலோவுமே.

தமிழீழ விடுதலை இயக்கம் என்ற பெயரில் உரும்பிராயைச் சேர்ந்த முத்துக் குமாரசாமியே ஒரு இயக்கத்தை ஆரம்பித்தார். தங்கத்துரை, குட்டிமணியின் இயக்கத்துக்குப் பெயரிடப்படவில்லை. "தங்களால் இந்தப் போராட்டத்துக்கு எதனைச் செய்ய முடியுமோ அதனை மட்டுமே செய்வோம். கட்டுப்பாடுகளுடன் ஒரு இயக்கத்தை நடத்திச் செல்வது மிகக் கடினமான காரியமாக இருக்கும்" என அவர்கள் ஆரம்பத்தில் கருதினர். அதனால் தான் "தமிழீழ விடுதலைப் புலிகள்" என்ற பெயரில் உரிமை கோரும் சம்பவங்களைப் பட்டியலிடும் போது அவர்கள் தாங்கள் பங்குபற்றிய, மேற்கொண்ட சம்பவங்களுக்கு உரிமைகோர முற்படவில்லை.

முத்துக்குமாரசாமியால் அகிம்சை ரீதியிலோ, ஆயுதப் போராட்ட வழியிலோ தொடர்ந்து தனது இயக்கத்தை நடத்த முடியவில்லை. எனவே தங்கத்துரை அவர்கள் தமது இயக்கத்துக்கு இந்தப் பெயரை வைத்தபோது சிறிது முணு முணுக்கத்தான் முடிந்தது. முத்துக்குமாரசாமி தற்போது வெளிநாடொன்றில் புலம் பெயர்ந்த நிலையில் வாழ்ந்து வருகிறார்.

## தம்பி என்ற பெயர்

தங்கத்துரை மீது பிரபாகரனுக்கு அளவு கடந்த மதிப்பு இருந்தது. அது போன்றே பிரபாகரன் மீது மிகுந்த அன்பு கொண்டவராகத் தங்கத்துரை இருந்தார். அவரைத் "தம்பி" என்று அழைத்தார். போராளிகள் அவரை "அண்ணா" என்றும் "செஞ்சோலை - காந்தரூபன்" பிள்ளைகள் மாமா எனவும், தேசியத் தலைவர் என்று தமிழ் மக்களும் அழைக்கும் வரை இந்தப் பெயரையே, போராளிகள் அனைவரும் பெரும்பாலும் பயன்படுத்தினர். அவரைவிட வயதில் குறைந்த சீலன், புலேந்திரன், சங்கர், கிட்டு, போன்றோரும் தங்கத்துரை அழைத்தது போலவே அழைத்தனர். எல்லோரும் தங்களுக்கு ஏற்படும் வலிகளின்போதும், நினைவு தப்பும் வேளை அரற்றும்போதும் "அம்மா" என்றே அழைப்பர். ஆனால், சங்கர் இவ்வாறான இருவேளைகளிலும் தங்கத்துரை அழைத்த மாதிரியே அரற்றினார். அந்தப் பெயர்மட்டுமல்ல பிரபாகரனும் போராளிகளின் மனதில் எந்தளவு ஈர்ப்பைப் பெற்றிருந்தார். என்பதற்கு இந்தச் சம்பவம் ஓர் உதாரணம்.

சிறிது காலம் இரு இயக்கங்களும் ஒன்றாகவே இணைந்து பயணித்தன. நீர்வேலி வங்கிக் கொள்ளை என்ற துணிகரமான சம்பவத்தை இரு இயக்கங்களும் இணைந்தே செய்தன.

கிருஷ்ணா வைகுந்தவாசன் செய்த தமிழீழப் பிரகடனம் சாத்தியமற்றது என்பதை விளக்கும் "நாடு கடத்தப்பட்ட நிலையில் தமிழீழ அரசு" என்ற அறிக்கையும், இயக்கத்துக்குச் சொந்தமான ஆயுதத்தையும் சில உடைமைகளையும் கொண்டு சென்று உமாமகேஸ்வரனுடன் இணைந்து கொண்ட சுந்தரத்துக்கு விதிக்கப்பட்ட தண்டனை குறித்து "துரோகத்துக்கு பரிசு" என்ற அறிக்கையும், தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற இலச்சினையுடன் துண்டுப் பிரசுரங்களாக வெளியிடப்பட்டதும் இக் காலகட்டத்தில் தான். இந்தத் துண்டுப் பிரசுரங்களை மக்கள் மத்தியில் விநியோகித்தவர் அப்போதுபுலிகளின் தீவிர ஆதரவாளராக இருந்த பொட்டம்மான்:

## பிரியும் முடிவு

வடமராட்சி கிழக்கில் எதிர்பாராத வகையில் கைதான குட்டிமணி, தங்கத்துரை, ஜெகன் போன்றோர் கொழும்பில் உள்ள உயர் நீதிமன்றத்துக்கு கொண்டு செல்லப்பட்டு வந்தனர். இவ்வாறான நிலையில் "நாங்கள் தற்கொலைத் தாக்குதலை மேற்கொண்டு, அவர்களை மீட்போம்" என்று வலியுறுத்தினார் பிரபாகரன். ஆனால் தங்கத்துரை, அவர்களின் இயக்கத்திலிருந்த ராசப்பிள்ளை, சிறிசபாரத்தினம் போன்றோர் இம் முயற்சியில் ஈடுபட ஆர்வம் காட்டவில்லை. அவ்வேளையில்தான் தங்கத்துரை அண்ணா இல்லாத இந்த இயக்கத்தினருடன் தொடர்ந்து இணைந்து செயற்பட முடியாது என பிரபாகரன் மனதில் தோன்றியது.

தொடர்ந்து மேலும் சில சம்பவங்கள் நிகழவே தனித்து இயங்குவதென்ற தமது முடிவை செயலாக்கினார்.
"ஒன்றாக இருந்து பிரச்சினைப்படுவதை விட நாங்கள் தனித் தனியாகப் பிரிந்து நண்பர்களாக இருப்போம்" என அவர்களிடம் விளக்கினார் பிரபாகரன்.

இச் சம்பவத்தில் அவர் செய்த விட்டுக் கொடுப்புக்கள் பற்றி விவரிப்பதனால் அதற்கென தனியே ஒரு கட்டுரையோ, புத்தகமோ தான் வெளியிட வேண்டும். அதேவேளை பிரபாகரனின் தனிப்பட்ட பாதுகாப்பு குறித்து ராசப்பிள்ளை போன்றோர் நிறையவே கவலைப்பட்டனர். இதற்கென அவர்கள் முன்வைத்த ஏற்பாடுகள் மற்றும் சில விடயங்களைப் பிரபாகரன் அன்புடன் மறுதலித்தார். மீண்டும் தனித்து இயங்கும் போது சில பொருளாதார மற்றும் நிதி ரீதியான நெருக்கடிகள் தோன்றின. அதனை பிரபாகரனுக்கு அடுத்த நிலையில் இருந்த வரும் பிற் காலத்தில் இளங்குமரன் என அழைக்கப்பட்டவருமான பேபி அண்ணா சமாளித்தார். (வளரும்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரப்பலன்

**மேடம்**
பிணி தீரும். எதிர்ப்பால் உறவு. சாமர்த்தியம். புதிய தகவல்.

**ரிஷபம்**
உறவினர் உதவுவர். எதிரிகள் தொல்லை. பணவரவு. காதல்.

**மிதுனம்**
ஆன்மிக சிந்தனை. சொந்தங்கள் வரவு. ஆரோக்கியம். புதிய உறவு.

**கடகம்**
எதிர்காலம் பற்றிய பயம். கயவரில் நம்பிக்கை. மானக்கேடு.

**சிம்மம்**
இரக்க மேன்மை. தேகசுகம். தொலை தூரப் பயணம். மகிழ்ச்சி.

**கன்னி**
ஏக்கம். பொருள் நஷ்டம். தெய்வ சிந்தனை. தாக மிகுதி. பயம்.

**துலாம்**
கல்வி விருத்தி. காரியக்கேடு. தெய்வ சிந்தனை. தர்மம்.

**விருச்சிகம்**
உறவின் வரவு. ஊக்கமின்மை. தொலைத்தது கிட்டும். உயர்வு.

**தனுசு**
தனிமை. மன உளைச்சல். காரிய விருத்தி. பகையால் நன்மை.

**மகரம்**
ஊதிய உயர்வு. உயர்ந்த சிந்தனை. தொழில் விருத்தி. தர்மம்.

**கும்பம்**
கனவு மெய்ப்படும். தொழில் விருத்தி. தானியம்சேரும். லாபம்.

**மீனம்**
விருந்துபசாரம். கல்வி விருத்தி. போகமிகுதி. ஆலய தரிசனம். பண வரவு.



கடந்த 11.03.2017 அன்று யாழ்ப்பாணம், காங்கேசன் துறை, தையிட்டியில் உள்ள வள்ளுவர்புரத்தில் வசிக்கும் "கோரிதாஸ் பிரதீப்" என்னும் 10 வயதான நுரையீரல் பாதிப்புக்கு (Chronic Lung Disease) உள்ளான சிறுவனிற்கு Feed The Poor & உணவளிப்போம் அமைப்பால் ரூபா 260 000 பெறுமதியான உயிர் காக்கும் உபகரணங்கள் மற்றும் அத்தியாவசிய பொருட்கள் என்பன வழங்கப்பட்டன.

தேசிய கலை இலக்கியப் பேரவையின்

## 44வது ஆண்டு விழா ஆய்வரங்கும் கலைநிகழ்ச்சிகளும்

தேசிய கலை இலக்கியப் பேரவை

தேசிய கலை இலக்கியப் பேரவையின் 44ஆவது ஆண்டு விழாவானது எதிர்வரும் 02.04.2017 (ஞாயிற்றுக்கிழமை) கொட்டகலை அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் பிரதான மண்டபத்தில் காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை ஆய்வரங்கு, கலை நிகழ்ச்சிகள் என இரண்டு அமர்வுகளாக இடம்பெறவுள்ளது.





26.03.2017 அன்று இடம்பெற்ற ரியாஸ் குரானா வாசகர் வட்டம் நடத்திய சிறுகதை அமர்வு, தாருஸ்ஸலாம் பாடசாலையில் இடம் பெற்றது.




இலங்கை வானொலி புகழ் கலாபூஷணம் மு. மாசிலாமணி அவர்களின் "சிரிக்க சிந்திக்க சில வரிகள்" என்ற தலைப்பிலான நூல் வெளியீட்டு விழா கடந்த 26.03.2017 அன்று காலை 9.30மணியளவில், யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரியின் பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. தாவடியைச் சேர்ந்த நூலாசிரியர் 1970 களில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ் சேவையில் ஒலிபரப்பாகிய சானாவின் மத்தாப்பு நிகழ்ச்சியில் பல நகைச் சுவை நாடகங்களை எழுதி ஒலிபரப்புச் செய்தவர்.



தமிழ் நாட்டின் பாரம்பரிய பறையுடன் ஊடாடி தமது உள்ளுறை சக்தியை மேற் கொணர்ந்த அரங்க செயற்பாட்டுக் குழுவின் ஆற்றுகை நிகழ்ச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஹாய் குட்டீஸ்...!


புதுவிதி இல.107 இராச வீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.



## மோட்டார் சைக்கிள் பிறப்பும் ஹொண்டாவின் வெற்றியும்

பிழைக்கத் தெரியாத முட்டாள் என்று அந்த 18 வயது இளைஞனைத் திட்டினார் அவனது அப்பா. தோல்விக் கென்றே பிறப்பெடுத்த துரதிர்ஷ்டக் காரன் என்று கிண்டலடித்தனர் அவனது நண்பர்கள்.

அவன் அடைந்த தொடர் தோல்வி களை உலகத்தில் வேறு யாராவது அனுப வித்திருந்தால், எப்போதோ



தற்கொலை முடிவுக்குப் போயிருக்கக் கூடும். அத்தனை தோல்விகளையும் உள்வாங்கி, கடைசி யில் பிரமாண்டமான வெற்றியைச் சாதித்த அந்த மாமனிதர் தான் சாய்க்கிரோ ஹொண்டா. தனது வாழ்க்கை அனுபத் தைச் சாறுபிழிந்து சொன்னார்: "வெற்றி என்பது 99 சத விகிதம் தோல்வி."

டொயோட்டா நிறுவனத்துக்கு (மோட்டார் வாகனங்கள் தயாரிக்கும் பிரபல நிறுவனம்) பிஸ்டன் தயாரிக்கும் தொழிற்கூடம் உருவாக்க வேண்டும் என்பதே மாணவர் சாய்க்கிரோ ஹொண் டாவின் கனவு. யாருக்காகவும் அவர் காத்திருக்கவில்லை. அப்பாவின் தொடர் ஏச்சுக்கும், சக மாணவர்களின் நையாண டிக்கும் இடையே, மாதிரி உலைக்கூடம் ஒன்றை 1928 ஆம் ஆண்டு உருவாக்கினார். இரவு பகலாக உழைத்தார்.

சுமார் ஒரு வருட காலம் உழைத்து உருவாக்கிய, மாதிரி பிஸ்டனை பெரும் எதிர்பார்ப்புடன் டொயோட்டா நிறுவனத் துக்கு எடுத்துச் சென்றார். எங்கள் எதிர் பார்ப்புக்குரிய தரத்தில் உனது பிஸ்டன் இல்லை என்று நிராகரித்து விட்டார்கள் பொறியியலாளர்கள். முதலாவது கனவுத் திட்டம் படுதோல்வி அடைந்தது. மனம் பாரமாக இருந்தது. திரட்டி வைத்த முதலீடு அனைத்தும் காலி. எல்லோரும் வசை மாரி பொழிந்தனர்.

தூற்றுவோர் தூற்றட்டும் என்ற மனப் பக்குவத்தோடு, ஹொண்டா மீண்டும் முயற்சித்தார். மேலும் பல மாதங்கள் விடாப்பிடியாக உழைத்து அவர் உருவாக் கிய புதிய பிஸ்டன் மாதிரியை டொயோட்டா கம்பெனி, அருமை என்று பாராட்டி ஏற்றுக் கொண்டது. தயாரிப்புக்கு ஒப்பந்தம் கொடுக்கப்பட்டது.

மனதுக்குள் சிறிய வெற்றிக் களிப்பு. பெரிய தொழிற்கூடம் கட்டினால்தான் அவர்கள் கேட்கும் எண்ணிக்கையில் பிஸ்டன்களைத் தயாரிக்க முடியும். எனவே, கட்டடம் கட்டத் திட்டமிட் டார் ஹொண்டா. அப்போது ஜப்பான் உலகப்போருக்குத் தயாராகிக் கொண்டிருந்தது. இதனால் அங்கு வரலாறு காணாதளவு சிமெந்துக்கு தட்டுப்பாடு நிலவியது. எவ்வளவோ முயற்சி செய்தும் 10 மூட்டை சிமெந்தும் கிடைக்கவில்லை. "ஒழுங்காக ஏதாவது வேலையில் போய்ச் சேர்ந்துவிடு" - என்றார் அப்பா. "வாழ்க்கை முழுக்கவா ரிஸ்க் எடுப்பாய்" - என்றான் உயிர் நண்பன்.

தனது நலன் விரும்பிகளுடன் விவா தித்து, சிமெந்து கலவைக்கு இணையான மாற்றுக் கலவையைக் கண்டுபிடித்தார் ஹொண்டா. சிலரிடம் கடன் வாங்கி, அடுத்த சில மாதங்களிலேயே பெரிய தொழிற்சாலையைக் கட்டி முடித்தார்.

( வளரும்)

## ஹாய் சுட்டீஸ்...!

தோல்வி என்ற சொல்லையே தாங்க முடியாதவர்கள் பலர் எம்மிடையே உண்டு. ஆனால் உலகில் தோல்வியையே சந்திக்காதவர்கள் எவரும் இல்லை. தோற்றவர்கள் பலருக் கும் யாரேனும் ஆதரவாக இருப்பதுண்டு. அவர்களின் ஆதரவில் - தைரியத்தில் மீண்டும் எழுந்து சாதித்தவர்கள் ஒரு வகையினர்.

.ஆனால் எல்லோருக்கும் இத்தகைய சந்தர்ப்பம் அமைவதில்லை. அதனால்தான் சிலர் கோழைகளாக தற்கொலை செய்கிறார்கள். ஆனால் இந்தப் பகுதியில் வரும் சாதனையாளர்கள் அவமானங் களையும் தோல்விகளையும் சுமந்து அனைத்தையும் இழந்தவர்கள். எவரின் ஆதரவுமின்றி சுயமாக கடினமாக உழைத்து முன்னுக்கு வந்தவர்கள். இவர்களின் வாழ்வு உங்களுக்கு வழிகாட்டட்டும்...!

## தந்தையர் தினம் எப்படி வந்தது?

அமெரிக்காவை சேர்ந்த சொனாரா லூயிஸ் ஸ்மார்ட் டாட் என்பவர் 1909 ஆம் ஆண்டு "தந்தையர் தினம்" கொண்டாடுவதற்கான யோசனையை முன்வைத்தார்.

தனது தாயின் மரணத்தின் பின், 6 குழந்தைகள் கொண்ட குடும்பத்தை பெரும் சிரமத்தின் மத்தியில் பராமரித்தார். இந்த எண்ண உந்துதலே அன்னையர் தினம் போன்று தந்தையர் தினம் கொண்டாட வேண்டும் என்ற எண்ணத்தை உருவாக்க, அதையே வலியுறுத்தினார்.

இதன் பின்னர் 1910 ஆம் ஆண்டு முதன்முதலாக தந்தையர் தினம் கொண்டாடப்பட்டது. 1972 இல் அமெரிக்க ஜனாதிபதி ரிச்சர்ட் நிக்சன் தந்தையர் தினத்தை தேசிய விடுமுறை தினமாக அறிவித்தார்.



## அறிவு...!

அறிவை நாடு..! தேடு
பறிக்க யாராலும்
இயலாத மேடு..!
வறியவனாக்காப்
புதையிற் கூடு
சிறியவனென்றாலும் நாடு..!
செறிவாயெங்கும் கூடு..!
நெறியுடனேயே தேடு..!



## குட்டீஸ் பரிசுப் போதி - 38

✱ தொலைபேசியைக் கண்டுபிடித்தவர் யார்?

விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி:

புதுவிதி, 107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

குட்டீஸ் பரிசுப்போதி - 38

முடிவுத்திகதி : 17.04.2017

குட்டீஸ் பரிசுப் போதி - 36 முடிவுகள்


விடை: பேராசிரியர் கைலாசபதி


ஸ்ரீஸ்கந்தராஜா லக்ஷன்
யா/மத்திய கல்லூரி.
ஸ்ரீஸ்கந்தராஜா துஷாரா
வேம்படி மகளிர் கல்லூரி.

பாடசாலை மாணவர்கள் மட்டுமே பங்கேற்கலாம்.
(தபால் அட்டையில் பாடசாலை தரம் குறிப்பிட வேண்டும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இக்கரைப் பனைகளும் அக்கரை மவுசும்





■ சிக்மலிங்கம் றெஜினோல்ட்

“ஒடியல் மாவுக்கு இந்த விலையா?” என்ற குரலைக் கேட்டுத்திரும்பிப் பார்த்தேன். வயதான ஒரு பெண், கடைக்காரப் பெடியனுடன் நின்று மல்லுக்கட்டிக் கொண்டிருந்தார்.

“ஒரு கிலோ கோதுமை மாவின் விலை 80 ரூபாய்க்கு விற்கிது. அமெரிக்காவிலிருந்து இங்க வாற மாவை 80 ரூபாய்க்கு விற்கிறியள். ஆனால், ஊரில் சும்மா நிற்கிற பனையின்ரை ஒடியல்ல எடுக்கிற மாவுக்கு இந்த விலையோ?” என்று கேட்டார் அந்தப் பெண்.

“அப்பிடியெண்டால், நீங்கள் அந்தப் பனைகளுக்குக் கீழ போய் அதை எடுத்துக் கொள்ளுங்கோ. இஞ்ச இந்த விலைக்குத்தான் நாங்கள் விற்பம்” என்றான் பெடியன் .

ஆனால், அந்தப் பெண் விடுவதாக இல்லை. “அடேய், நாங்கள் பனைகளில் எடுக்காத பயனில்லை. இப்ப ஊரை விட்டு வெளியேறிட்டம். இல்லாட்டில் எத்தினை பாத்தி போட்டிருப்பம் தெரியுமே. பத்துப்பன்னிரண்டு சாக்கில வருசம் முழுக்க ஒடியலும் புளுக்கொடியலும் பறணில கிடக்கும். ஒடியப்பிட்டில்லாமல் ஒரு வாய் சோறு இறங்காது. ம்... எத்தினை பேருக்கு ஒடியலையும் புளுக்கொடியலையும் அள்ளிக் குடுத்திருப்பம். இப்ப எனக்கு நீ ஒடியல் கதை சொல்றாய், என்ன? ம்... எல்லாம் காலமடா காலம்..” என்று இரைந்தார்.

“அம்மா, உந்தக் கதையெல்லாம் எனக்கு இப்ப எதுக்கு? நீங்கள் எல்லாம் ஊரை விட்டிட்டுப்போனதாலதானே ஊரே காடுபத்திப் போய்க்கிடக்கு! பனங்கொட்டையை ஆர் இப்ப பொறுக்குகினம்? ஆர் இப்ப பாத்திபோட்டு, அதோட மினக்கெடுவினம்? போதாக்குறைக்கு சண்டையில கோடிக்கணக்கான பனைகள் வேற அழிஞ்சு போச்சு. இதெல்லாம் சேர்ந்துதான் இப்ப ஒடியலுக்கு இப்பிடி விலையேறியிருக்கு. நாங்கள் என்ன செய்யேலும்? ஒடியலைக் கொண்டு வந்து தாறவை இப்பிடி விலை ஏத்தித்தான் தருகினம். தட்டுப்பாடான பொருளுக்குக் கிராக்கிதான். ஒரு கிலோ பனங் கட்டியின்ரை விலையைச் சொல்லுங்கோ பாப்பம்” என்று அந்தப் பெண்ணை மடக்கினான் கடைக்காரப் பையன்.

“சரியடாப்பா... உன்னோட இதுக்கு மேல கதைக்கேலாது. உங்களுக்குக் கதைதான் தொழில். நல்லா வாயடிச்சுப் பழகிட்டீங்கள்.. யாவாரம் எண்டால் வாயடிக்கோணும் எண்டு வந்திட்டுது... ஒரு நியாயமான விலையைப் போட்டு ரண்டு கிலோ மாவைத்தா....” என்று சமாதானத்துக்கு வந்த பெண், மாவையும் வேறு பொருட்களையும் வாங்கிக் கொண்டு போனார்.

அந்தப் பெண் அங்கிருந்து புறப்பட்டுச் சென்ற பிறகு, நான் அவனிடம் நெருங்கிக் கேட்டேன். “உண்மையில ஒடியலுக்கு ஏன் இந்த விலை?“ என.

என்னை அவன் ஏற, இறங்கப் பார்த்தான். “எனக்கும் இதுக்கு என்ன காரணம் எண்டு தெரியாதண்ணை. ஆனால், ஒடியல் வாறது இப்ப குறைவண்ணை. எல்லாம் கொழும்புக்குத்தான் போகுது. புளுக்கொடியலை சிங்கள ஆட்கள் இங்க வந்து கட்டிக் கொண்டு போகினம். எங்கட ஆட்கள் எப்பவாவது இருந்திட்டுத்தான் பனம்பொருட்களை வாங்குவினம். ஆனால், சிங்கள ஆட்கள் அப்பிடியில்லை. இஞ்ச வந்தால் அவை ஆசையாக வாங்கிறது ஒடியலும் பனங்கட்டியும் புளுக்கொடியலும்தான். ஏன், பனையோலையில செய்த பொருட்களை ஆர் வாங்குகினம். ஒருதடவை அனுராதபுரத்துக்கோ மிகிந்தலைக்கோ, கண்டிக்கோ போய்ப்பாருங்கோ. அங்க பெரகரா, பொசன் பெருநாட்களில பனம்பொருட்களைக் குவிச்சு வைச்சு விற்பினம்... எங்கட நல்லூர்த் திருவிழாவிலயோ, வற்றாப்பளை அம்மன் கோயில் பொங்கலிலயோ என்ன விற்கிதெண்டு சொல்லுங்கோ, பாப்பம்? பிளாஸ்டிக் பொருட்கள்தான். இப்பிடியிருந்தால், எப்பிடி ஒடியலைக் காண ஏலும். ஒவ்வொரு பனைக்குக் கீழயும் பனங்காய் விழுந்துபோய்க்கிடக்கும். ஆரும் அதைச்சீண்டியே பாக்கிறதில்ல. அதெல்லாம் அப்பிடியே முளைச்சுப் பனங்காடாக வளருது. இப்பிடி வளர்ந்தால், ஒரு ஒழுங்குக்கும் வராது. பிரயோசனமில்லாமப் போயிடுமண்ணை. ஆனால், இதைப்பற்றி ஆருக்குத்தான் அக்கறையிருக்கு? ஏதோ நெடுந்தீவுப்பக்கத்திலயும் பூநகரி, பளை பக்கத்திலயும்தான் கொஞ்சப் பேராவது பனையோட மினக்கெடுகினம். மற்றவைக்கெல்லாம் பனைக்குக் கீழ நிற்கிறதே வெட்கமாய்ப்போச்சு...” என்றான்.

நான் எதிர்பார்த்ததை விட பனையைப் பற்றிய விளக்கமும் எங்களுடைய இன்றைய சூழலைப்பற்றிய தெளிவும் அவனிடம் இருந்தது. அவனுக்குப் பதில் சொல்வதற்கு நான் விரும்பவில்லை. என்னுடைய அவதானமும் இதுவே.

முன்பென்றால், தை, மாசிகளில் எல்லோருடைய முற்றங்களிலும் ஒடியலும் புளுக்கொடியலும் காயும். இந்த மாதங்களில் பனங்கிழங்கு அவிக்காத வீடுகளே இருக்காது. காய்ந்து கொண்டிருக்கும் புளுக்கொடியலைக் கொடியிலிருந்து எடுத்துக் கொண்டு விளையாடச் செல்லாத சிறுவர்களே அந்த நாளில் இருந்ததில்லை. மாலைத்தேநீருடன் கூடி உண்ணுவதற்குப் புளுக்கொடியல் மா உருண்டை இருந்தது.

அநேகமான வீடுகளில் மாலை வேளையில் பனங்கிழங்குத் துவையல் செய்வார்கள். வெள்ளைப்பூடு, செத்தல் மிளகாய், மிளகு, உப்பு, முறிக்கப்பட்ட பனங்கிழங்கு, இவ்வளவையும் உரலில் போட்டுத் துவைப்பார்கள். இப்போது இந்தச் செய்முறையைப் பற்றி யாருக்குத்தான் தெரியும்? எந்தத் தொலைக்காட்சியிலும் இப்படியொரு உணவு இருக்கிறது, இருந்தது என்று காண்பித்ததை நான் அறிந்ததில்லை.

இளைய தலைமுறைக்கு பனையின் பண்டங்கள் பலதைப் பற்றித் தெரியாது. அருந்தலாகச் சில வீடுகளில் ஒடியல் கூழ் காய்ச்சப்படுகிறது. எங்கேனும் சில கடைகளில் ஒடியற் கூழ் விற்பனையும் உண்டு. ஆனால், சமூகப் பழக்கத்திருந்து பனை மெல்ல மெல்ல விலக்கப்பட்டுக்கொண்டேயிருக்கிறது.

முன்னரெல்லாம் ஒடியல் பிட்டு இல்லாத நாளே இல்லை என்ற காலம் ஒன்று இருந்தது. அதிலும் மீன் போட்டு அவிக்கும் பிட்டு, கீரை போட்டு அவிக்கும் பிட்டு, தேங்காய்ப்பூவுடன், சீனியோ சர்க்கரையோ பனங்கட்டியோ சேர்த்து உண்ணும் பிட்டு, தனியாக மீன் குழம்போடு சேர்த்துச் சாப்பிடும் பிட்டு என்று அதிலேயே நான்கு ஐந்து வகையிருந்தது. இன்று இதெல்லாம் இருக்கா? எத்தனை வீடுகளில் இந்த மாதிரியான உணவுப் பழக்கம் உண்டு? நம் பிள்ளைகளுக்கு இதில் எத்தனையை அறிமுகப்படுத்தியிருக்கிறோம்!

சைனீஸ், தாய்வான், இந்திய, மேற்குலக உணவுகளைப் பழக்கும் ஆர்வம் நம்முடைய உணவைப் பழக்குவதில் இல்லை. இவ்வளவுக்கும் “பனை எங்கள் அருஞ்செல்வம்” என்று மட்டும் சொல்லிக் கொள்கிறோம். “பனை கற்பக தரு. பனை எங்கள் அடையாளம்” என்ற பெருமிதங்கள் வேறு.

அப்போது தை, மாசி மாதங்கள் பிறந்து விட்டால் வயல் அறுவடையோடு பனம் பாத்தி கிண்டுவதும் நடக்கும். அறுவடைக்கு வருகின்றவர்கள், பனங்கிழங்கோடுதான் இரவுப் பொழுதைப் போக்குவார்கள். பலதையும் பத்தையும் பேசிக்கொண்டே பனங்கிழங்கைச் சாப்பிடுவார்கள். அல்லது பனங்கிழங்கோடு பலதும் பத்தும் பேசப்படும். சந்தைகளிலும் பனங்கிழங்கு வியாபாரம் களை கட்டியிருக்கும். அதிலும் பளை, பரந்தன், கிளிநொச்சி, முறிகண்டிப்பகுதிகளில் பனங்கிழங்கு விற்பனை அபாரம். பஸ்களில் பயணம் செய்கின்றவர்கள் பனங்கிழங்கில்லாமல் அந்த நாட்களில் பயணித்ததில்லை.

எங்களுடைய வீட்டில் சுமார் முப்பதுக்குக் குறையாக பனம் பாத்திகள் எப்போதுமிருக்கும். அத்தனை பாத்திகளையும் கிண்டி, அவற்றின் கிழங்குகளை ஒடியலாகவும் புளுக்கொடியலாகவும் போடுவதற்கு மூன்று நான்கு பேர் வேலை செய்வார்கள். தோலுடன் உள்ள கிழங்கை எடுத்துப்போவதற்கு தென்பகுதியிலிருந்து ஆட்கள் வருவதுண்டு. அதை விட அவித்த கிழங்கைச் சந்தைக்குக் கொண்டு போய் விற்பதுமுண்டு. சந்தைகளில் தாராளமாக கிழங்கை விற்கலாம். கூறு கூறாக விற்பார்கள். நானே கூறுகளை வைத்துக் கூவி விற்றிருக்கிறேன்.

வயற்கரையில் உள்ள பாத்திக் கிழங்கு மாப்பிடிப்புக் கூட. அது இருவாட்டி மண் என்பதால் கிழங்கில் மாப்பிடிப்பு அதிகமாக இருக்கும். ஆனால், அந்தப் பாத்திகளைப் பாதுகாத்து எடுப்பது பெரிய பாடு. வயற்கரையில் சன நடமாட்டமோ குடியிருப்புகளோ இல்லை என்பதால், பன்றிகள் பாத்தியைப் பதம் பார்த்து விடும்.

18 ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதிப் புலி

## குருவுக்கு சளைக்காத சீடன்



### பிரிகேடியர் தீபன்

தீபன் பெயரைக் கேட்டாலே இலங்கை இராணுவம் தொடை நடுங்கும் அத்தகைய பெருவீரன் அவர். ஆனால் மிக மென்மையான உள்ளம் கொண்டவர். அவரின் குரலும் அத்தகைய மென்மையானது. தனது வீரர்கள் மீது மிகுந்த அன்பு கொண்டவர். மிகவும் பணிவான போக்கைக் கொண்ட தீபன் முன்னாள் பெண் போராளி ஒருவரை திருமணம் செய்துகொண்டார். தலைவர் பிரபாகரன் மீது மிகுந்த விசுவாசம் கொண்டவர்.தெற்காசியாவில் மிகச்சிறந்த இராணுவ நிபுணர் பால்ராஜ் என சர்வதேசங்களை புகழ்ந்துள்ளன. அந்த சமர்க்கள நாயகனுக்கு சற்றும் சளைக்காத துணை நாயகன் பிரிகேடியர் தீபன்.

குருவுக்கு சற்றும் சளைக்காத சீடர்களை இதிகாசங்கள், புராணங்களில்தான் நாம் அறிந்திருப்போம். ஆனால் எம் காலத்திலும் அவ்வாறானவர்கள் இருந்தார்கள் என்றால் அது சமர்க்கள நாயகன் பிரகேடியர் பால்ராஜூம் அவரின் சீடன் பிரிகேடியர் தீபனும்தான்.

கண்டாவளையை சொந்த இடமாகக் கொண்ட தீபனின் இயற்பெயர் வேலாயுதபிள்ளை பகீரதகுமார். 1966 ஜனவரி 8 ஆம் நாள் பிறந்தார். சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் உயர்தரம் வரை கல்வி கற்றார். தென்மராட்சிப் பிரதேசப் பொறுப்பாளராக இருந்த மேஜர் கேடில்ஸூக்கு வெளியில் இருந்து பல உதவிகளை செய்தமையால் 1984 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைய அனுமதிக்கப்பட்டார்.

அடிப்படைப் பயிற்சிகளின் பின்னர் புலிகளின் துணைத் தலைவரான மாத்தையாவின் மெய்ப் பாதுகாவலராக இருந்து பிரதான மெய்ப் பாதுகாவலரானார். மாத்தையா பிரச்சினையின் பின்னர் பிரிகேடியர் பால்ராஜின் பாசறையில் சிறந்த அணித்தலைவராக வளர்ந்து தளபதிகளில் ஒருவரானார். இந்திய இராணுவத்துக்கு எதிரான போரின்போது 1987 ஆம் ஆண்டு கிளிநொச்சி மாவட்டப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார். இக்காலத்தில் இவரின் சகோதரரான சிவகுமாரும் போராட்டத்தில் இணைந்தார். பின்னாளில் லெப்.கேணல் கில்மன் என்ற இயக்கப் பெயருடன் சார்ள்ஸ் அன்ரனி படையணியின் தளபதியாகவும் திருகோணமலை மாவட்டப் பொறுப்பாளராகவும் இருந்தார்.

தளபதி பால்ராஜூடன் இணைந்து பல தாக்குதல்களை நடத்தி வெற்றிக் கொடிகளை நாட்டிய தீபன். பிறகு மன்னார் தவிர்ந்த வன்னிப் பிரதேச தளபதியாக நியமிக்கப்பட்டார். மண்கிண்டிமலை முகாம் தகர்ப்பைத் தொடர்ந்து, சார்ள்ஸ் அன்ரனி படையணியின் சிறப்புத் தளபதியானார். 1993 பூநகரி படைத்தளத்தைக் கைப்பற்றுவதற்கானஒப்ரேஷன் தவளை தாக்குதல் தளபதிகளில் ஒருவரானார். தொடர்ந்து யாழ். மாவட்டத் தளபதியாக நியமிக்கப்பட்டார். யாழ்ப்பாணத்தை தக்க வைக்கமுடியாது தோல்வியடைந்தபோதும் 1996 மாவீரர் நாள் வரை யாழ்ப்பாணம் பறிபோய்விடக்கூடாது என்பதில் உறுதியாகவிருந்து அதனை சாதித்தார். பால்ராஜின் வழிநடத்தலில் தளபதி தீபன் முல்லைத்தீவைக் கைப்பற்ற பெரும் பங்காற்றினார்.

இலங்கை இராணுவம் முன்னெடுத்த நடவடிக்கைகளில் தலையாயனது ஜெயசிக்குறு பெரும் சமர். சுமார் ஒன்றரை வருடங்கள் நீடித்த இந்தப் போருக்கு எதிரான முறியடிப்புத் தாக்குதலை வழிநடத்திய தளபதிகளில் ஒருவராக காத்திரமான பங்களிப்பை வழங்கினார். தொடர்ந்து ஓயாத அலைகள் 2 தாக்குதல் மூலம் கிளிநொச்சியைக் கைப்பற்றுவதற்கான முக்கிய தளபதியாக தீபன் இருந்தார். 2000 ஆம் ஆண்டு ஆனையிறவுத் தளத்தைக் கைப்பற்ற தலைவர் பிரபாகரன் திட்டம் தயாரித்தபோது அவரின் முதல் தெரிவாக இருந்தவர் தளபதி பால்ராஜ். அவர் குடாரப்பு தரையிறக்கத்தை வெற்றிகரமாக செய்து சண்டைக்களத்தைத் திறந்தார். தொடர்ந்து முன்னேறி இத்தாவிலில் பெட்டியடித்து போரிட்டார்.

இதன்போது செம்பியன்பற்று தொடக்கம் வெற்றிலைக்கேணிவரை நிலைகொண்டிருந்த படைகளை விரட்டியடித்தார். ஆனையிறவுக்குள் நுழைந்த படைகள் பின்னோக்கி ஓடி இத்தாவிலில் பொறிக்குள் சிக்கி சின்னாபின்னமாகின. தொடர்ந்து தீச்சுவாலை நடவடிக்கை முறியடிப்பு தாக்குதலின் தளபதியானார். சமர்க்கள நாயகன் பால்ராஜ் காயம், நோயால் களத்தில் இருந்து அகலும் வேளையில் எல்லாம் அவரின் இடத்தை சீடன் தீபன் நிரப்புவார். தனக்கு அடுத்த கட்டளைத் தளபதியாக பால்ராஜை தலைவர் பிரபாகரன் நியமிக்க, வடபோர்முனை கட்டளைத் தளபதியாக பிரிகேடியர் தீபனே நியமிக்கப்பட்டார்.

இறுதிப் போர் நடவடிக்கையின் போது மூன்று தடவைகள் படுகாயமடைந்து களத்திலிருந்து அகற்றப்பட்டவர் தீபன். இக்காலத்தில் கிளிநொச்சியை இழக்காமல் தக்கவைக்க மண் அணை அமைத்து பலமாதங்கள் போரிட்டவர் தீபன். ஆனந்தபுர சமரின் போதும் அடுத்தடுத்த நாள்கள் பலத்த காயங்களுக்கு இலக்கானார். அந்தக் காயங்களுடனேயே நின்று கட்டளைகளைப் பிறப்பித்துக் கொண்டிருந்தபோது இராணுவத்தின் நயவஞ்சகமான நச்சுக் குண்டுத் தாக்குதலில் வீரகாவியமானார் பிரிகேடியர் தீபன்.

இலங்கைப் போர்க்களத்தில் புலிகள் பயன்படுத்திய போர் உத்திகள் புதிரானவை, உலக இராணுவங்களின் கவனிப்பைப் பெற்றவை. மண் அணை அமைத்து அதையே அரணாகப் பயன்படுத்தி சமராடும் உத்தியை பிரிகேடியர் தீபனே அறிமுகப்படுத்தினார். இந்த உத்தியை உடைக்க இலங்கை இராணுவத்துக்குப் பல மாதங்கள் பிடித்தன.

## தடைகள் தகர்க்கும் தளபதி



### பிரிகேடியர் மணிவண்ணன்

கிட்டு பீரங்கிப் படையணியின் தளபதி பிரிகேடியர் மணிவண்ணன். கேணல் ராயுவின் வீரச்சாவின் பின்னர் அந்தப் பொறுப்பில் தலைவரால் நியமிக்கப்பட்டவர்.

நகரும் படையணிகளுக்கு ஆதரவாக பீரங்கி சூட்டு ஆதரவு வழங்குவதில் மிகத் திறமையானவர். தனது படையணியில் பல திறமையான சூட்டதரவு வழங்கும் வீரர்களை உருவாக்கியிருந்தார். கூடவே மோட்டர் தாக்குதலுக்கும் திறமையான வீரர்களை உருவாக்கியவர்.

1996 ஆம் ஆண்டு முல்லைத்தீவு தளம் மீதான தாக்குதலிலேயே புலிகள் பீரங்கி பலத்தை எட்டினர். அங்கு கிடைத்த இரு பீரங்கிகளைக் கொண்டுதான் கிட்டு பீரங்கிப் படை தோற்றம் பெற்றது. அப்போது அதன் தளபதியாக கேணல் ராயு இருந்தார்.

அவரின் கீழிருந்து வளர்ந்தவர்தான் மணிவண்ணன் எதிரிகளின் இலக்குகள் மீது துல்லியமாக தாக்குதல் நடத்தியும், நகரும் புலிவீரர்களின் தடைகளை தகர்த்தெறியவும் பீரங்கிகளை பயன்படுத்தியிருந்தார். பீரங்கிகள் விடுதலைப் போராட்ட பயணத்தில் புதிய பரிணாமத்தை எட்டச் செய்தன. இதற்கு மூல காரணமானவர்கள் கேணல் ராயுவும் பிரிகேடியர் மணிவண்ணனுமே.

ஆனந்தபுரத்தில் பீரங்கிகள் மூலம் இராணுவத்துக்கு மோசமான அழிவுகளை ஏற்படுத்தியபோதும், வெற்றியைப் பெற்றுக்கொடுக்க முடியவில்லை. தீரமான முறியடிப்புத் தாக்குதலை மேற்கொண்ட தளபதிகளுடன் இந்தத் தளபதியும் காவியமாகிப் போய் விட்டமை எம் தேசத்தின் துயரமே.



ஆனந்தபுரம்... ஈழத் தமிழர்
இங்குதான் எங்களின் வீரத் தளபதி
துர்க்கா, விதுஷா வீரகாவியமாகின
மறுக்கப்பட்டு, அடக்குமுறைகளைய
புலியான இளைஞர்களின் கைகள்

தாயகத்தை ஆக்கிரமித்து நின்ற
தொடங்கின. புலிகளின் கைகள் ஓ
தாயகத்திலிருந்தும் ஆக்கிரமிப்பின்
கட்டப் போர்களின் முடிவில் புலிகளி
வந்து விழுந்தன. இதற்காக நாம் கெ
வேதனைகளும் சொல்லுமளவு அ

தொடங்கியது 4 ஆம் கட்ட ஈழப்
வலுமிக்க நாடுகளின் ஆதரவும் கெ
பொருதியது சிங்களம். யுத்தநெறி
எதையுமே பின்பற்றாது போர் செய்
தனித்து நின்று போராடியது தமிழர்
ஆயுத வளம் மட்டுமல்ல வீரர்களும்

30 வருடம் சளைக்காது போர்
காத்த மறவர்கள் தொடர்ந்து பின்
படை. இனிப் பின்னகர்ந்தால் கட்டிக்
இழந்து விடுவோம் என்பதை உணர்
இராணுவத்தை எதிர்கொள்ளவும் மு
இறுதித் தாக்குதல் திட்டம் ஒன்றை
அனைத்து வளங்களும் ஆனந்தபு

இராணுவமோ புலிகள் ஆனை
பெட்டிச் சமர் நடவடிக்கையைப் பின்
தலைவர் பிரபாகரனையும் ஏனைய
அனுப்பவும் திட்டம் தீட்டப்பட்டது. த
மணிவண்ணன், துர்க்கா, விதுஷா,
தாக்குதல் தொடர்ந்தது. துணிவும் -
ஒன்றிணைவு எதிரிகளுக்கு அச்சத்
கொடுத்தது. வேகமும் தீரமும் மிக்க
எதிர்கொள்ள முடியவில்லை. இதன
அனைத்தையும் கவனத்தையும் அ

துப்பாக்கி சூட்டுத் தாக்குதல் போ
தாக்குதல் நடத்தப்பட்டது. இதற்குப்
தாக்குதலும் நடத்தப்பட்டது. இதனா
வீழாத இடங்களே இல்லை எனலா
பிரபாகரன், பிரிகேடியர் பானு ஆகி
வியூகத்தை உடைத்துக் கொண்டு
தீபன், பிரிகேடியர் கடாபி அல்லது
பிரிகேடியர் துர்க்கா, பிரிகேடியர் வித
மேற்பட்டோர் வீரவேங்கைகளாகின

இந்த முதன்மைத் தளபதிகளின்
ஆயுதப் போராட்டத்தை மௌனிக்க
ஒலித்து ஓய்நதது.துயர வரலாறே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ப்பாய்ச்சல்



தீராத் துயர் தந்த புரம். ஆம்,
தீபன், கடாபி, மணிவண்ணன்,
ழத் தமிழினம் உரிமைகள்
சித்திரவதைகளையும் சந்தித்தபோது
யுதங்களை ஏந்தின.

ராணுவத்தின் மீது போர்கள்
ன - களங்கள் விரிந்தன.
ல்கள் அகலத் தொடங்கின. 3
கழுத்தில் வெற்றிமாலைகள்
த்த விலைகளும் - வலிகளும் -

ர், பெரும்படையும், வளமும்
டும் எங்கள் வீரமறவர்களுடன்
- இராணுவ ஒழுக்கம் என
இராணுவம். எந்தத் துணையுமின்றி
ட. துரோகங்களால் சுருங்கியது
ன்.

து தாயகத்தையும் மக்களையும்
கியதில் வீரம் கண்டது சிங்களப்
ந்த - காக்கும் அனைத்தையும்
ார் தலைவர் பிரபாகரன்.
ணேறும் படைகளை முறியடிக்கவும்
ருந்தார். இந்தத் தாக்குதலுக்காக
ல் ஒன்றிணைக்கப்பட்டன.

வுத் தாக்குதலில் பயன்படுத்திய
ியது. இந்தச் சமரை உடைக்கவும்
பதிகளையும் வேறு இடத்துக்கு
களான தீபன், கடாபி,
ு ஆகியோரின் வழிநடத்தலில்
மும் மிக்க தளபதிகளின்
ும் புலிகளுக்கு உற்சாகத்தையும்
ப்பாய்ச்சலை இராணுவத்தால்
தனது உச்சகட்ட வளங்கள்
தபுரம் மீது திருப்பியது இராணுவம்.

செறிவான பீரங்கி சூட்டுத்
ணியாக செறிவான எறிகணைத்
னந்தபுரத்தில் எறிகணைகள்
ந்த நிலையில் தலைவர்
எதிரியின் பெட்டிச் சமர்
ியேறினர். ஆனால் பிரிகேடியர்
வன், பிரிகேடியர் மணிவண்ணன்,
ஆகியோருடன் இருநூறுக்கும்

ணம் விடுதலைப் புலிகளின்
ப்வதற்கான முன்னாயத்த மணியாக

## தலைவனைக் காத்தவர்

குறி பார்த்து சுடுவதில் அசாகயசூரன் பிரிகேடியர் கடாபி அல்லது ஆதவன். யாழ்ப்பாணம் வடமராட்சி வதிரியை சொந்த இடமாகக் கொண்ட இவர் 1984 களில் புலிகள் அமைப்பில் இணைந்து கொண்டார்.

இந்தியாவில் லெப்.கேணல் பொன்னம்மானின் கீழ் பயிற்சி பெற்றார். விமான எதிர்ப்பு ஏவுகணைப் பயிற்சிக்காக தெரிவான 10 வீரர்களில் இவரும் ஒருவர். கடாபியின் குறிபார்த்து சுடும் திறமை கண்டு வியந்த பொன்னம்மான் அவரை, தலைவர் பிரபாகரனுக்கு அறிமுகப்படுத்தினார். அன்று தொடக்கம் தலைவரின் மெய்ப்பாதுகாவலர்களில் ஒருவரானார். தமிழகத்தில் தாயகம் திரும்பிய தலைவர் பிரபாகரனுக்கு தொடர்ந்தும் பாதுகாவலராக கடாபி விளங்கினார்.

விமான எதிர்ப்பு எவுகணைகளை செலுத்துவதில் வல்லவரான இவர் இரண்டாம் கட்ட ஈழப்போர் தொடங்கிய சமயம் இராணுவத்தினரை பலாலிக்கு ஏற்றி வந்த அவ்ரோ விமானங்கள் இரண்டை சுட்டு வீழ்த்தியிருந்தார். இந்த விமானங்கள் பலாலி, நவக்கிரியில் வீழ்ந்தன. சுமார் 80 இற்கும் அதிகமான இராணுவத்தினர் இச்சம்பவங்களில் பலியாகினர்.

1995 ஆம் ஆண்டு இம்ரான் - பாண்டியன் படையணிக்கு சிறப்புத் தளபதியாக நியமிக்கப்பட்டார். இதன்போது தலைவரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் பல படையணிகளை கடாபி உருவாக்கினார். கரும்புலிகள் அணி, விக்ரர் கவச எதிர்ப்பு அணி, மயூரன் பதுங்கிச் சுடும் அணி, செம்பியன் வேவு அணி, சங்கர் ஆழ ஊடுருவும் அணி, ராதா வான்காப்பு அணி எனப் பல படையணிகள் இவரின் தலைமையிலேயே உருவாக்கப்பட்டன. தலைவரின் எண்ணத்திற்கு அமைவாக படையணிகளுக்கான படையப் பயிற்சிக் கல்லூரிகள், படைக்கட்டுமானங்கள் இவரின் கீழேயே நிர்வகிக்கப்பட்டன. தாக்குதல்கள் தொடர்பான ஆவணமாக்கலுக்கும் கடாபியே பொறுப்பாக இருந்தார்.

இவர் ஆவணமாக்கும் அறிக்கைகளே படையப் பயிற்சிக் கல்லூரிகளில் போதிக்கப்படுவதால் அறிக்கைகள் தெளிவாகவும் புரிவதற்கு இலகுவாகவும் இருக்க வேண்டும் என்பதில் கண்டிப்பாக இருப்பார்.

போரிடும் வீரர்களை தயார் செய்வதில் அதிக காலம் செலவழித்த கடாபி, தலைவருக்கு பாதுகாப்பு அளிக்கும் இம்ரான் - பாண்டியன் படையின் அணியினரையும் தயார் செய்வதில் அதிக சிரத்தை எடுத்து வந்தார்.

தலைவரின் மிக நம்பிக்கையான போராளியாக - தளபதியாக - போர் ஆசானாக பன்முக தன்மையுடன் விளங்கிய பிரிகேடியர் கடாபி ஆனந்தபுரம் களத்தில் படுகாயமடைந்தார். இவரைக் காப்பாற்றுவதற்கான முயற்சிகளை புலிவீரர்கள் மேற்கொண்ட போதும், இக்கட்டான நிலையில் தனக்காக வீரர்கள் இறக்கக்கூடாது என்பதற்காக சயனைட் உட்கொண்டு வீரவரலாறானார் பிரிகேடியர் கடாபி.



### பிரிகேடியர் ஆதவன்

பிரிகேடியர் கடாபி கண்ணாடியில் இலக்கைப் பார்த்தவாறு குறி தவறாது சுட வல்லவர். தலைவரின் பாதுகாப்பில் அதீத அக்கறை எடுத்த இவர், அவர் மீது தீவிர அன்பும் விசுவாசமும் கொண்டவர். தலைவர் பிரபாகரன் வைத்த குறியில் இருந்து எதுவுமே தப்புவதில்லை. துல்லியமாக சுடுவதில் அவரை அசைக்க எவருமே இல்லை எனலாம். பயிற்சியின் போது வீரர்களுடன் போட்டியிடுவது தலைவரின் வழமை. ஒரு முறை கடாபியும் தலைவரும் போட்டியிட்டுக் கொண்டபோது தலைவர் வைத்த குறி ஒன்று தவறி விட்டது. போட்டியாளரான கடாபியின் குறியும் தவறியது. ஆனால் அதனை அவர் வேண்டுமென்றே தவறாக குறிவைத்திருந்தார். இதை அவதானித்த தலைவர் "ஏன் இப்படி செய்தாய்" எனக் கேட்க, கடாபியோ "தலைவரை ஒருபோதும் நான் விஞ்சமாட்டேன்" எனக் கூறினாராம்.

## பெண் வீரர்களின் மூத்த தளபதி



### பிரிகேடியர் விதுஷா

பதினேழு வயதில் தாயக விடுதலைக்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர் பிரிகேடியர் விதுசா.

1969 செப்ரெம்பர் 29 ஆம் நாள் வடமராட்சி கப்பூதுவில் பிறந்த ஞானபூரணி நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் உயர்தரக் கல்வியைத் தொடர்ந்த போது 1986 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்து கொண்டார்.

மகளிர் இரண்டாவது பாசறையில் பயிற்சி எடுத்த விதுசா ஒப்ரேசன் லிபரேசன் தாக்குதலில் பங்கெடுத்தார். இதுவே அவரின் முதல் தாக்குதல். 1988 ஆம் ஆண்டு பெண்கள் போராளிகளுக்கான பயிற்சிப் பாசறைகளை பொறுப்பேற்று நடத்தினார். இவரின் கீழேயே பிரிகேடியர் துர்க்கா பயிற்சி பெற்றார்.

கொக்காவில் முகாம், யாழ். கோட்டை தாக்குதல்களில் சிறப்பாக செயற்பட்டமையால், ஆகாயக் கடல் வெளி (18ஆம் பக்கம் பார்க்க)

## தாய்மைக் குணம் கொண்டவர்

### பிரிகேடியர் துர்க்கா



மெல்லிய, சற்றுக் குள்ளமான தோற்றம் கொண்டவர். மென்மையான பேச்சும் தம்மை சந்திக்க வருவோரை எழுந்து நின்று வரவேற்கும் பண்பும் உடையவர். குறி பார்த்து சுடுவதில் மிக வல்லவரான இவர் அதற்காக தலைவர் பிரபாகரனிடம் விருதுகள் பல வென்றவர். அதிகாலையே துயிலெழும் பழக்கம் கொண்ட இவர் யோகாசனம் செய்வதை வழக்கமாக கொண்டவர். போரில் வீரத்தை வெளிப்படுத்தும் அதேவேளை முகாம்களை அழகுபடுத்துவதிலும், போர் வீராங்கனைகளுக்கு தேவையானவற்றை பெற்றுக் கொடுப்பதிலும் தீவிரமாக இருந்து ஒவ்வொன்றையும் பார்த்துபார்த்து செய்பவர்.

போர் என்பது ஆண்களுக்கு மட்டும் உரியதல்ல பெண்களுக்கும் உரியதே என்பதை நிருபித்த தளபதி பிரிகேடியர் துர்க்கா. போரிலே போராளிகளின் இன்னொரு தாயாகவிருந்து வழிநடத்தியவர். 1971 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் பிறந்தவர். 1989 ஆம் ஆண்டு தன்னைப் போராளியாக்கிக் கொண்டார். (18ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## தொழிலும் விளம்பரமும்

தனித் தொழில் என்றால் அதற்கு ஆரோக்கியமான அளவில் வாடிக்கையாளர்கள் இருக்க வேண்டும். நம் தொழில் வளர வளர வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையும் வளர வேண்டும். நம் தொழிலுக்கு ஏற்ற வாடிக்கையாளர்களைப் பெறுவதற்குத் தரமான பொருள், தரமான சேவை மிகவும் முக்கியம். ஆனால், இவை இரண்டும் மட்டுமே நம் இலக்கை அடையவோ, மேலும் வளரவோ போதாது.

"நம்மை யாரும் ஹீரோவாக்கமாட்டார்கள். நாமாகத்தான் ஆகணும்" என்று ஒரு படத்தில் வருகிற வசனம் மாதிரி, மக்கள் நம்மைத் தேடி வர மாட்டார்கள். நாம் தான் அவர்களைத் தேடிச்செல்ல வேண்டும். அதற்கு விளம்பரம் மிகவும் முக்கியம். அந்த விளம்பரம் வெறும் விளம்பரமாக மட்டுமே இருக்கக்கூடாது. அது தனித்துவமானதாக இருக்க வேண்டும்.

### விளம்பரங்களின் வகைகள்!

விளம்பரங்கள் பல வகைப்படும்.

1. துண்டுப்பிரசுரம்
2. சுவரொட்டி, பதாதைகள்
3. வானொலி, தொலைக்காட்சி விளம்பரம்
4. நாளிதழ்கள், வார, மாத இதழ்கள்
5. சமூக வலைதளங்கள்
6. விளக்க கையேடு
7. ட்ஜிட்டல் டிஸ்ப்ளே
8. மக்கள் கூட்டங்களை ஏற்பாடு செய்தல்
9. கூகுள் விளம்பரங்கள் என பல வகைகள் உள்ளன.

## யாருக்கு எந்த விளம்பரம்?

எல்லோருமே எல்லா விளம்பரங்களையும் செய்யலாம் என்றாலும், ஆரம்பத்தில் தொழில் தொடங்குபவர்களும், சிறிய அளவில் தொழில் செய்பவர்களும் வானெலி, தொலைக்காட்சி விளம்பரங்கள் மற்றும் டிஜிட்டல் டிஸ்ப்ளே போன்றவற்றுக்காக அதிகம் செலவு செய்யாமல், துண்டுப்பிரசுரம் கொடுப்பது, சுவரொட்டி ஒட்டுவது, சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்துவது போன்ற விளம்பர உத்திகளைக் கையாளலாம்.

நன்றாகத் தொழில் செய்துகொண்டிருப்பவர்கள், வானொலி, தொலைக்காட்சி டிஜிட்டல் டிஸ்ப்ளே போன்றவற்றுக்கு செலவு செய்யும் பணம் தங்கள் கையைக் கடிக்காது என்ற நிலையில், இந்த விளம்பர உத்திகளைச் செயல்படுத்தலாம். ஆனால், இதிலும் கொஞ்சம் வித்தியாசமாக யோசித்தால், செலவையும் குறைத்து, பலரது கவனத்தையும் பெறலாம்.

நாளிதழ்கள், வார, மாத இதழ்கள் போன்றவற்றில் தாராளமாக விளம்பரம் கொடுக்கலாம். புதிதாக தொழில் தொடங்கியவர்கள் சிறிய அளவில் கறுப்பு, வெள்ளை நிறத்தில் கொடுத்தால் போதும். மேலும், ஒருமுறை கொடுத்து விட்டு நிறுத்திவிடக் கூடாது. மக்கள் மனதில் எப்போதும் விளம்பரங்கள் முதன்முறை தாக்கத்தை ஏற்படுத்துவதில்லை. எனவே, தொடர்ந்து சில வாரங்களுக்குக் கொடுக்க வேண்டும். இதழ்களில் இருக்கும் விளம்பர தலைப்புகளையும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

உங்களுடைய விளம்பரத்தை மக்கள் கூடும் இடங்களில் செய்வதன் மூலம் நேரடியாகவே வாடிக்கையாளர்களைச் சென்றடையும்படி செய்ய முடியும். ஆனால், அதற்கு ஓரளவுக்கு செலவு செய்ய வேண்டி வரும். அல்லது பிறர் ஏற்பாடு செய்யும் கூட்டங்களில் அனுமதி பெற்று உங்களுடைய விளம்பரத்தை நீங்கள் செய்ய லாம். மேலும், நீங்கள் கொடுக்கும் விளம்பர துண்டுப் பிரசுரங்களைக் கூட்டம் ஆரம்பிக்கும் போது கொடுக்க வேண்டும். கூட்டத்தில் அமர்ந்திருக்கும் போது அவர்களுக்கு துண்டுப் பிரசுரம் பார்க்க நேரம் இருக்கும். கூட்டம் முடிந்து செல்லும் போது துண்டுப்பிரசுரம் கொடுத்தால், நிச்சயம் எறிந்துவிட்டுப் போய் விடுவார்கள். எனவே, அவசர அவசரமாக செல்பவர்களிடம் துண்டுப் பிரசுரம் கொடுப்பதும் வீண் தான்.

## புரோச்சர்கள் அவசியமா?

புரோச்சர்கள் (brochure) எல்லா தொழிலுக்கும் தேவை இல்லை. தொழிலிருந்து தொழிலுக்கு வகை தொழில்களுக்குக் கட்டாயம் இது அவசியம். கன்ஸ்யூமர் பொருட்களுக்கு இது அவசியம் இல்லை. அதற்கு துண்டுப்பிரசுரம், சுவரொட்டிகள் போன்றவையே போதுமானது.

புரோச்சர்கள் A4, அல்லது A3 அளவில் பொதுவாக உருவாக்கப்படுகின்றன. உற்பத்திகளைப் படம் எடுத்து பவர் பொயின்ட் போன்றவற்றில் போட்டு, நீங்களே புரோச்சர்களைத் தயார் செய்யலாம். இன்னும் அழகாக வேண்டும் என்றால், டிசைனரிடம் கொடுத்து உருவாக்கலாம். சொல்ல வந்த விடயத்தை அழகாகவும், எளிதில் புரிந்துகொள்ளும் வகையிலும் புரோச்சர்களை உருவாக்க வேண்டும். புரோச்சர்களைகூட ஆரம்பத்தில் குறைவாகவே அச்சிடுவது நல்லது.

மூன்று மாதத்துக்கு எத்தனை வாடிக்கையாளர்களைப் பார்க்கப் போகிறோம் என்று கணக்கிட்டு, அதற்கேற்ப அச்சிட்டால் போதும். வேண்டும் என்றால் பின்னர் தேவைப்படுகிற அளவுக்கு அச்சிடலாம். மேலும், பார்க்கிற எல்லோரிடமும் புரோச்சர்களைத் தந்து வீணாக்கக்கூடாது.

## சுவரொட்டிகளை எங்கே ஒட்ட வேண்டும்?

துண்டுப் பிரசுரம், சுவரொட்டிகள் மற்றும் பதாகைகள் ஆகிய மூன்றில் சுவரொட்டியை விட மற்ற இரண்டும் நல்ல பலனைத் தரும். விநியோகிக்கப்படும் சுவரொட்டிகளை தொந்தரவாகவே மக்கள் பார்க்கிறார்கள். ஆனால், சுவரொட்டிகள் மற்றும் பதாகைகள் அவர்களைக் கவரும் வகையில் உருவாக்கினால் போதும். நல்ல பலனைப்பெற முடியும். சுவரொட்டிகளும் பதாதைகளும் மக்கள் பார்வையில் படும் இடங்களில் இருக்க வேண்டும். உதாரணமாக, பாலத்தின் இறக்கத்தில், பாலத்தின் அருகில் உள்ள கட்டடத்தின் மாடியில், நெடுஞ்சாலையில் 20 அடி உயர்த்துக்கு மேல் பதாகைகளை வைக்க வேண்டும். அதே போல், சுவரொட்டிகளை ஒட்டும் போது 20 சுவரொட்டிகளை, ஒன்றாக ஒட்ட வேண்டும். சுவரொட்டிகள், பதாகைகள் வைக்கும் போது, அதன் வாடிக்கையாளர்கள் யார் என்பதைப் பொறுத்து இடத்தைத் தேர்வு செய்ய வேண்டும். பள்ளிக் குழந்தைகளுக்கான விளம்பரமாக இருந்தால், பள்ளிக்கூடங்களில் அருகில் வைக்க வேண்டும். மேலும், கல்லூரி வாசல், பேருந்து நிறுத்தத்துக்கு எதிரில் இடங்களைத் தேர்வு செய்யலாம்.

## சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்துவது எப்படி?

சமூக வலைத்தளங்கள் 21 ஆம் நூற்றாண்டில் தொழில் செய்பவர்களுக்குக் கிடைத்த வரம் என்று சொல்லலாம். மிகக் குறைவான செலவில் அதிக பேரைச் சென்றடையக் கூடிய இடமாக சமூக வலைத்தளங்கள் உள்ளன. ஆனால், இவற்றிலும் வித்தியாசமான அணுகுமுறை நிச்சயம் தேவை. சமூக வலைத்தளங்களில் நமக்காக ஒரு பக்கத்தைத் தொடங்கி, அதில் முதலில் நம்முடைய உற்பத்தியின் பெயர், நிறுவனப் பெயர் ஆகியவற்றை சுவரொட்டிகள், பதாகைகளுக்காக வடிவமைப்பு செய்வது போலவே உருவாக்கிப் பதிவேற்ற வேண்டும். பின்னர் தொடர்ந்து அதில் அக்டிவ்-ஆக இருக்க வேண்டும்.

## விளம்பரத்தின் டிசைன்!

விளம்பரங்களை வடிவமைக்கும் போது உங்களுடைய தொழில் வகைக்கு ஏற்ப வடிவமைப்பு செய்ய வேண்டும். வார்த்தைகள் குறைவாகவும், காட்சி அதிகமாக இருந்தால் நல்லது. அதே போல், அதில் நம்முடைய நிறுவனத்தின் பெயரைச் சிறியதாக வைத்தால் போதும். அதைவிடச் சற்று பெரிய அளவில் நம்முடைய முத்திரை இருந்தால் போதுமானது. பயன்படுத்தும் நிறம், நம்முடைய விளம்பரத்தை உறுத்தும் வகையில் இல்லாமல், பார்ப்பதற்கு நன்றாக உள்ள நிறங்களாக இருக்க வேண்டும். பின்னணி நிறம் நம்முடைய பொருளின் தன்மையைக் குறிப்பிடும் வகையில் இருக்கலாம். உதாரணத்துக்கு, இயற்கை அங்காடி என்றால் பச்சை நிறம் பயன்படுத்தலாம். பாரம்பரியப் பொருள் என்றால், அதற்குப் பழைய காலத்து விடயங்களை நினைவுபடுத்தும் வகையில், பழுப்பு நிறப் பின்னணியில் வைத்து உருவாக்கலாம். உணவுப் பொருட்கள் என்றால் அவற்றின் புகைப்படத்துக்கு அதிக முக்கியத்துவம் தரலாம்.

## விளம்பர வாசகங்கள்!

விளம்பரங்களில் பயன்படுத்தப்படும் வாசகங்களில் மிகவும் கவனம் தேவை. வாசகங்கள் வளவளவென்று இல்லாமல் சொல்லவந்த விஷயத்தை நேரடியாகச் சொல்ல வேண்டும். மேலும், வாசகங்கள் குறைவாகவே இருக்க வேண்டும். நீங்கள் விற்கிற பொருளில் இருந்து மக்கள் என்ன எதிர்பார்க்கிறார்கள், அவர்களுடைய தேவை என்ன, அதில் அவர்களின் பிரச்சினை என்ன என்பது போன்றவற்றை யெல்லாம் ஆராய்ந்து அதற்கேற்ப விளம்பர வாசகங்களைத் தயார் செய்ய வேண்டும். உதாரணத்துக்கு "சலுகை... பிரமாண்ட திறப்பு விழா... யாழ்ப்பாணத்தில்.... 0% வட்டி..." போன்ற வார்த்தைகள்.

## விளம்பர மொடல்கள்!

விளம்பரத்துக்குப் பயன்படுத்தப்படும் மொடல்கள் பிரபல நடிகர், நடிகைகளாகத் தான் இருக்க வேண்டும் என்பதில்லை. மாறாக, நம்முடைய தொழில் வகையைப் பொறுத்து விளம்பரங்களை வித்தியாசமாக யோசித்து, பிரபலமில்லாத அதே நேரத்தில் விளம்பரத்தின் தன்மைக்குப் பொருத்தமான நபர்களை வைத்தே குறைவான செலவில் எடுக்கலாம்.


குழந்தைகளின் படிப்பு தொடர்பான தொழில்களுக்குக் குழந்தைகளை வைத்தே விளம்பரம் தயார் செய்யலாம். இப்போதெல்லாம் பெரிய பெரிய நகைக்கடை, துணிக்கடை விளம்பரங்களுக்கே சிறுவர், சிறுமிகளுக்கு வயதான ஆண், பெண் போல் வேடம் போட்டுதான் விளம்பரம் செய்கிறார்கள். இப்படிக் கொஞ்சம் வித்தியாசமாக யோசித்தால், விளம்பரங்களுக்கு அதிகம் செலவு செய்வதைக் குறைக்கலாம்.

சொல்லப் போனால், மொடல்களே இல்லாமல், வெறும் பொருட்களை வைத்தே விளம்பரம் தயார் செய்துவிடலாம். உதாரணமாக, நுளம்புத்திரி விளம்பரம், தேங்காய் எண்ணெய் விளம்பரம். வித்தியாசமாக யோசித்தால், அனிமேஷனை வைத்தே மக்களைக் கவரலாம். அதற்கு உதாரணம், வோடஃபோன் விளம்பரத்தில் வரும் "சூ சூ" கதாபாத்திரம்.

ஒரு தொழில் வளர்ச்சிக்கு விளம்பரம் என்பது மிகவும் அவசியம். எனவே, புதிதாக தொழில் தொடங்குபவர்கள் விளம்பரத்தை வீண் செலவாகப் பார்ப்பதைத் தவிர்க்க வேண்டும்.

சரியான விளம்பர முறையைத் தேர்ந்தெடுத்து வித்தியாசமாக யோசித்தால், அதிக வாடிக்கையாளர்களைச் சென்றடையலாம்.

(இன்னும்...)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதினப்பூங்கா
ராஜேஷ்மணாளன்


# பகிடிக் கதை சொல்லும் பச்சைக்கிளி



நோய்கள் தொற்றுவது ஆபத்தானது. ஆனால், ஒருவரின் உற்சாகம் இன்னொருவருக்கு தொற்றுவது, ஒருவர் சிரிக்க மற்றவரும் சிரிப்பது என்றுமே வரவேற்கத்தக்கது. சிலர் இதில் சூரர்கள். தம்மோடு சேர்ந்தவர்களையும் சிரிக்க வைப்பதில் இவர்கள் கில்லாடிகள் .

இங்கே புதினம் என்னவென்றால் தன்னோடு சேர்ந்த பறவைகளையும் சிரிக்க வைக்கும் ஒரு இனக் கிளி நியூசிலாந்து நாட்டில் இருக்கின்றது என்பதுதான் . இந்த இனக் கிளிகள் அளவில் பெரியவை. 48செ.மீ . நீளம் கொண்டது. மஞ்சளோடு கலந்த ஒலிவ் பச்சை நிறம் கொண்டவை. பழங்கள், பூச்சிகளை உண்ணும் இந்தக் கிளி மாமிசமும் உண்ணும். மிகவும் புத்திசாலித்தனமான கிளி என்கிறார்கள்.

இதில் உள்ள தனித்துவம் என்னவென்றால் இதன் குரல் கேட்டதும் ஏனைய பறவைகளும் குஷியாகி விடுமாம் . அல்பைன் மலைப் பிராந்தியத்தில் வாழும் இப்பட்சியை 'மலை வாழ் கோமாளி' என்ற பட்டப் பெயரால் அழைக்கிறார்கள். இதன் குரல் காதில் வீழ்ந்ததும் ஏனைய கிளிகளுக்கும் விளையாட்டுப் போக்கு வந்து விடுமாம் என்கிறார்கள் அவதானிகள். சிம்பன்சி, எலிகள் போன்ற பாலூட்டிகளில் இந்த சுபாவம் முன்பு கண்டுபிடிக்கப்பட்டிருந்தாலும், ஒரு பறவை இத்தன்மையைக் கொண்டிருப்பது கண்டறியப்படுள்ளமை இதுவே முதற் தடவையாகும். பகிடிக் கதை சொல்கிறதோ இந்தப் பச்சைக் கிளி? மகிழ்ச்சியான முதல் பத்து நாடுகளில் நியூசிலாந்தும் ஒன்று. இங்குள்ள பறவைகளுக்கும் அது தொற்றி உள்ளது போலும்.



# இன்பம் இங்கே இன்பம் இங்கே



வாழ்வில் மகிழ்ச்சியோடு இருப்பது என்பது மிகச் சுலபமாகக் கிடைக்கும் ஒன்றல்ல. அதிலும் ஒரு தனி நபர் அல்லது ஒரு குறிப்பிட்ட நபர்கள் என்பதற்கு அப்பால் ஒரு தனி நாடு மகிழ்ச்சி நிறைந்த நாடு என்ற பெயரைச் சம்பாதிப்பது போற்றுதலுக்கு உரியது என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

2017இன் மகிழ்ச்சிகரமான நாடாகத் தெரிவாகி இருக்கின்றது நோர்வே. கடந்த இரண்டு வருடங்களாக நான்காம் இடத்தில் இருந்த இந்த நாடு மூன்று தடவைகள் முதல் இடத்தைப் பிடித்து அசத்தியிருந்த டென்மார்க்கை ஒதுக்கி விட்டு, முதற்றடவையாக முதல் இடத்தைக் கைப்பற்றி இருக்கின்றது.இரண்டாம் இடம் டென்மார்க்குக்குப் போக ஐஸ்லாந்து, சுவிட்சர்லாந்து, பின்லாந்து, நெதர்லாந்து அடுத்தடுத்த இடங்களைப் பிடித்துள்ளன. முதல் பத்துக்குள் கனடா, நியூசிலாந்து, அவுஸ்திரேலியா, சுவீடன் ஆகிய நாடுகள் அணிவகுத்து நிற்கின்றன. ஏற்கனவே இந்தத் தெரிவு ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து டென்மார்க் மூன்று தடவைகளும் சுவிட்சர்லாந்து ஒரு தடவையும் முதல் இடத்தை சுவீகரித்திருந்தன.

சரி மிகச் சோகமான நாடுகள் எவை? 155 நாடுகளைத் தெரிவு செய்து நடத்திய ஆய்வில் மத்திய ஆபிரிக்க குடியரசுதான் கடைசி இடத்தில் நிற்கின்றது . புருண்டி (154), தன்சானியா (153), சிரியா (152) ருவண்டா (151) ஆகிய ஆபிரிக்க நாடுகள் தொடர்ந்து வருகின்றன.

இந்தத் தெரிவு எப்படி நடக்கின்றது? பணம்தான் மகிழ்ச்சியைத் தருகின்றது என்று சொல்வதற்கில்லை. என்றாலும் அதுவும் ஒரு முக்கிய காரணி என்பதை மறுக்க முடியாது. நாட்டின் உற்பத்தித் திறன் முக்கியத்துவம் பெறுகின்றது. தாராள மனப்பான்மை, ஆரோக்கியமான வாழ்வு , ஊழல் இல்லாத நிலை, விரும்பியதைத் தெரிவு செய்யும் சுதந்திரம் போன்றவை நன்கு கவனிக்கப்பட்ட பின்னரே இத்தெரிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நோர்வே தன் மண்ணில் எடுக்கும் எண்ணெய் வளம் மூலம் பெரும் பணத்தை சம்பாதிக்கின்றது. எண்ணெயின் சந்தைவிலை வீழ்ச்சி கண்டிருந்தாலும் அது புத்திசாலித்தனமாக இதில் வரும் வருமானத்தை நாட்டின் எதிர்கால சந்ததியினருக்காக ஒதுக்கி இருப்பது இந்த ஆய்வாளர்களைப் பெரிதும் கவர்ந்துள்ளது .



# ஓடாது விட்டால் ஓடி வரும் கழிவு

ஓடஓட விரட்டுவது என்பது உங்களுக்குத் தெரியாத ஒன்றல்ல. இங்கே ஓடஓட அவர்களை விரட்டுவதோடு நின்று விடாமல் ஓட்டாதே உன் காரை ஓட்டாதே என்று கேட்பதோடுநின்று விடாமல், மரணச் செலவில் கழிவும் தருவதாக ஆசை காட்டுகிறார்கள். இது எங்கே நடக்கின்றது என்று கேட்கின்றீர்களா? ஜப்பானில்தான் ! இங்குள்ள பெரிய பிரச்சினை இளையவர்களை விட முதியவர்கள் தொகை இங்கு அதிகம் இருப்பதுதான். இந்த முதியவர்கள் வாகனங்கள் செலுத்தும்போது அதிக விபத்துக்கள் இடம்பெறுவது இந்த நாட்டின் தலையிடி தரும் விவகாரமாக மாறி உள்ளது. அயிச்சி என்ற பட்டினத்தில் 2016ஆம் ஆண்டில் நடந்த மரணத்தை ஏற்படுத்திய வீதி விபத்துக்களில் 13 வீதமானவை 75வயதுக்கு மேற்பட்ட சாரதிகளால்தான் ஏற்பட்டுள்ளது.

இதற்கு ஒரு தீர்வு காண இங்குள்ள மரணச் சடங்குகளை செய்ய உதவும் நிறுவனம் இங்குள்ள பொலிஸ் பிரிவினருடன் இணைந்து ஒரு திட்டத்தை வகுத்துள்ளது.வாகன ஓட்டுநருக்கான அனுமதிப் பத்திரத்தை இங்குள்ள வயதாளிகள் பொலிஸாரிடம் கையளித்துவிட்டு வாகனம் செலுத்துவதை நிறுத்தினால் அவர்களுக்கும் அவர்கள் குடும்ப அங்கத்தவர்களுக்கும் உண்டாக்கும் இறுதி காலச் சேவைச் செல வில் 15 வீதக் கழிவு வழங்கப்படும் என்பதே அந்தத் திட்டம். ஜப்பானில் ஒருவர் இறந்தால் அவரை அடக்கம் செய்யும் வரையிலான செலவுகள் மிக அதிகம் என்று சொல்லப்படுகின்றது. ஏறத்தாழ 13,000 டொலர் வரை தேவைப்படும் என்கிறார்கள் .

நாடு கிழடு தட்டிக்கொண்டு போகிறதே என்று - அங்கலாய்க்கும் ஜப்பானுக்கு இது ஒரு புதுத் தலைவலி. இந்தப் புதுத் திட்டம் விபத்துக்களைக் குறைக்கலாம் என்று அவர்கள் திடமாக நம்புகிறார்கள். ஓடாது (தெருக்களில்) விட்டால் (வீட்டுக்கு) ஓடி வரும் கழிவு. ஏற்பார்களா? நம்பிக்கைதானே மனிதனின் தும்பிக்கை ?

# பயமுறுத்தும் பருவநிலை மாற்றங்கள்

இன்றைய நாள்களில் நம்மைச்சுற்றி நடப்பவை பல அசாதாரணமானவைகளாகவே இருக்கின்றன. கால நிலை கூட அப்படித்தான். காலம் தப்பிய மழை, பனி என்று வருவதால் விவசாயம் பேரழிவைச் சந்தித்து வருகின்றது.

உலக வானிலை அமைப்பு தனது அறிக்கையில் இதையே சொல்கின்றது. பதிவில் உள்ள மிகச் சூடான ஆண்டாக 2016 மாறி உள்ளது என்கிறார்கள் அதிகாரிகள். சூழலில் உள்ள காபனீ ஒட்சைட்டின் அளவு என்றும் இல்லாத அளவு அதிகரித்து இருப்பதுடன் ஆர்க்டிக் பனிப்பாளங்கள் உருகி மாரி காலத்தில் என்றும் இல்லாதவாறு மிகக் குறைந்த அளவு வெப்ப நிலையை பதிவு செய்துள்ளது




. இந்த நிலை 2017இலும் தொடர்கின்றது என்கிறார்கள் இவர்கள் . 80 உலக நாடுகளின் கால நிலை விவரத்தை திரட்டியே இந்த ஆய்வை இவர்கள் நடத்தி இருக்கின்றார்கள்.

கடந்த ஆண்டு இந்த கடும் வெப்ப நிலைக்கு எல் நினோவைக் காரணம் காட்டுகிறார்கள். ஆர்க்டிக் வெப்பநிலை மாற்றம் கண்டு இங்குள்ள பனிப்பாளங்கள் உருகி ஓடுவதும் உலக நாடுகளின் வெப்ப நிலையில் பெரும் பாதிப்பை ஏற்படுத்திஉள்ளது .

இப்பொழுது நவீன மடிக் கணினிகள் இருப்பதால் உடனடி மாற்றங்கள் செய்யக் கூடிய நிலை வந்துசேர்ந்துள்ளது அமெரிக்காவில் 11.000 இற்கு மேற்பட்ட சரித்திரம் படைத்த வெப்பநிலைகள் , 2017இன் ஆரம்பத்தில் தகர்க்கப்பட்டன .

மனித உந்தலால் ஏற்படும் காலநிலை மாற்றமும் கவனத்தில் எடுபடவேண்டிய ஒன்று .

மனிதன் வளர்வதாக பீற்றிக் கொண்டிருக்கிறான். ஆனால், நிஜத்தில் கிடுகிடு வளர்ச்சி அவனைச் சுற்றி அழிவை ஏற்படுத்திக் கொண்டு வருகின்றது. காலநிலை மாற்றம் தானாக வரவில்லை. நாமே எமக்கு வரவழைத்த ஒன்றுதான் அது !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கன்னியாஸ்திரிகளால் வளர்க்கப்பட்ட திருக்குடும்பக் கன்னியர்மடம் பாடசாலை

அதிபர் அருட்சகோதரி
அன்ரனிற்றா மார்க்

## சவால்கள்

- போக்குவரத்து இடர்பாடால் பிள்ளைகள் பாடசாலைக்கு தாமதமாக வருகின்றனர்.
- பிள்ளைகளின் போசாக்குக் குறைபாட்டால் செயற்றிறன் குன்றியுள்ளது.
- தனியார் கல்வி நிலையங்களுக்கு மாணவர்கள் செல்வதனால் நேர இடர்பாடு காணப்படுகின்றது.
- அரங்க ஆற்றுகைக்குப் பொருத்தமான கலையரங்க வசதி இல்லை.
- மாணவர் தொகைக்கேற்ப வசதியான நவீன நூலகம் இல்லை.
- மாணவர் ஆக்கச் செயற்பாட்டுக்கு தேவையான வாத்தியக்கருவிகள், விளையாட்டு உபகரணங்கள், செயற்பாட்டறைகள், சிறந்த வகுப்பறைகள் பற்றாக் குறையாகவுள்ளது.
- இப்பாடசாலையில் பௌதிக வள அபிவிருத்திகள் நீண்ட காலமாக மேற்கொள்ளப்படவில்லை.
- பாடசாலைக்கு என சொந்தமாகவிளையாட்டு மைதானம் இல்லை. உள்ளக விளையாட்டுக்களையும் தற் காலிக இடங்களிலேயே பயிற்றுவிக்கப்படுகின்றது.
- பாடசாலை சூழலில் வேறு பிரசித்தமான பாடசாலைகள் உள்ளன. இதனால் பொதுப் பரீட்சைகளில் உயர் புள்ளிகளைப்பெறும் மாணவர்கள் அங்கு இணைந்து கொள்கின்றனர்.

## வரலாறு

19ஆம் நூற்றாண்டில் மதங்கள் மத்தியில் அதிக சுமுகமான நிலை இருக்கவில்லை. அக்காலகட்டத்தில் புரட்டஸ்தாந்து மதப் பாடசாலைகளே அதிகமாக இயங்கின. “யாழ்ப்பாண கத்தோலிக்கர்களுக்கு எனப் பாடசாலை இல்லை” என்ற கவலை பலர் மத்தியில் காணப்பட்டது. அப்போது ஆயராக இருந்த வண. ஒராசியோ பெற்றக்கினி ஆண்டகை 1846 அளவில் ஆண்கள், பெண்களுக்கு எனத் தனியாக இரு பாடசாலைகளை ஆரம்பித்தார். இதில் பெண்களுக்கென ஆரம்பிக்கப்பட்ட பாடசாலையே திருக்குடும்ப கன்னியர் மடம். இதுவே இலங்கையில் அமைக்கப்பட்ட முதலாவது கத்தோலிக்க பெண்கள் பாடசாலை ஆகும்.

ஆரம்பத்தில் English Girl's School என்றே பெயரிடப்பட்டது. பின்னர் பதிவுசெய்யப்படுதல் போன்ற அரச சட்டச் சிக்கல்களுக்கு முகம் கொடுக்கும் நோக்குடன் 1850 ஆம் ஆண்டு முதல் இதனைப் பெண்களுக்கான குருமடம் Girl's Seminary என ஆயரால் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. முதல் தலைமையாசிரியராக ஐரிஸ் இராணுவ அதிகாரியின் மனைவியான திருமதி மேரி ஓ ஆன் பிளனகன் நியமிக்கப்பட்டார். திருமதி பிளனகனின் காலத்தில் படிப்படியாக மாணவர்களின் தொகையும் அதிகரித்ததுடன், 1851 இல் அரச பாடசாலைச் சபையில் பதிவு செய்யப்பட்டு சில அரச சலுகைகளுடன் இயங்கத் தொடங்கியது.

ஆங்கில மொழிக்கல்வின்யயும் பெண்களுக்கான கல்வியையும் அதிசிறப்பாகவும் புரட்டஸ்தாந்து பாடசாலைகளுக்கு நிகராகவும் வழங்க விரும்பிய ஆயர் சுமேரியா பிரான்ஸூக்குச் சென்று திருக்குடும்பச் சபையிடம் கன்னியாஸ்திரிகளை இங்கு அனுப்புமாறு விண்ணப்பித்தார். இதையடுத்து அயர்லாந்து திருக்குடும்ப கன்னியர் சபையைச் சேர்ந்த 6 கன்னியாஸ்திரிகள் 1862இல் யாழ்ப்பாணம் வந்தனர். 1863ஆம் ஆண்டு பாடசாலையைப் பொறுப்பேற்ற திருக்குடும்ப சபையினர் இதற்கு திருக்குடும்ப கன்னியர் மடம் எனப் பெயர் சூட்டினர். அருட்தாயார் ஹெலன் வின்ரர் முதல் அதிபராகப் பணி ஏற்றார். கல்வி, ஒழுக்கம், சுகாதாரம் ஆன்மிகம், தொழில்தேர்ச்சி போன்ற பல விடயங்களிலும் கவனம் செலுத்தி பாடசாலையை தரம்மிக்கதாக்கினர்.

யாழ்ப்பாணப் பெண்களின் முன்னேற்றத்துக்காக அவர்கள் அரும்பாடுபட்டு உழைத்தனர். வறுமையான மாணவர்களுக்காக சுதேச மொழியில் கற்பிக்கும் மற்றொரு பாடசாலையையும் ஆரம்பித்தனர். (தமிழ் கொன்வென்ற்). அவரைத் தொடர்ந்து பணியேற்ற அயர்லாந்து அருட்தாயார்கள் பாடசாலையை மேலும் முன்னேற்றினர். 1970ஆம் ஆண்டு சுதேச கன்னியர்களிடம் கையளிக்கப்பட்டது. முதல் சுதேச அதிபராக அருட்சகோதரி மாட்டீனா கடமையாற்றினார். தனியார் பாடசாலையாகவே இயங்கிய இப்பாடசாலையை கத்தோலிக்க திருச்சபையால் தொடர்ந்து நடத்த முடியாதுபோனது. இதையடுத்து 1975ஆம் ஆண்டு மத அனுஷ்டிப்பு ஒப்பந்த அடிப்படையில் அரசிடம் கையளிக்கப்பட்டது.

ஒப்பந்த அடிப்படையில் இன்று வரை திருக்குடும்ப கன்னியர்களின் நிர்வாகமே தொடர்ந்து பாடசாலைக்கு உயிரூட்டி வருகின்றது. 2002 ஆம் ஆண்டில் தமிழ்ப் பாடசாலையும் இதுவும் ஒன்றிணைக்கப்பட்டு ஒரே நிர்வாகத்தின் கீழக் கொண்டுவரப்பட்டன. 2010 இல் தேசிய பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டது.

இங்கு பயின்ற மாணவிகள் உலகெங்கும் கல்வியில் உயர்ந்தும், உயர் பதவிகளிலும் சிறப்பான வாழ்வாதாரத்துடன் பலரும் மதிக்கத்தக்க வகையில் வாழ்கின்றனர். இங்கு பயின்ற மாணவிகளின் ஒழுக்கத்தையும் பண்பாட்டையும் எங்கும் தனித்துவமாக நோக்கும் பாரம்பரியம் உள்ளது. தற்போதைய அதிபர் அருட்சகோதரி அன்ரனிற்றா மார்க்கும் அதே தடத்தில் பாடசாலையை நிர்வகித்து வருகிறார்.

## சாதனைகள்

- தேசிய கூடைப்பந்தாட்ட அணியில் இப்பாடசாலை மாணவிகள் இடம்பிடித்துள்ளனர்.
- 2015இல் மாகாணமட்ட மெய்வன்மைப் போட்டிகளில் குண்டு போடுதலில் 2ஆம் இடத்தையும், ஈட்டி எறிதலில் 3ஆம் இடத்தையும் பெற்றன.
- 2016இல் மாகாண மட்ட கூடைப் பந்தாட்ட போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றது.
- பளு தூக்கல் போட்டியில் மாகாண மட்டத்தில் முதலாம் இடத்தையும், தேசிய மட்டத்தில் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளது.
- 2008 - 2014 வரை தொடர்ச்சியாக கூடைப்பந்தாட்டத்தில் வடமாகாணத்தில் முதலிடத்தைப் பெற்றது.
- 2006, 2009, 2015இல் ஆங்கில தின நாடகப் போட்டிகளில் மாகாணமட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றது.
- தென்மோடி நாட்டுக்கூத்து தொடர்ந்து 9 வருடங்களாக வடமாகாணத்தில் முதல் இடத்தை பெற்றது.
- 2015இல் “குசேலர்” இசை நாடகம், 2016இல் “அகலிகை” மேடை நாடகங்கள் மாகாண மட்டத்தில் முதலிடம் பெற்றன.
- தேசிய பாடசாலைகளுக்கான நாடகப் போட்டியில் “நிற்க கற்க” நாடகம் வெற்றி பெற்றது. சிறந்த இயக்குநருக்கான விருதையும் பெற்றது.
- 2015இல் “கிளிக்கூண்டு” சிறுவர் நாடகம் தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தையும், 10 சிறப்பு விருதுகளையும் பெற்றது.
- 2016இல் “மேடும் மடுவும்” வேதாகம நாடகம் தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றது.
- வணிக மாணவர்கள் “QUICBUZZ - 2016” போட்டியில் யாழ்.மாவட்டத்தில் 2ஆம் இடத்தை பெற்றுக்கொண்டனர். 2016 வணிக தினப் போட்டியில் மாகாண மட்டத்தில் இருவர் 3ஆம் இடத்தைப்பெற்றனர்.
- 2016இல் ஜனாதிபதி சாரணிய விருதை இரண்டு மாணவர்கள் பெற்றுக்கொண்டனர்.
- Australian Chemistry Quiz - 2016 போட்டியில் இரு மாணவர்கள் பரிசு பெற்றனர்.
- மாகாண மட்ட பண்ணிசைப் போட்டியில் 2ம் இடம்.
- 2016இல் “பசுமைப் பாடசாலைத் திட்டம்” போட்டியில் மாவட்ட மட்டத்தில் 2ஆம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.
- ITC மாணவர்கள் IT Master Mind Quiz Programme போட்டியில் வெற்றி பெற்றனர். தேசிய பாடசாலை விநாடி வினாப் போட்டியில் பரிசு பெற்றனர்.
- The Best Annual Report and Accounting competition - 2016 போட்டியில் மாவட்ட மட்டத்தில் 2ஆம் இடம் பெற்றது.
- 2013இல் அகில இலங்கை மேற்கத்திய சங்கீதப் போட்டியில் தனிப்பாடல் தேசிய மட்டத்தில் 6வது இடத்தைப்பெற்றது.
- 2014இல் உலக சுகாதார தினப் போட்டியில் மாகாணமட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றது.

தொகுப்பு :
**அ.றொக்ஷன்**









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை



தாட்சாயணி

# கடைசிக்காலடி

ஒவ்வொரு தடத்தையும் அவள் மிக எச்சரிக்கையோடே பதித்திருந்தாள். அந்தத் தடங்கள் யாருடையது போலவும் இல்லை. அவை அவளுக்கே அவளுக்கானவை. அந்தத் தடங்களில் அவள் பாதங்களில் இருந்த மிக மெல்லிய ரேகைகள் கூடப் பதிவாகியிருந்தன. ஆனால் அவ்வளவு ஆழமாக யாரும் தடங்களைக் கவனிப்பது இல்லையே. அந்தக் கடற்கரையோரம் இப்படி எத்தனை சுவடுகள் ஒன்றோடொன்று கரைந்து, அமிழ்ந்து, நீரடித்து அழிந்துபோயின.

அலை எட்டாத்தொலைவிலேயே அவள் நடந்திருக்க வேண்டும். அவை ஒரே சீராய் அந்த ஈரமணலில் படிந்திருந்தன. இடையிட்ட எந்த ஒரு சுவடுமே குறுக்கிடாதபடி, மிக நேர்த்தியாய் அந்தச் சுவடுகள் ஓவியம் வரைந்திருந்தன. மிக மென்மையான பதிவுகள் அவள் உள்ளத்தில் இருந்ததை எழுதிச் சென்றனவோ.....? அவளது சுவடுகளுக்குச் சற்றுத் தள்ளி முன்னே நடந்து சென்றது போலான இன்னொரு வகைத் தடங்கள். அவை சற்று ஆழமாய் விழுந்திருந்தன. அந்தச் சுவடுகள் மணலுள் சற்றே பள்ளத்தை ஏற்படுத்தியிருந்தன. ஒரு ஆணினது சுவடுகளாய் இருக்கலாம். உணர்ச்சி வேகத் தைப் பிரதிபலிப்பதாய் இருந்த அந்தச் சுவடுகளும், உணர்ச்சிக் கொந்தளிப்பை உள்ளடக்கி இருந்த இந்தக் காலடிகளும் நெருங்கி, நெருங்கி வந்தன. சில புள்ளிகளில் மிக அருகேயும், சில புள்ளிகளில் கொஞ்சம் எட்டவுமாய் அந்தத் தடங்களின் விளையாட்டுத் தொடர்ந்தது.

மென்மையான அவளது தடங்களும், ஆழமான அவனது தடங்களும் எச்சரிக்கையோடே, ஒன்றில் ஒன்று விழுந்துவிடாதபடி ஜாக்கிரதையாய் இருந்தன. இருந்தும், ஒன்றை ஒன்று ஈர்க்கவாய் தாமதித்தும், விரைந்துமாய் தம் பயணம் தொடர்ந்தன. சுற்றி இருந்த நூற்றுக் கணக்கான காலடிகள் தம் பாட்டில் ஒன்றோடொன்று கலந்து கரைவுற்று மறைந்து கொண்டிருந்தன. இவர்களது சுவடுகள் தனித்து நின்றன. பயணத்தின் பாதி தூரம் கழியும்வரை சுயமிழக்க முடியாமல், தம் உறவுகளைப் பரிமாறிக் கொள்ளாமல், ஒன்றையொன்று பிரியவும் மனமின்றித் தொடர்ந்து கொண்டிருந்தன. இந்த விளையாட்டை யார் கவனித்திருக்கக் கூடும். மேலே பறக்கின்ற பறவைகளின் கானத்தில் இந்தச் சுவடுகளின் கதை வழிந்திருக்கக்கூடுமோ........? அல்லது எட்டி எட்டி வருகின்ற அலை இந்தத் தடங்களை எட்டி அவற்றின் போக்குப் பிடிபடாமல் வெறுப்போடே திரும்பியிருக்குமோ...? இந்தச் சுவடுகளின் வேகமும், விரைவும் அப்படியே இருந்தன. எந்தச் சுவடுகளும் குறுக்கிடாமல் அப்படியே போய்க் கொண்டிருந்தன.

அவனது சுவடுகளின் பின்னரான, அவளது சுவடுகள், இப்போது அவனுடைய சுவடுகளை நெருங்கத் தொடங்கி இருந்தன. எந்தச் சுவட்டினதும் குறுக்கீடுகள் இல்லாத ஒரு அமைதிப் பெருவெளியில் அவளது சுவடுகள் அவனுடையதை அண்மித்தன. இப்போது அவளது தடத்தின் ரேகைகள் அப்பட்டமாகத் தெரிந்தன. ஆனால் ஆழமான அவனது தடங்களின் ரேகைகள் மங்கி இருந்தன. அவனது சுவடுகளின் வேகம் அதிகரித்தது. இவளது சுவடுகள் பின் தங்க ஆரம்பித்தன. பொங்கிப் பிரகாசித்த அவளது ரேகைகள் மீண்டும் மங்கத் தொடங்கின. என்றாலும் பின் தங்கிவிடக் கூடாது என்னும் வேகத்தில் அந்தச் சுவடுகள் நடப்பது தெரிந்தது. மிக, மிக அண்மித்திருந்த அந்தச் சுவடுகளின் ரேகைகள் கொஞ்சம், கொஞ்சமாய் அழிந்து கொண்டு வந்தன. அவனது ரேகைகள் மணலுள் வெளிக் கொள்ள மறுத்தன.

எவ்வளவு ஆர்வமாய் ஆரம்பித்த பயணம், அவளது சுவடுகள் ஆர்ப்பரித்து அழும் நிலை வருமோ.....யாரறிவார்? எந்தச் சுவடும் அறியாதபடிக்கு அல்லவா எச்சரிக்கையோடு அவள் தன் சுவடுகளைப் பதித்திருந்தாள். அவனது அந்த ஆழ்ந்த சுவடுகள் பற்றிக் கதைக்கின்றவர்களுக்கு அவனுடனே சிறிதளவு தூரத்திற்கேனும் இணையாய் நடந்த அவளது சுவடுகள் பற்றித் தெரியாமல் இருக்கலாம். ஆனால் மேலே பறக்கும் பறவைகள் கூடவா இவள் சுவடுகளை அப்படிப் புறக் கணித்துவிட்டன? எட்டிவரும் அலைகள் கூடவா அவள் சுவடுகளை ஏனென்று கேட்காமல் ஆர்ப்பரித்துக் கொண்டிருக்கின்றன?

எத்தனை அழகானது அவளது சுவடுகள். அதைக் கொண்டே அவள் அந்தக் கடற்கரை முழுவதுமாய் கோலம் போட்டிருக்கலாம். இடையில் குறுக்கிட்ட அவனது பாதங்களின் ஈர்ப்பில் அவளது சுவடுகள் அவன் பின்னேயே அலைந்தனவோ.....? அந்த ஆழ்ந்த சுவடுகளோடும் சேர்ந்து கரை முழுவதும் கோலமிடலாம் எனும் எண்ணமோ...? இப்போது அந்த ஆழ்ந்த சுவடுகள் கோலமிட்டுக்கொண்டிருக்கின்றன. இவளது மெல்லிய சுவடுகள் சோர்ந்து வெறும் கிறுக்கல்களாய்க் கிடக்கின்றன. எந்தக் குழந்தை அவளது தடத்தை ஒரு விளையாட்டுப் பொருளென எடுத்து விளையாடப்போகிறதோ....?

ஒன்றோடொன்று குழம்பிக் கலைந்திருந்த தடங்களிடையே அந்தப் பெரு மணல் வெளியில், இந்த இரட்டைத் தடங்கள் மட்டும் நெடுந்தூரத்துக்குத் தனித்துத் தொடர்ந்தபடி இருந்தன. இடையிடையே மங்கி இருந்த தடங்கள், இடையிடையே ஆழமாகி இருந்தன. இடையிடையே நெருங்கி இருந்த தடங்கள், இடையிடையே தூரமாகிப் போயின. அவளுடையது மெதுவாய் நகர்ந்தது. அவனுடையது விரைந்தது. அவனுடைய தடங்களின் ஆழம் அதிகரித்துக் கொண்டுவந்தது. அவளது தடங்கள் வலுவற்று மெல்லிய படலமாகிக் கொண்டிருந்தன. அதன் தனிப்பட்ட ரேகைகளை இனிக் காண முடியாதுபோல் பட்டது. சற்றே போகப் போக அந்தக் காலடிகள் மங்கி இருந்தன. ஓரிடத்தில் அந்தக் காலடிகள் காணாமற் போயின. அதை அலையடித்துக் கொண்டு போனதா...? அப்படியெனில் அவனது சுவடுகள் எப்படி மறையாமல் இருக்கின்றன. அவனது ஆழ்ந்த சுவடுகள் இன்னும் துல்லியமாகவே இருக்கின்றன. அவளது கடைசிக் காலடியின் மெல்லிய படலம் அந்த மணலில் என்னதான் எழுதிப் போயிற்று...? அவளது காலடிகள் ஏன் காணாமல் போயின. அவளது காலடிகள் ஏன் இப்படி அந்தரத்தில் நிற்கின்றன....?

யாருக்கேனும் தெரியுமா...? சுற்றிக் கலைந்து குலைந்திருக்கின்ற ஓராயிரம் சுவடுகளுக்கு இவளது சுவடுகள் பற்றித் தெரிந்திருக்க நியாயமில்லை. எனினும் தூர நுரையெறிந்து பொங்கிப் பிரவகிக்கின்ற அலைக்காவது இவள் சுவடுகள் பற்றி ஏதேனும் தெரிந்திருக்கக் கூடுமா...? மேலே, இசையைக் கவ்விக்கொண்டு பறக்கின்ற அந்தப் பறவைகளேனும், அவளது சுவடுகளுக்கு என்ன நேர்ந்தது என்று சொல்லமாட்டாவா...? எந்தச் சாட்சிகளுமற்றுக் கரைந்துபோன அவளது சுவடுகளுக்கு, அந்தப் பறவைகளும், அலைகளுமேனும் சாட்சியாகக் கூடாதா...?

அவள் தனது சுவடுகளை வானத்திலேயே பதித்திருக்கலாம். எந்தச் சுவடுகளுமற்றுப் பறக்கின்றனவே பறவைகள்... அவை போலவே தனது சுவட்டை இசையாய்க்கீறி வானத்தில் உலவ விட்டிருக்கலாம். அல்லது அவளது சுவடுகள் அவனுடையதோடு கலந்து மறைந்திருக்கலாம். அவனுடைய சுவடுகள் கலப்பதையே இலட்சியமாய், அவள் தன் ரேகைகள் மறைவது பற்றிக் கூடக் கவலைப்படாதிருக்கலாம். இல்லையேல் அவள் தன்னை வெளிக் கொள்ள ஆசைப்பட்டு இருப்பினும் கூட, அவனது சுவடு அவளுடையதன் மேல் ஆழமாய்ப் படிந்து, அவளுடையதை மறைத்திருக்கலாம்.

எப்படி இருப்பினும், மங்கலாய்த் தெரிகின்ற அவளது கடைசிக்காலடி, சோர்ந்து உலைவுற்றுக்கிடப்பது மட்டும் உண்மை. எதையோ, எதையோ எதிர்பார்த்துத் தொடங்கிய பயணத்தின் முடிவில், இனி எந்த எதிர்பார்ப்பும் இல்லை என உணர்ந்ததாய், உலகின் எல்லா நம்பிக்கைகளும், வசீகரங்களும் பொய் எனத் தோன்றிய உணர்ச்சியாய், இந்தக் காலத்துப் பெருவெளியின் மிகப்பெரும் நம்பிக்கை வறட்சியாய் அந்தக் கடைசிக் காலடி துவண்டு போய்க் கிடக்கின்றது. அந்தக் காலடியின் மங்கிப்போன ரேகைகளை இனி யாரால் தான் மொழிபெயர்க்க முடியும்...? கேள்விக் குறியற்ற கேள்வியாய்.........சாட்சிகளற்ற மௌனமாய், அந்தக் கடைசிக் காலடி மணல் வெளியில் அலையெழுப்புகிறது.

(நன்றி : தூரப்போகும் நாரைகள் / புதிய தரிசனம் வைகாசி - ஆனி 2005)

★ ★ ★

'ரங்கநாதனும் ரஞ்சித் பெரேராவும்' என்ற சிறுகதை மூலம் இலக்கிய உலகில் இனங்காணப்பட்ட தாட்சாயணி தனது பதினேழாவது வயதிலிருந்து எழுத ஆரம்பித்தவர். இள வயதிலேயே பிரதேச செயலகத்தின் உயர் பதவியை எட்டிப் பிடித்தவர். எழுத்துக்காகப் பல பரிசுகளையும், விருதுகளையும் வென்றவர். தூரப்போகும் நாரைகள் என்ற அவரது மூன்றாவது தொகுதியிலிருந்து சிறுகதை ஒன்றினை உங்களுக்காகத் தருகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(22 ஆம் பக்க தொடர்ச்சி...)

# பாதீனியத்துக்கு சாவுமணி அடிப்பீர்களா?

நல்லூர் பிரதேச சபை கோண்டாவில் இராமகிருஷ்ண வித்தியாலயத்தில் பாதீனியத்தை அழிக்கும் செயற் திட்டம் பிரதேச சபைத் தலைவர் ப.வசந்தகுமார் தலைமையில் நடைபெற்றபோது அதில் கலந்து கொண்ட அமைச்சர் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

விவசாயத்திற்குப் பாதிப்பு ஏற்படாதவாறு அதன் அபிவிருத்திக்காக பொது நோக்காகக் கொண்ட திட்டமாக இது அமைய வேண்டும். மாகாண சபை உருவாக்கப்பட்டதன் பின்னர் பாதீனியத்தை அழிக்கும் நடவடிக்கை துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது. ஏற்கனவே இந்த களைகள் இருந்தபோதும் அது குறித்து பெரிய அளவில் கவனிக்கப்படாமலே இருந்தது. இன்று மாணவர்களும் பொதுமக்களும் இது தொடர்பில் கவனம் செலுத்தக் கூடியதாக இந்த நிகழ்வு பரவலாக இடம்பெறுகின்றது.

சிறந்த பல மூலிகைகள் எமது பகுதியில் இருக்கின்றன. அவைகள் இந்தக் களை காரணமாக அழிந்து கொண்டு வருகின்றன. எமது மண்வளங்களைப் பேணக்கூடியதாக இதனைக் கருத்தில் கொள்ள வேண்டும். பச்சை இராணுவம் அல்லது பச்சைப் புற்று நோய் எனக் கருதும் இதன் கெடுதி மிகவும் மோசமானது. எமது மரபணு வைக் கூட மாற்றும் தன்மை கொண்டது. அந்த அளவு பாரதூரமான பாதீனியக் களையை அழிப்பதில் நாம் அனைவரும் ஒன்றுபட்டுச் செயற்படவேண்டும். இதை எங்களது தேசிய கடமையாகக் கொள்ள வேண்டும் என்றார்.

இந்நிகழ்வில் நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன், மாகாண விவசாய பணிப்பாளர் இ.ஸ்ரீபாலசுந்தரம் மாகாண சபை உறுப்பினர் இ.ஆர்னல்ட், இராமகிருஷ்ண வித்தியாலய அதிபர் நல்லூர் பிரதேச ச பை உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள் பாடசாலை மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

- இந்தச் செய்தி நறுக்கு பாதீனியத்துக்கு எதிராக அமைச்சர் ஐங்கர நேசன் ஆரம்பத்தில் எடுத்துக் கொண்ட வேகத்துக்கு ஒரு பதம் சோறுதான். இப்படி பல இடங்களில் பல்வேறு சந்தர்ப்பங்களில் பாதீனி யத்துக்கு எதிராக வடமாகாண விவசாய அமைச்சரான நீங் கள் முழங்கியிருந்தீர்கள்.

• • •

பாதீனியம் மெதுவாகப் பாதிக்கு மென்றால், கழிவு கலந்த நீர் எப்படி எப்படியெல்லாம் மக்களைத் துவம்சப்படுத்தும் என்று நீங்கள் அறிந்திருந்தும், உங்களைத் தவிர சீ.எம். உட்பட அனைவரையும் முட்டாளாக்கி சமூகத்தில் வலம் வந்து கொண்டிருக்கிறீர்கள். ஆனால் தண்ணீர் பற்றிய துறைசார் புலமை யாளர்களிலும், அதிகாரிகளிலும் நேர்மையைக் கடைப்பிடிப்பவர்களும், உண்மையானவர்களும் சுன்னாகமும் அது சார்ந்த கிராமங்களிலுமுள்ள கிணறுகளில் இன்றும் ஒயில் கலந்துள்ளதை நிரூபித்துக் கொண்டிருக்கின்றனர். ஆனால் நீங்களோ அந்தத் தண்ணீரில் எந்த வித கலப்பும் இல்லை. யாரும் பயமின்றிக் குடிக்கலாம் என்று சேர்ட்டிபிக்கற் கொடுத்துவிட்டு எந்தவித மனச்சலனமும் இன்றி வீதிவலம் வருவதுதான் கொடுமை. சுன்னாக ஒயில் நீரில் கை கழுவி உங்கள் கரங்கள் கறைபடிந்துள்ளதாக மக்கள் நம்புகின்றனர். அதைத் தொடர்ந்து அந்தக் கையால் நீங்கள் தொட்ட இடங்களெல்லாம் கறை படிய வாய்ப்பிருப்பதாக அச்சமுமடைகின்றனர்.

பிளாஸ்ரிக் மனித மரபணுவை மாற்றும், பாதீனியம் மனித மரபணுவை மாற்றும், என்று விளக்கமாக எல்லாவற்றையும் அறிந்தும், தெரிந்தும் வைத்திருக்கின்ற உங்களுக்கு சுன்னாகக் ஒயில் கழிவு நீரைக் குடிக்கின்ற மனிதர்களுக்கு மல சல் வாயில் தொடக்கம், மனித உடல் உள் உறுப்புக்கள் வரைக்கும் பாதிக்கும் என்று தெரியாதது விந்தையே.

நீங்கள் ஒரு முக்கிய அமைச்சராக இருப்பதனால், தண்ணீர் தொடர்பான பின்வரும் கேள்வியை உங்களிடம் கேட்பது பொருத்தமானதென்று எண்ணுகிறேன். தண்ணீர் மாச டையவில்லை, ஒயில் கலக்கவில்லை என்று வைத்துக் கொள்வோம். அப்படி ஒரு பிரச்சினை சமூகத்தில் ஏற்பட்ட பிறகு, அத்தகைய சந்தேகம் பல வழிகளிலும் வலுப்பெற்ற பிறகு, மக்கள் உள ரீதியான பாதிப்பிற்குள்ளானார்கள். பின்பு நீங்களும் முதலமைச்சரும் என சிலர் சேர்ந்து அமெரிக்கா வரை சென்று நீரில் ஒயில் கலப்பில்லை, தூசிப்படிமங்களே இருக்கிறதென்று நிரூபித்த பிறகும் மக்கள் சந்தேகப்படுவதாகக் கண்டதும் அதற்கு மாற்றீடாகப் பல வழி முறைகளை, அவர்கள் உள வள நல மேம்பாட்டை முன் நிறுத்தியாவது அதற்குப் பரிகாரத்தைக் கொடுத்திருக்க வேண்டும். அதற்குப் பல வழிகளுண்டு. அமைச்ச ராக இருக்கின்ற உங்களுக்குத் தெரியாத தொன்றுமில்லை. பிரச்சனையை மறைக்க வழிதேடிய வேளை அதனைத் தீர்க்கப் போராடியிருந்தால் மக்கள் உங்கள் பக்கம் என்றும் இருந்திருப்பர்.

இன்னும் தெற்கிலிருந்து வரும் குடி தண்ணீர் அமோகமாக விற்பனை செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது. அது மிகவும் பெரிய வியாபாரமாகப் பல்கிப் பெருகிக் கொணடிருக்கிறது. இதனால் பிளாஸ்ரிக் பற்றி நீங்கள் எழுதிய கட்டுரையில் கூறப்பட்டதுபோல பிளாஸ்ரிக் கழிவுகளால் (போத்தல்களாக) சூழலை மாசுபடுத்திக் கொண்டிருக்கிறது. ஒரு காலத்தில் யாழ்ப்பாணத் தண்ணீருக்காக எமது நிலங்களை நோக்கி மக்கள் படையெடுத்த கதைகளை விரைவில் வரலாறாகத்தான் படிக்கவிருக்கிறோம்.

தண்ணீர்ப் பிரச்சினையை தீர்க்கவென முன்வைக்கப்பட்ட இரணைமடுத்திட்டம் இழுபறியில் இருக்கிறது. அதைவிட சில காலங்களுக்கு முன்னர் முன்மொழியப்பட்ட ஆறுமுகம் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக ஆனையிறவு தொடக்கம் வல்லைவெளி வரை மிகப்பரந்த நீர்த் தேக்கத்தை உருவாக்கினாலே குடாநாட்டின் தண்ணீர் பிரச்சி னை பறந்தோடி விடும். சாத்திய மான திட்டங்களைப் பற்றி கண்டு கொள்ளாமல், சர்ச்சைக்குரிய திட்டங் களையே உடும்புப் பிடியாக பிடித்துக் கொண்டிருப்பதால் என்னபயன்?

பாதீனியத்துக்கு சாவு மணி அடிப்பதோடு, குடாநாட்டின் தண்ணீர் பிரச்சின்னைக்கும் ஒரு முற்றுப்புள்ளி வைக்க உங்களால் முடியும் என இப்போதும் நம்புகிறோம். அந்த நம்பிக்கையை காப்பாற்றுவதும் விடுவதும் உங்கள் கையில் தான் உள்ளது. ஆனால் அடுத்த முறை உங்களை தெரிவு செய்வது எங்கள் கைகளில் உள்ளது என்பதையும் நீங்கள் மறக்க மாட்டீர்களென நம்புகிறேன்.




கிறிஸ்தவர்களின் தவக்காலத்தில் திருமறைக் கலாமன்றம் தயாரித்து வழங்குகின்ற மாபெரும் அரங்க ஆற்றுகையான 'கல்வாரி யாகம்' திருப்பாடுகளின் காட்சி எதிர்வரும் ஏப்பிரல் மாதம் 06ஆம் திகதி முதல் 09ஆம் திகதி வரை நான்கு நாட்களுக்கு இல 238, பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் இடம்பெறவுள்ளது.

வியாழன், சனி, ஞாயிறு தினங்களில் மாலை 6.45 மணிக்கு ஆரம்பமாகும் திருப்பாடுகளின் காட்சி வெள்ளிக்கிழமை மட்டும் மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. பிரமாண்டமான அரங்க அமைப்பு, காட்சியமைப்பு, இசையமைப்பு, ஒலி, ஒளி போன்றவற்றுடன் அரங்கிலும் அரங்கப் பின்னணியிலுமாக இரு நூறுக்கும் அதிகமான கலைஞர்களுடன் மேடையேற்றப்படவுள்ள 'கல்வாரி யாகம்' ஆற்றுகைக்கான ஏற்பாடுகள் இப்பொழுது இடம்பெற்று வருகின்றன.

'கல்வாரி யாகம்' திருப்பாடுகளின் நாடகத்திற்கான எழுத்துருவை திருமறைக் கலாமன்றத்தின் பிரதி இயக்குநர் யோ.யோண்சன் ராஜ்குமார் எழுதியுள்ளார். நெறியாள்கையை மன்றக் கலைஞரான தை.யஸ்ரின் ஜெலூட் மேற்கொண்டுள்ளார்.

ஆண்டுதோறும் திருமறைக் கலாமன்றத்தால் மேடையேற்றப்படுகின்ற திருப்பாடுகளின் காட்சியை பல்லாயிரக்கணக்கான மக்கள் பார்வையிடுகின்றமையும் இலங்கையிலேயே இடம்பெறுகின்ற மிகப்பெரிய அரங்க ஆற்றுகையாக இது அமைகின்றமையும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

## இக்கரைப் பனைகளும்...

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

பனங்கிழங்கென்றால் பன்றிகளுக்குக் கொண்டாட்டம். கிழங்குப் பாத்தியை அவை கிண்டித் தின்று விடும். இதற்காக பாத்தியைச் சுற்றி முள்ளுப் பற்றைகளை வெட்டி அணையாகப் போட்டு விடுவதுண்டு. பாத்தியில் வெருளியும் கட்டி விடப்படும். வெருளியைக் காணும் பன்றி விலகிச் சென்று விடும். சிலர் பாத்தியோரமாகத் தடம் வைப்பதுமுண்டு.

வீட்டை அண்டிய இடங்களில் உள்ள கிழங்கு சுமாரானது. மணல் தறையில் விளைகிற கிழங்கு சற்று இனிப்பாக இருக்கும். தும்பும் அதிகமாக இருக்கும். பூநகரிக்கிழங்கு, வரணிக் கிழங்கு, தீவுப்பகுதிக் கிழங்கு, அதிலும் நெடுந்தீவுக் கிழங்கு, வடமராட்சி கிழக்குக் கிழங்குகளுக்கெல்லாம் த்னியான மவுசுண்டு. இப்போதும் சிங்களவர்களும் புலம்பெயர்ந்தவர்களும் மட்டும் இந்த மவுசைக் காப்பாற்றி வருகிறார்கள். கொட்டைக்கிழங்கு என்று சொல்லிக் கொண்டு பனங்கிழங்கை ஆர்வமாக வாங்கிப் போகும் சிங்களவர்களை இன்னும் நீங்கள் யாழ்ப்பாணத்திலும் வன்னியிலும் காண முடியும். மற்றவர்களுக்கு பனங்கிழங்கென்றால், பகிடிக்குரிய ஒரு சங்கதியாகி விட்டது.

இப்போது கூட வெளிநாட்டில் உள்ளவர்களுக்காகவே ஒடியல் மாவும் பனங்கட்டியும் அதிகமாக வாங்கப்படுகிறது. அந்தப் பெண்கூட கடையில் நின்று அப்படி மல்லுக்கட்டியது, புலம்பெயர்ந்தவர்களுக்குப் பொருளை வாங்கி அனுப்பவே. உள்ளூரில் பனைக்கு மவுசில்லை. இந்த விதி எப்படி உண்டானது? இது மாறாதா?

## பெண் வீரர்களின்...

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கையின்போது மகளிர் பிரிவின் ஒரு பகுதிக்கு தளபதியாக தலைவர் நியமித்தார். இந்தத் தாக்குதலில் இவர் வழிநடத்திய படையணி குறிப்பிடத்தக்க வெற்றியைப் பெற்றது. 1993 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட மாலதி படையணியின் முதல் சிறப்புத் தளபதியாக நியமிக்கப்பட்டார்.

இவரது சகோதரன் கேதீஸ்வரன் விதுசன் 1999 செப்ரெம்பர் 18 ஆம் நாள் வீரச்சாவைத் தழுவியவர். ஓயாத அலைகள் 3, தீச்சுவாலை முறியடிப்பு தாக்குதல்களில் இவரின் பங்கு வியத்தற்குரியது. இறுதிச் சமரில் ஓயாது போரிட்டவர் பிரிகேடியர் விதுசா. ஆனந்தபுரத்தில் சக தளபதிகளுடன் வீரச்சாவை தழுவிக்கொண்டார்.

## தாய்மைக் குணம்...

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

தலைவரின் நேரடி வழிகாட்டலில் பெண் போராளிகளின் நான்காவது பாசறை மணலாறில் அமைக்கப்பட்டபோது அங்கே பயற்சி எடுத்துக்கொண்டார். லெப்.கேணல் நளாயினி, லெப்.கேணல் மாதவி, கப்டன் வானதி, மேஜர் கஸ்தூ ரி, கப்டன் வானதி ஆகியோர் இவருடன் பயிற்சி எடுத்தவர்களே.

1991 ஆம் ஆண்டு மருத்துவப் பிரிவுப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்ட இவர், விடுதலைப் புலிகளின் முதல் பெண் தளபதி மேஜர் சோதியா மீது அளவற்ற அன்பு கொண்டவர். எப்போதும் அவர் பற்றிப் பேசியே வீராங்கனைகளை போருக்கு தயார்ப்படுத்துவார். சோதியா படையணி தொடங்கியதும் அதன் சிறப்புத் தளபதியாக நியமிக்கப்பட்டார். சோதியா படையணியின் கீழ் 3 படைப்பிரிவுகளை வழிநடத்தியவர் துர்க்கா. ஒவ்வொரு சமர்க்களங்களிலும் பெண் போராளிகளின் வியத்தகு சாதனைகள் தொடரக் காராணமாக இருந்தவர்களில் துர்க்காவும் ஒருவர்.

புலிகளின் போர்க் களங்கள் விரிவடைந்த போதெல்லாம் பெண் புலிகளின் வீரம் தெரியும். தமிழ் பெண்களின் ஓர்மத்தின் அடையாளமாகத் தெரிந்தவர்கள் பிரிகேடியர்களான துர்க்காவும் விதுஷாவும். இந்த ஓர்மங்கள் ஆனந்தபுரத்தில் காற்றுடன் கலந்து தமிழர்களின் நெஞ்சங்களில் நிறைந்து விட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்வை நயம் 16



# நாய்க்குட்டிக்கிழவி

"எனக்குப் புத்தி தெரிந்த நாள் தொட்டு, பாடசாலை செல்லும் வழியிலுள்ள புளிய மரத்தடியில் அவ்வப்போது அவளைக் கண்டிருக்கிறேன். தனது சொத்தாகப் பெட்டி படுக்கைகளோடு குறைந்தது பத்து நாய்களையாவது வைத்திருப்பாள். தோளில் தொங்கும் கைப்பையில் குட்டிகளை வைத்திருப்பாள். கிடைக்கும் உணவுகளை நாய்களோடு அவள் பகிர்ந்து உண்பதைப் பார்க்க விசித்திரமாக இருக்கும்."

**கணபதி சர்வானந்தா**

அது ஒரு தேய்பிறை அட்டமி. தெருவில் ஒரே நாய்க்கூட்டம். வயது வித்தியாசமில்லாது, அவை ஒன்றையொன்று துரத்துகின்றன. ஆரோக்கியமானது, குட்டை பிடித்தது என்ற எந்தவித பேதமும் அவற்றிடை இல்லை. அது நாய்க் காலம். பொதுவாக நாய்கள் வேட்கை கொள்ளும் காலம். கடுவன்களின் தொல்லை தாங்காது வேலிப் பொட்டு களுக்குள்ளால் ஓடி ஒளிக்க முற்பட்டன பெட்டை நாய்கள். இருந்தும் அவற்றை கடுவன்கள் விடுவதாக இல்லை. கடைசியில் கடுவன்கள் ஜெயித்துக் கொண்டன. சிறிது நேரத்தின் பின்னர், கிராமத்து நாய்களெல்லாம் போக மற்றயவைகள் எல்லாம் வந்து கிழவியைச் சூழ்ந்து கொண்டன. அவைகள் எல்லாம் கிழவியின் நாய்கள்.

அந்தக் கிழவி வடக்கே காங்கேசன் துறையையும் தெற்கே யாழ்ப்பாண நகரத்தையும் எல்லையாகக் கொண்டு கே.கே.எஸ். வீதியின் இருமருங்கிலு முள்ள கிராமங்களை கையகப்படுத்தி வாழ்ந்தவள். அவள் நடமாடிய பகுதிகளில் யாருக்கும் அவள் பெயர் தெரியாது.

வெறுமனே நாய்க்குட்டிக் கிழவி என்று மாத்திரம் எல்லாராலும் அறியப் பட்டவள். எனக்குப் புத்தி தெரிந்த நாள் தொட்டு, பாடசாலை செல்லும் வழியிலுள்ள புளியமரத்தடியில் அவ்வப்போது அவளைக் கண்டிருக்கி றேன். தனது சொத்தாகப் பெட்டி படுக்கைகளோடு குறைந்தது பத்து நாய்களையாவது வைத்திருப்பாள். தோளில் தொங்கும் கைப்பையில் குட்டிகளை வைத்திருப்பாள். கிடைக்கும் உணவுகளை நாய்களோடு அவள் பகிர்ந்து உண்பதைப்பார்க்க விசித்திரமாக இருக் கும். ஒரு தாய் கூட தன் பிள்ளைக்கு அப்படி ஊட்டிவிடுவாளா என்பது சந்தேகமே. சின்னன் தொட்டுப் பெரியது வரைக்கும் வரிசைக் கிரமமாக தமது முறைவரும்வரை காத்திருப்பதைப் பார்க்க உணர்வுபூர்வமாக இருக்கும். அப்படி ஒரு ஒழுங்குமுறை இருந்தது.

தன்னிடமுள்ள அத்தனை நாய்களுக் கும் அவள் பெயர் வைத்திருந்தாள். முன்பள்ளி சிறார்கள் கட்டியிருக்கும் 'ரை' போல, எல்லா நாய்களுக்கும் கலர் கலராகக் கழுத்துப்பட்டி கட்டியிருக்கும். மொத்தத்தில் அவைகள் எல்லாம் அவள் பிள்ளைகள். இடையிடையே கோயிலுக்கு அருகாமையிலுள்ள ஐயர் வீட்டுத் தண்ணீர்க்குழாயில் அத்தனை நாய்களையும் நீராட்டுவாள். ஐயரின் அனுமதி கேட்கா மல் தண்ணீரைத் திறக்கமாட்டாள்.

கிராமத்தில், கிழவிக்குப் பின்னாலி ருந்த கதை என்று ஒன்றை எல்லாரும் தெரிந்து வைத்திருந்தனர். அவள் நல்ல குடும்பத்தில் பிறந்து ஒரு தலைமையா சிரியராக இருக்கும்போது, அவளை திருமணம் செய்ய அவள் மைத்துனன் ஆசைப்பட்டானாம். "அந்த நாயை ஆர் கட்டுவாள்" என்று சொல்லி அவள் மறுத்ததாகவும், அப்போது அவன் கோபமுற்று "கடைசி வரைக்கும் நாயைக் கட்டிக் கொண்டே நீ அலை வாய்" என்று சாபமிட்டு சூனியம் செய்து விட்டதாகவும் சொல்வார்கள்.

ஒரு மாலை வேளை. அன்றும் எமது ஊரில், கே.கே.எஸ். வீதியோடு தொட்டிருந்த வைத்திய சாலைக்கு அண்மித்த ஆலமரத்தடியில் வந்து முகாமிட்டிருந் தாள் அவள். வீதியில் வாகனப் போக்கு வரவு அதிகரித்திருந்தது. நாய்கள் வீதிக்குப் போகாது பார்த்துக் கொண்டாள்.

அவளிருந்த இடத்துக்கு அருகாமை யிலுள்ள வீட்டுப் பிள்ளைக்குப் பிறந்த தினக் கொண்டாட்டம் வெகு விமரிசையாக நடந்து கொண்டிருந்தது. வீட்டு வாசலில் வைத்திருந்த ஸ்பீக்கர் சத்தம் எல்லார் காதுச்சவ்வுகளையும் கிழித்துக் கொண்டிருந்தது.

மொத்தத்தில் வீடே களேபரப்பட்டுப் போய்க்கிடந்தது. கொண்டாட்டத்தின் முடிவில் நிச்சயம் ஏதாவது கிடைக்கும். நாய்களுக்குக் கொடுக்கலாம் எனக் காத் திருந்தாள் நாய்க்குட்டிக் கிழவி.

அந்த அமளியில் யாரும் கவனிக்க வில்லை. திறந்திருந்த கேற் வழியாக ஒரு குழந்தை தெருவுக்கு வந்தது. விரைந்து செல்லும் வண்டிகளைப் பார்க்க அதற்கு வினோதமாக இருந்தது. கைகளைக் கொட்டியவாறு மெல்ல மெல்ல முன்னேறித் தெருவுக்கு நடுவே சென்றிருக்க வேண்டும். 'கிறீச்' என்று வாகனமொன்று பிறேக் பிடித்த சத்தத் தைத் தொடர்ந்து, கிழவியினால் காப்பாற்றப்பட்ட அந்தப் பிள்ளை தெருக்கரை யோரமாகச் சிரித்துக் கொண்டிருந்தது.

ஆலமரத்தில் சாய்ந்திருந்தாள் கிழவி. தலையில் கைவைத்தபடி இருந்த அவள் பார்வைகள் எங்கே ஒரு புள்ளியில் நிலை கொண்டு இருந்தன. அவளைச் சுற்றி நாய்கள் எல்லாம் ஊளை இட்டு அழுதபடி வலம் வந்து கொண்டிருந்தன. பிள்ளையைப் பிடிக்கப்போன கிழவியின் பின்னால் ஓடிய அவளின் நாய்களில் ஒன்று வண்டியில் அடிபட்டுத் தெருவில் சிதறிக் கிடந்தது. நாயின் இரத்தத்தில் தொட்டுச் சென்ற வண்டிகளின் சில்லின் அடையாளங்கள் தெரு நீளமெங்கும். வைரவர் கோயில் வேள்வியை ஞாபகப் படுத்தியது.

"பாவம் ! நாய்க்குட்டிக் கிழவியின் நாயொண்டு காரிலை அடிபட்டுச் செத்துப்போச்சு" அங்கு நின்றவர்கள் அப்படித்தான் பேசிக்கொண்டனர். அவர்களுக்கு அது மட்டும் தான் தெரிந்திருந்தது. கொண்டாட்டத்தில் அவர்கள் மூழ்கியிருந்தனர்.

தன்னுயிர் போல் மன்னுயிர் பேணுவது ஜீவகாருண்யம். தன்னலம் நோக்காது மன்னுயிர் காப்பது அதைவிடச் சிறந்த தென்கிறது ஆன்மிகம்.

# தேவையா இந்த விளம்பரம்?

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

தடை போட்டதை கண்டித்து நடைபெறவுள்ள ஆர்ப்பாட்டம் பற்றிய அறிவிப்பைப் பார்த்து யாழ்ப்பாணத்துச் சந்திகள் "கெக்கட்டம்" விட்டுச் சிரித்தன.இந்த ஆர்ப்பாட்டத்துக்கு "வடக்கு ஈழக்கலைஞர்கள்" என்ற அமைப்பு அழைப்பு விடுத்திருப்பதாக சுவரொட்டிகளில் அச்சிடப்பட்டிருந்தது.


அப்படி எந்தக் கலைஞர்களுக்கு இப்படி ரஜினி வராதது பேரிழப்பாக இருக்கிறது? என்று அறியும் ஆவலை திங்கள் மாலை 3 மணி அடக்கமாட்டதவர்களாக மக்கள் இருந்தார்கள். 3 மணியானது. நாலைந்து பஸ்களும் அவற்றுக்கு வழிகாட்டிய சில கார்களும் நல்லூர் பின்வீதியில் வந்து நின்றன. பஸ்களில் இருந்து இறங்கப் போகும் கலைஞர்களைக் காண, நெஞ்சுத்துடிப்பை குறைத்துக் கொண்டு கண்களை சுற்றிலும் நின்றவர்கள் கூர்மையாக்கி கொண்டார்கள். ஆனால் இறங்கியதோ மூதாட்டிகளும், சிறுவர்களும், இளைஞர்களும் தான். அவர்கள் தான் கலைஞர்களாம். கிட்டத்தட்ட இருநூற்றைம்பது பேர் வரையில் பஸ்ஸால் இறங்கியதும், அவர்கள் கைகளில் கார்களில் வந்து இறங்கியவர்கல் சுலோக அட்டைகளை கொடுத்தார்கள். அதில் என்ன எழுதியிருக்கிறது என்று தெரியாமலே கைகளில் ஏந்திக் கொண்டவர்களை கார்களில் வந்திறங்கியவர்கள் எங்கு போக வேண்டும், என்னென்ன கோஷம் போட வேண்டும் என்று சொல்லிக் கொடுத்தபின் ஆர்ப்பாட்டம் இனிதே ஆரம்பமானது. வந்தவர்கள் அனைவரும் நல்லூர் முன்பக்கத்தை வந்தடைந்ததும் , திருமாவளவனுக்கும், வேல்முருகனுக்கும் எதிரான கோஷ ங்கள் வானைப் பிளந்தன. ஆனால் கொஞ்ச நேரத்தில் அவர்களை உள்ளூர் இளைஞர்களும், ஊடகவியலாளர்களும் சுற்றிவளைத்து கேள்விக் கணைகளைத் தொடுக்க, ஆர்ப்பாட்டக்காரர்கள் பதில் தெரியாமல் விழித்தார்கள். " தலைவா எங்கள் மண்ணுக்கு வா" என்று சுலோகம் வைத்திருந்த பாட்டி ஒருவர் இதுவரை ரஜினியின் ஒரு படத்தைக் கூட பார்த்ததில்லையாம். இன்னும் சிலர் சுலோக அட்டைகளை எந்தப்பக்கம் பிடிப்பதென்பது கூட தெரியாமல் தலைகீழாகவும், பக்கவாட்டாகவும் பிடித்திருந்தார்கள்.

இப்படி அப்பாவியாக இருப்பவர்கள் எதற்காக ரஜினியின் புனித பாதம் இங்கு படவேண்டும் என்று பொங்கினார்கள்? அங்குதான் நிற்கிறது லைக்கா. ஞானம் அறக்கட்டளை சார்பில் கட்டிமுடிக்கப்பட்ட வீடுகளைப் பெற வேண்டுமாயின் யாழ்ப்பாணத்து ஆர்ப்பாட்டத்துக்கு குடும்பத்தில் உள்ள எல்லோரும் செல்ல வேண்டும் என வற்புறுத்தப்பட்டதாலேயே அந்த மக்கள் ரஜினிக்கு ஆதரவான போராட்டத்துக்கு வந்துள்ளார்கள். வவுனியா மக்களைக் கொண்டு வவுனியாவில் ஆர்ப்பாட்டத்தை நடத்தியிருந்தால் கூட அந்த அப்பாவி மக்களுக்கு ஏற்பட்ட அலைச்சலாவது குறைந்திருக்கும். ஆனால் போரால் எல்லாவற்றையும் பறிகொடுத்த ஏதிலிகளை வீடு என்னும் ஆசையைக் காட்டி யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வந்து, தங்கள் பணத்திமிரைக் காட்டியிருக்கிறது லைக்கா. இப்படி மக்களின் இயலாமையையும், ஏழ்மையையும் தங்களின் வியாபாரத்துக்கு முதலீடாக்கும் லைக்கா போன்ற பெருமுதலாளித்துவ நிறுவனங்கள் எத்தனை ஆயிரம் வீடுகளைக் கட்டிக் கொடுத்தாலும் அவர்களின் பாவக்கறைகள் கரையப் போவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்லியின் இயக்கத்தில் விஜய் தனது 61 ஆவது படத்தில் நடித்து வருகின்றார். இந்நிலையில் அவர் நடிக்கவுள்ள 62 ஆவது படம் குறித்துத் தகவல்கள் கசிந்துள்ளன. இந்தப் படத்தை ஏ.ஆர்.முருகதாஸ் இயக்க, லைகா நிறுவனம் தயாரிக்கவுள்ளது.

2018 தீபாவளிக்கு வெளியிடத் திட்டமிட்டுள்ள இந்தப் படம் குறித்த உத்தியோக பூர்வ அறிவிப்பு விரைவில் வரும் எனத் தெரிகிறது.



பாலியல், உடல், உடல் உறுப்புகள் குறித்துப் பேச இந்திய மக்கள் வெட்கப்படுகின்றனர். மனித உடல் சம்பந்தமாக எது பேசினாலும் இங்கு பிரச்சினைதான். இவ்வாறு கூறியிருக்கிறார் ராதிகா ஆப்தே

"தலைமுறை தலைமுறையாக இந்த விடயங்களை நாம் விசித்திரமாக அணுகுகிறோம். நான் இனி அப்படி நினைக்க மாட்டேன். நாப்கின்களை எல்லோர் முன்னிலையிலும் கையில் தொட்டுப் பார்ப்பது விசித்திரமாக இருக்கக்கூடாது.

இது போன்ற சின்ன விடயங்களில் மக்களுக்குப் பிரச்சினை இருக்கிறது. ஆண்கள் மட்டுமல்ல, பெண்களுக்குக்கூட இதுபோன்ற விடயங்களைப் பேசுவதில் சிக்கல். இதற்கு நமது வளர்ப்பும் சமுதாயமுமே காரணம். அது மாற வேண்டும்." - என்றார்.



"தமிழகத்தில் தற்போது நிலவும் மோசமான அரசியல் சூழலில் விஜயை அரசியலுக்குக் கொண்டுவர விரும்பவில்லை" என அவரின் தந்தை எஸ்.ஏ.சந்திரசேகர் தெரிவித்தார்.

"10 ஆண்டுகளுக்கு முன் விஜயை அரசியலுக்கு கொண்டுவர நான் விரும்பினேன். நடிகர் என்பதால் அரசியலில் புகழ்பெற முடியும் என எண்ணினேன். காலப்போக்கில் அரசியல் சுத்தம் செய்ய முடியாத சாக்கடை என்பதை உணர்ந்தேன்.

இந்நிலையில் தமிழகத்தில் நிலவும் மோசமான அரசியல் சூழல் உள்ளது. இந்தக் கட்டத்தில் எனது மகனை அரசியலுக்குக் கொண்டுவர நான் விரும்பவில்லை. அவர் அரசியலுக்கு வரமாட்டார்" - என்றார்.

தமிழில் வாய்ப்புக்கள் இல்லாது தெலுங்கில் ஒதுங்கியவர் ராகுல் ப்ரீத்சிங். இப்போது முன்னணி நடிகையான அவருக்கு தமிழ், ஹிந்தியில் வாய்ப்புக்கள் வருகின்றன.

ஆனால், அவரோ கவர்ச்சியான வேடங்களில் நடிக்க மறுப்புத் தெரிவித்துவருகிறார்.

"ஆரம்பத்தில் நான் கவர்ச்சியாக நடித்தேன். அப்போது எனக்கு நடிப்பில் சரியான புரிதல் இல்லை. முன்னணி நடிகையாக வேண்டும் என்பதே அப்போது எனது நோக்கம். இப்போது முன்னணி நடிகையாக இருக்கிறேன். "

"இனி உடம்பைக் காட்டித்தான் இந்த இடத்தை தக்கவைக்க வேண்டும் என்றில்லை. திறமையை மட்டுமே காட்டும் நடிகையாகவே விரும்புகிறேன். பணத்துக்காக கவர்ச்சி நாயகி பட்டியலில் சேர மாட்டேன்" - என்று அவர் கூறியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஒரு வாழைப்பழத்தை வைத்து காமெடி செய்து ஒரு தலைமுறை தாண்டியும் சிரிக்க வைத்தவர்கள் கவுண்டமணி - செந்தில்.

நீண்ட இடைவெளியின் பின்னர் சூர்யா - கீர்த்தி சுரேஷ் நடிக்கும் "தானா சேர்ந்த கூட்டம்" படத்தில் செந்தில நடித்து வருகிறார்.

அவரின் பிறந்த நாளை இரண்டு வாழைப்பழங்கள் வடிவில் கேக் தயார் செய்து கொண்டாடி மகிழ்ந்திருக்கிறார்கள் படக்குழுவினர்.



இறுதிச் சுற்று படத்தில் அறிமுகமானவர் ரித்திகா சிங். நிஜத்தில் குத்துச் சண்டை வீராங்கனையான இவர் தற்போது முழுமையாக நடிப்பில் இறங்கியுள்ளார்.

சூர்யாவின் தீவிர ரசிகையான ரித்திகாவுக்கு அவருக்கு ஜோடியாக நடிக்க வாய்ப்பு வந்தது. சூர்யாவை முத்தையா இயக்கும் படத்தின் மூலமாக இந்த வாய்ப்பு வந்தது.

ஆனால், திடீரென இந்த வாய்ப்பு மாறிவிட்டது. சூர்யா 'தானா சேர்ந்த கூட்டம்' படத்தில் நடிக்க சென்றுவிட்டார். முத்தையா சசிகுமாரை இயக்கத் தொடங்கி விட்டார். இதனால் ஏமாற்றத்திலுள்ளாராம் ரித்திகா.

தனுஷ் நடித்த 'வேலையில்லா பட்டதாரி -2' படத்தை ஜூலை 14 ஆம் திகதி வெளியிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சௌந்தர்யா ரஜினிகாந்த் இயக்கிய இந்தப் படத்தில் தனுஷுடன் கஜோல், அமலாபால், சமுத்திரக்கனி ஆகியோர் நடித்துள்ளனர்.

படப் பணிகள் விரைவில் முடிந்தவுடன், தனுஷ் வெற்றிமாறன் இயக்கும் "வடசென்னை" படத்தில் கவனம் செலுத்தவுள்ளார்.





சசிகுமாரின் கொடிவீரன் படத்தில் வில்லனாக நடிக்கிறார் அக்ஷன் கிங் அர்ஜுன். முத்தையாவின் இயக்கத்தில் கிராமத்து களத்தை மையமாக வைத்து உருவாகிறது கொடிவீரன் படம். பெரிய பட்ஜெட்டில் உருவாகும் இந்தப் படத்தில் வில்லனாக நடிக்க அர்ஜுன் சம்மதித்துள்ளார்.

நாயகனாக நடித்து வந்த அர்ஜுனை மணிரத்னம் தனது கடல் படத்தில் வில்லனாக நடிக்க வைத்தார்.

வில்லனாக அர்ஜுன் நடித்தாலும், ஸ்ரார் நடிகர் என்பதால் பில்டப் காட்சிகள் அதிகமாகவே கொடுக்கப்பட்டுள்ளதாம்.



விவேகம் படத்தில் நடிக்கும் அஜீத்தின் புதிய புகைப்படம் ஒன்று வெளியாகியுள்ளது. ஜேம்ஸ்பொன்ட் படப் பாணியில் எடுக்கப்படும் இந்தப் படத்தில் இண்டர்போல் பொலிஸாக அஜித் நடிக்கிறார்.

கடந்த வாரமும் இந்தப் படத்தின் புகைப்படம் ஒன்று வெளியாகி பிரபலமானது. இதேபோன்று முன்னரும் சில படங்கள் வெளியாகின. இந்நிலையில் இப்போதும் ஒரு புகைப்படம் வெளியாகியுள்ளது.

இந்தப் படங்கள் உண்மையில் திட்டமிட்டு வெளியிடப்படுகிறதா என்ற சர்ச்சை இப்போது கிளம்பியிருக்கிறது.



பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் வரும் 28 ஆம் திகதி திரைக்கு வருகிறது 'பாகுபலி 2'.

இதன் ட்ரெய்லரை இதுவரை 10 கோடி பேர் பார்வையிட்டுள்ளனர். இது இந்திய அளவில் ஏற்படுத்தப்பட்ட முதல் சாதனையாகும்.

இந்நிலையில் 'பாகுபலி 2' உலகளவில் 7,500 திரையரங்குகளில் வெளியாகவுள்ளது. இதில் இந்தியாவில் மட்டும் 6,500 திரையரங்குகளில் வெளியாகிறது. இதனால் படம் வெளியாகும் நாளிலும் புதிய சாதனை படைக்கப்படலாம் எனத் தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதீனியத்துக்கு சாவுமணி அடிப்பீர்களா?




## அமைச்சர் ஐங்கரநேசனுக்கு ஒரு மடல்

**நோக்கன்**

கடந்த 12 மார்ச் 2017 (ஞாயிற்றுக்கிழமை) தினசரி ஒன்றைப் பார்த்தபோது நெஞ்சு துணுக்குற்றது. எழுத்தை நம்பமுடியவில்லை.

கண்ணை அகல விரித்துப் பார்த்தேன். சந்தேகமேயில்லை. அது வடமாகாண விவசாய அமைச்சர் சாட்சாத் ஐங்கரநேசன் எழுதிய கட்டுரை தான். "பிளாஸ்ரிக்கின் பிடியில் பூமி" என்ற தலைப்பிலான கட்டுரை அது. அதில், பிளாஸ்ரிக்கின் மோசமான பின்விளைவுகளை அறிந்ததும் தான் அதிர்ந்துபோய்விட்டதாகக் குறிப்பிட்டிருக்கிறார் அவர். அத்துடன் பல நாடுகளில் பிளாஸ்ரிக்கிற்குப் பதிலாக துணி, அட்டைப் பெட்டிகள் என்பன உபயோகப் படுத்துகிறார்களாம். இம்மாற்றத்தை நாமும் எமது மண்ணில் தாமதமின்றி நிகழ்த்தியாக வேண்டும். இயற்கையோடு இயைந்த வாழ்வும், கந்தையானாலும் கசக்கிக் கட்டுகின்ற சிக்கன வாழ்வினூடான கழிவு மேலாண்மையும் தமிழர் வாழ்வியலுக்குப் புதியதல்லவே - என அக் கட்டுரையை முடித்திருக்கிறார் அமைச்சர்.

பிளாஸ்ரிக் மயமாகும் உலகத்தைப் பற்றி சிந்திக்கவும், அதற்காக ஆதங்கப்படவும் தெரிந்த அவருக்கு, அவர் பிரதேசத்திலுள்ள ஆரியகுளமும், வின்சர் தியேட்டருக்கு தெற்கே பெற்றோல் ஸ்டேசனுக்



குப் பின்னாலுள்ள பழைய வண்ணார் குளமும் கண்ணுக்குத் தெரியாது இருப்பது உலக விநோதங்களில் ஒன்று. அங்கே நிரம்பிக் கிடக்கின்ற பிளாஸ்ரிக் கழிவுகள் கொஞ்ச நஞ்சமல்ல. இவை இரண்டும் வேறெங்கிலும் இல்லை. அவரது ஆட்சிக்குட்பட்ட பிரதேசத்திலுள்ளது. சைவக் கடைகளில் அந்த மேசையைப் பார்ப்பவன் இந்த மேசையைப் பார்க்க மாட்டான் என்று இருப்பது போல வடமாகாண மந்திரி சபையிலும், அந்த மினிஸ்ரர் அதைப் பார்ப்பார், இந்த மினிஸ்ரர் இதைப் பார்ப்பார் என்று வாளாதிருப்பது எந்த வகையில் நியாயம். இப்படியான விடயங்களில் அக்கறை கொண்டு ஆவன செய்ய வேண்டியது அந்தந்தப் பிரதேசத்திலுள்ள ஒவ்வொரு குடி மகனுக்கும் உரிய கடமை. அதுவும் அவர் மிகவும் பொறுப்பு வாய்ந்தவர்.

அவர் ஒரு சாதாரண அதிகாரியாக இருந்தால் கூட இத்தனை தூரம் அவரைப் பற்றி எழுதி நேரத்தை செலவிட்டிருக்கமாட்டேன். வடமாகாண சபை மந்திரிகளுள் மிக முக்கிய திணைக்களங்களை வைத்திருக்கும் ஒருவர்.

★ ★ ★

அமைச்சரே! வடமாகாணசபையில் இருக்கும் அமைச்சர்களில் செயற்திறனோடு பல வேலைத்திட்டங்களை முன்னெடுப்பவர் நீங்கள் தான். அதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. நாவற்குழி வெளியிலும், பண்ணையிலும், வல்லை வெளியிலும் தலையாட்டிக் கொண்டிருக்கும் மரங்கள் பெரு விருட்சமாகும் காலத்தில் உங்களின் சேவை எல்லோராலும் மறக்கமுடியாததாக இருக்கும். அதைவிட "அம்மாச்சி" உணவகத்தை ஆரம்பித்து பாரம்பரிய உணவுகளை எல்லோரும் விரும்பி உண்ணும் சூழலையும், வேலையற்ற பெண்களுக்கு தொழில்வாய்ப்பினையும் ஏற்படுத்திக் கொடுத்தவர் நீங்கள். தவிர ஒவ்வொரு கார்த்திகை மாதமும் மரநடுகை மாதமாகப் பிரகடனம் செய்து மறவர்களை மறைமுகமாக நினைவு கூரவும், மரங்களை அவர்கள் நினைவாக தேசமெங்கும் நடவும் நீங்கள் எடுத்த, எடுத்து வரும் முயற்சிகளை எவ்வளவு பாராட்டினாலும் தகும். ஆனால் இவ்வளவு நல்லது செய்தும், ஒரு குடம் பாலுக்கு ஒரு துளி விஷமான கதையாக சில விடயங்களில் நீங்கள் பாராமுகமாக இருப்பது உங்கள் மீது விசனத்தையும் ஏற்படுத்துகிறது.

தேர்தல் முடிவடைந்தவுடன் சூழலியலாளரான உங்களை விவசாய அமைச்சர் என்று தீர்மானித்தது பொருத்தமானதே. இரு அறிவிப்புக்களை செய்தீர்கள். ஒன்று, பாதீனியத்தை ஒழிப்பது. இரண்டாவது, வடமாகாண சபை சார்ந்த நிகழ்வுகளில் உள்ளூர் பானங்களை மட்டுமே பயன்படுத்துவது. ஆனால் இந்த இரண்டு அதிரடி அறிவிப்புகளும் செயலிழந்து வருடக் கணக்காகி விட்டன.

இந்திய இராணுவம் போகும்போது தமது நினைவாக விட்டுச் சென்றுள்ள பாதீனியம் என்ற காட்டு கஞ்சா செடியை அகற்ற வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டு களமிறங்கிய போது, இந்த முறை எப்படியும் அதற்கு முடி வுரை எழுதி விடுவீர்கள் என்றே எதிர்பார்த்தோம்.

ஆனால் பெருமெடுப்பில் தொடங்கப்பட்ட பாதீனியத்துக்கு எதிரான தாக்குதலை சொல்லாமல் கொள்ளாமல் கைவிட்டு வேறு விடயங்களில் கவனத்தை திருப்பிவிட்டீர்கள். சிறிது சிறிதாக மக்களைக் கொல்லக் கூடிய அந்தச் செடி பற்றியும், அதன் விளைவு பற்றியும் தற்போது மக்களுக்குத் தெரியாது.

இந்திய இராணுவம் உணவுக் காகக் கொண்டு வந்த ஆடுகளின் கழிவுக்கூடாக அந்தச் செடியின் விதைகள் வந்ததாகவே மக்கள் நம்பிக் கொண்டிருக் கின்றனர். உண்மையில் இந்தியப்படைகள் தம்மைப் போதையேற்ற பொடி செய்து புகைப்பதற்காகக் கொண்டுவந்த செடி என்பது யாருக்குத் தெரியும்? அவை வளர்ந்து தற்போது பற்றைக் காடுகளாகத் தோட்ட வெளிகளை நிரப்பிக் கொண்டிருக்கின்றன. ஆனால் பாதீனியத்தை தமது காணிகளில் வளர அனுமதிப்பவர்களுக்கு ஒரு லட்சம் வரை தண்டமாக அறவிடப்படும் என்ற அறிவித்தல் பலகைகள் மாத்திரம் இன்னும் ஆங்காங்கே மக்கள் காட்சிக்கு வைக்கப்பட்டு இருக்கின்றது. இதுவரை எவரேனும் ஒருவர் அப்படி பாதீனியத்தை வளர அனுமதித்த குற்றச்சாட்டில் தண்டனைக்கு உள்ளாகி இருக்கிறார்களா?

வெறுமனே அறிவித்தல் பலகையினை வைத்தால் மக்கள் திருந்தி, பாதீனியத்தை ஒட்டுமொத்தமாக ஒழித்துக் கட்டிவிடுவார்கள் என நம்புவது சரியா? "இவ்விடத்தில் குப்பை கொட்டாதீர்" என எழுதி வைத்திருக்கும் இடங்களுக்கு தேடிச் சென்று குப்பை கொட்டும் சமூகம் நம்முடையது. அப்படிப்பட்ட சமூகத்தில் "பாதீனியத்தை வளர இடமளித்தால் ஒரு லட்சம் தண்டம்" என அறிவித்தல் வைப்பதால் எந்தப் பயனும் விளையப் போவதில்லை. மாறாக இன்னும் பாதீனிய விளைச்சல்தான் அமோகமாகும்.

★ ★ ★

இற்றைக்கு மூன்று வருடங்களுக்கு முன்னராக வடமாகாண சபையின் விவசாய மந்திரியாகப் பதவியேற்ற காலத்தே பாதீனியத்தை அழிப்பதற்கென்று நல்லூர் பிரதேச சபை கோண்டாவில் இராமகிருஷ்ண வித்தியாலயத்தில் ஒரு செயற்திட்டத்தை ஆரம்பித்தது. அதிலே மாண்புமிகு அமைச்சர் கலந்து கொண்டு உரையாற்றிய செய்தித் தொகுப்பு இது.

எமது பிரதேச மண்வளத்தை சீரழிக்கும் பாதீனியத்தை முற்றாக அழிக்க வேண்டும் - விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் எமது மண்ணின் வளத்தை சீரழிக்கும் பாதினீயக் களையை எமது பிரதேசங்களிலிருந்து முற்றாக அழிக்க வேண்டும். ஒரு மாதத்தில் ஒரு தடவை அகற்றி விட்டு பாதினீயத்தை முற்றாக அழித்துவிட்டதாக எண்ணிவிடக் கூடாது. தொடர்ச்சியாகச் செய்யப்பட்டாலே அதனை அழிக்க முடியும் என வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்தார்.


(18 ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலையத் தொடங்கும் சசிகலா விம்பம்

■ மணிகண்டன்



கடந்த வாரம் பரப்பன அக்ரஹாரா சிறை வளாகத்திற்குச் சென்றிருந்தேன். சிறைக்கு வந்த பிறகு தமிழகத்திலிருந்து சசிகலாவுக்கு நிறையக் கடிதங்கள் வருவதாகச் சொன்னார்கள். அதை விசாரிப்பது ஒன்றும் பெரிய காரியமில்லை. சிறைக்குள் ஒரு காவலரை அறிமுகம் செய்து வைத்திருக்கிறேன். பொதுவாக அவர் வளாகத்தின் வெளியில்தான் காவலுக்கு இருப்பார். இத்தகைய தகவல்களை அவரிடம் கேட்டால் சொல்லிவிடுவார். ஏகப்பட்ட கடிதங்கள் வருவதாகவும் பெரும்பாலானவை திட்டியும் வசைபாடியுமே வருவதாகவும் சொன்னார். ஆச்சரியமாக இருந்தது. அந்தளவுக்கு நம் மக்களுக்குத் தைரியம் இருக்கிறதா என்று யோசனை வராமல் இல்லை. ஆனால் பலரும் தமது தெளிவான முகவரிகளோடு திட்டி அனுப்புகிறார்கள் போலிருக்கிறது.

அதிசயமாக, தினத்தந்தியின் பெங்களூர் பதிப்பிலும் கூட செய்தியாக வெளியிட்டிருக்கிறார்கள். சசிகலாவுக்கு எதிராகச் செயற்படும் ஏதாவதொரு தரப்பு கூட இதைச் செய்தியாக வெளியிடச் சொல்லி அறிவுறுத்தியிருக்கலாம். எப்படியிருப்பினும் கடிதங்கள் வருகின்றன என்பது உண்மைதான். சசிகலா தரப்புக்கான மக்கள் செல்வாக்கு இதுதான். இப்பொழுதெல்லாம் சிறைச்சாலைக்கு வந்து பார்ப்பதற்குக் கூட ஆட்கள் இல்லை. இளவரசியின் மகன் விவேக் ஜெயராமன் மட்டும் சிறை வளாகத்திற்கு அருகாமையிலேயே ஒரு வீடு பார்த்து குடியிருக்கிறார் போலிருக்கிறது. அவர்தான் அடிக்கடி சிறைக்குள் வந்து செல்வதாகக் காவலர் சொன்னார். மற்றபடி சிறை வளாகம் காற்று வாங்கிக் கொண்டிருக்கிறது. கேட்பாரில்லை.

### காசுக்கணக்கும் மனக்கணக்கும்

ஜெயலலிதா மறைந்த போது சசிகலா அதிமுகவின் பொதுச்செயலாளர் ஆன போதும், சசிகலா சிறைக்குள் செல்லும் போதும் டிடிவி தினகரன் கட்சியின் துணைப்பொறுப்புக்கு வந்த போதும் கட்சியின் அதிகாரத்தை முழுமையாக அவர்கள் எடுத்துக் கொண்டதாகவும் இனி படம் காட்டுவார்கள் என்றும் விம்பம் உருவாகாமல் இல்லை. ஆனால் அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. கட்சியின் தலைமையைக் கைப்பற்றிவிட்டால் காசு கொடுத்து வாக்குகளைச் சேகரித்துவிடலாம் என்பதெல்லாம் மனக்கணக்குத்தான்.

மக்கள் தெளிவாகத்தான் இருக்கிறார்கள். ஆர்.கே.நகர் தொகுதி இடைத்தேர்தலிலேயே நிலைமை தெரிந்துவிடும். உத்தேசமான கணிப்புப்படி "மூன்றாமிடத்தைப் பிடிப்பதற்கே கூட தினகரன் மென்று தண்ணீர் குடிக்கவேண்டியிருக்கும்" என்றுதான் தோன்றுகிறது. அதிகாரம் வேண்டும் என்பதற்காக அமைச்சர்களாகவும் எம்.எல்.ஏக்களாகவும் இருக்கிறவர்கள் குழைந்து நெளிவதால் மக்களிடையே செல்வாக்கு இருக்கிறது என்று அர்த்தமில்லை. சாலையில் செல்கிற சாமானிய மனிதர்கள் யாரிடம் வேண்டுமானாலும் பேசிப் பார்க்கலாம். பெங்களூ ரில் ப்ரண்ட்டன் சாலையில் ஒரு குடிகாரர் இருக்கிறார். தினசரி சப்போட்டா பழம் விற்று வருகிற வருமானத்தைக் குடித்துவிட்டுச் செல்கிற மனிதர். ஜெயலலிதாவின் நிழற்படத்தை சட்டைப்பையிலேயே வைத்துக் கொண்டு கிடப்பார். அவரிடம் பேச்சுக் கொடுத்தால் நாறடிக்கிறார். இவர் சொல்வதுதான் வேத வாக்கு என்ற அர்த்தத்தில் குறிப்பிடவில்லை. ஒரு பானை சோற்றில் ஒரு சோறு அவர். அவ்வளவுதான்.

### அரசியல் வெற்றிட அறுவடை

ஜெயலலிதாவின் மரணத்திற்குப் பிறகு தமிழகத்தில் உருவாகியிருக்கும் அரசியல் வெற்றிடத்தை பாஜக அறுவடை செய்ய விரும்புகிறது என்பது உண்மைதான். ஆனால் கி.வீரமணி மாதிரியானவர்கள் சொல்வது போல 'சசிகலாவால்தான் பா.ஜ.க உள்ளே வருவதைத் தடுக்க முடியும்' என்ற நம்பிக்கையைவிட வேறு அபத்தம் இருக்க முடியாது. ஒருவேளை மன்னார்குடிக் கும்பல் ஒதுக்கி வைக்கப்பட்டால் அதிமுக தப்பி வலுவான கட்சியாகச் செயல்படுவதற்கு வாய்ப்பிருக்கிறது. இந்தக் கும்பல் இப்படியே திரியுமென்றால் மக்களிடையே இவர்கள் தரப்புக்கு பல்லிளித்துக் கொண்டிருக்கிற செல்வாக்கு லட்சணத்துக்கு ஒன்றரை கோடி தொண்டர்களைக் கொண்ட இயக்கத்துக்கு ஒவ்வொரு அடியாகக் குழி தோண்டிக் கொண்டிருக்கிறார்கள் என்று அர்த்தம்.

சசி- ஒபிஎஸ் என இரு தரப்பும் அடித்துக் கொள்ளும் போது இரட்டை இலை சின்னம் முடக்கப்பட்டுவிடும் என்பது எதிர்பார்த்த ஒன்றுதான். ஆனால் இந்த முடக்கத்தை வைத்துக் கொண்டு வரலாறு திரும்புகிறது என்றெல்லாம் கற்பிதம் செய்து கொள்ள வேண்டியதில்லை. எண்பதுகளின் இறுதியில் எம்.ஜி.ஆர் மறைவுக்குப் பிறகான அதிமுகவில் ஜெயலலிதாவின் எழுச்சியை தினகரனுடனும் சசிகலாவுடனும் இன்னபிற மன்னார்குடி உறுப்பினர்களுடனும் எந்தவிதத்தில் ஒப்பிட முடியாது. அன்றைக்கு ஜெயலலிதாவுக்கு கூட்டத்தை ஈர்க்கிற திறமை இருந்தது. ராஜ்யசபாவில் எம்.பியாக இருந்த போது அவர் டெல்லியில் திரட்டி வைத்திருந்த தொடர்புகளும், ராஜீவ்காந்தியின் ஆதரவும் அவருக்கு பக்க பலமாக இருந்தன. தேர்தலில் கிட்டத்தட்ட முப்பது தொகுதிகளில் வென்றார். இப்படி எல்லாமுமாகச் சேர்ந்து அவரால் இரட்டை இலையை மீட்டெடுக்க முடிந்தது.

> எம்.ஜி.ஆரின் மறைவுக்கு முன்பாகவே ஜெயலலிதா தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்திருந்தார். மக்களும் 'இனி அடுத்தது இந்தம்மா'தான் என்கிற மனச்சாய்வுக்கு வந்திருந்தார்கள். எதிர்ப்பு இருந்த அதே அளவுக்கு அவருக்கு ஆதரவும் இருந்தது.

இதில் எந்த யோக்கியதை சசி தரப்புக்கு இருக்கிறது?

### வரலாறு திரும்பவில்லை

பணம் மட்டுமே அரசியல் இல்லை. மக்கள் சற்றேனும் விரும்ப வேண்டும். மக்களிடையே செல்கிற அளவுக்கேனும் தகுதி வேண்டும். எதுவுமேயில்லாமல் வரலாறு திரும்புகிறது என்று எப்படி வாய் கூசாமல் சொல்ல முடியும்? ஜெயலலிதாவுக்கு இருந்த கவர்ச்சியில் ஒரு சதவீதம் கூட இந்த முகங்களுக்கு இல்லை என்பதை வெளிப்படையாகவே பேசலாம். எம்.ஜி.ஆரின் மறைவுக்கு முன்பாகவே ஜெயலலிதா தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்திருந்தார். மக்களும் 'இனி அடுத்தது இந்தம்மா'தான் என்கிற மனச்சாய்வுக்கு வந்திருந்தார்கள். எதிர்ப்பு இருந்த அதே அளவுக்கு அவருக்கு ஆதரவும் இருந்தது.

இன்றைக்கு அதிகாரத்திற்காக குழைந்து கொண்டிருக்கும் கட்சி நிர்வாகிகளைத் தாண்டி சசிகலா தரப்புக்கு என்ன செல்வாக்கு இருக்கிறது?

### சசிகலாவைச் சகிக்கமாட்டார்கள்

ஜெயலலிதாவின் காலத்திலும் வாக்குக்கு பணம் கொடுத்த போது மக்கள் வாங்கிக் கொண்டுதான் வாக்களித்தார்கள். ஆனால் அப்பொழுது மக்கள் 'ஜெயலலிதாவுக்கு வாக்களிக்கவே கூடாது' என்ற வெறுப்பில் இருந்ததாகச் சொல்ல முடியாது. அப்படி மக்கள் நினைத்த தருணங்களில் எவ்வளவுதான் கொடுத்தாலும் தோற்கடித்தார்கள். மற்றபடி, தமிழகத் தேர்தல்களைப் பொறுத்தவரையிலும் ஜெயலலிதாவா? கருணாநிதியா? என்ற கேள்விதான் எழும். இருவரையுமே சகித்துக் கொள்ள மக்கள் பழகியிருந்தார்கள். அந்த மனநிலையில் இருவரில் ஒருவரைத் தேர்ந்தெடுத்தார்கள். இன்றைக்கு நிலைமை அப்படியில்லை. "சசிகலாவின் தரப்பைத் தேர்ந்தெடுத்துவிடக் கூடாது என்பதில் மக்கள் தெளிவாக இருக்கிறார்கள்" என்றுதான் புரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. இந்தத் தரப்பை சகித்துக் கொள்கிற மனநிலையில் பெரும்பான்மையான மக்கள் இல்லை என்பதுதான் நிதர்சனம். 'ஆட்சி அவர்களிடம் இருக்கிறது..எதற்கு வம்பு?' என்று அடங்கியிருப்பதனால் மக்கள் ஆதரிக்கிறார்கள் என்று அர்த்தமில்லை.

ஆனால் ஒன்று- அரசியலைப் பொறுத்தவரையில் 'நமக்கு ஒத்து வராது' என்று தாமாகவே ஒதுங்கிக் கொள்கிறவர்களின் எண்ணிக்கை எப்பொழுதுமே வெகு குறைவு. மிக மோசமாக தோற்கடிப்பட்டு மக்களால் ஒதுக்கப்படுகிறவர்களின் எண்ணிக்கைதான் அதிகம். விதி அப்படித்தான் என்றால் யாரால் என்ன செய்ய முடியும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# RIP Sri Lankan Cricket




# இரங்கல் செய்தி

தொகுப்பு : சி.விமலன்

பங்களாதேஷ் அணியுடன் இரண்டாவது டெஸ்ட் போட்டியில் தோல்வியடைந்த இலங்கை அணி தென்னிலங்கை ஊடகங்களால் வறுத்தெடுக்கப்பட்டிருக்கின்றது. குறிப்பாக ஆங்கிலப் பத்திரிகையொன்று "இலங்கை கிரிக்கெட் ஆத்மா சாந்தியடையட்டும். 19 மார்ச் 2017 ஆம் திகதி கொழும்பு சரா ஓவல் மைதானத்தில் இலங்கை கிரிக்கெட் மரணம் அடைந்தது. அதன் உடல் எரிக்கப்பட்டு சாம்பல் பங்களாதேஷ்க்கு எடுத்துச் செல்லப்பட்டது" எனப் பிரசுரித்துள்ளது.

கிரிக்கெட்டின் ஆரம்பகாலத்தில் டெஸ்ட் போட்டியொன்றில் அவுஸ்ரேலியா, இங்கிலாந்தை தோற்கடித்தபோது இங்கிலாந்து பத்திரிகைகள் இங்கிலாந்து கிரிக்கெட் ஓவல் மைதானத்தில் இறந்து விட்டது. அதன் உடல் எரிக்கப்பட்டு சாம்பல் அவுஸ்ரேலியாவுக்கு கொண்டு செல்லப்பட்டது என்று குறிப்பிட்டதைப்போல் அந்த ஆங்கிலப் பத்திரிகை எழுதியதால் இது ஒன்றும் புதுமையான விடயமல்ல.

விளையாட்டில் வெற்றி – தோல்வி சகஜம் என்றாலும், அந்நிய மண்ணில் படுதோல்வியடைவதைக் காட்டிலும் சொந்த மண்ணில் தோற்கும் ஒரு போட்டி கடும் கண்டனத்துக்கு ஆளாவதுண்டு. தென்னாபிரிக்காவில் நடைபெற்ற டெஸ்ட் தொடரில் இலங்கை வெள்ளையடிப்புச் செய்யப்பட்டாலும், எந்த ஊடகங்களும் இந்தளவுக்கு கடுமையாக விமர்சித்திருக்கவில்லை.

ஆனாலும் மேற்படி பத்திரிகை இவ்வாறு கடுமையாக விமர்சித்ததில் ஓர் உண்மை புலப்படுவதாகவே தோன்றுகிறது. கடந்த காலங்களில் ஒரு நாள் போட்டிகளில் பங்களாதேஷ், சிம்பாப்வே, கென்யா போன்ற அணிகளிடம் இலங்கை தோல்வியடைந்த பொழுதுகளில் கூட, எந்த ஊடகங்களும் இத்தகைய கடுமையான வார்த்தைப் பிரயோகங்களை முன்வைத்திருக்கவில்லை. ஆனால், தற்போது பங்களாதேஷ் அணியுடனான தோல்வியை விமர்சித்திருப்பது டெஸ்ட் போட்டிகளுக்கு இருக்கும் மதிப்பை பறைசாற்றுவதாகவே உள்ளது.

அண்மைக்கால இலங்கை அணியின் தடுமாற்றங்களையும், பங்களாதேஷ் அணியின் எழுச்சியையும் உற்றுக் கவனித்தவர்களுக்கு இந்தத் தோல்வி பரிகாசத்துக்குரிய ஒன்றல்ல என்பது புலனாகும். பங்களாதேஷ்க்குத்தான் இது 100 ஆவது டெஸ்ட் போட்டியே. எனவே இத்தகைய ஒரு தோல்விக்கு இவ்வாறான கடுமையான வார்த்தைப் பிரயோகங்கள் அவசியம்தானா என்ற கேள்வியும் எழுகின்றது.

இத்தனைக்கும் தொடரை இலங்கை இழக்கவும் இல்லை. அதே சமயம் சில பத்திரிகைகள் நடுநிலையோடு சிந்தித்து பங்களாதேஷின் வெற்றியைப் பாராட்டி உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இத்தோல்வியில் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய விடயம் இலங்கை அணித்தலைவர் ரங்கன ஹேரத் சிறுபிள்ளைத்தனமான கருத்து எதனையும் கூறாமல் தோல்வியை ஒப்புக்கொண்டதுதான்.




6 மாத காலம் கடும் உடற்பயிற்சியினால் 60 கிலோ எடை குறைந்த "ரெசிலிங்" பிரபலம் பிக்ஷோ. "எப்பிடி இருந்த நான் இப்படி ஆயிட்டேன்"

# பெயர் மாற்றம்

எதிர்வரும் 5ஆம் திகதி பத்தாவது ஐ.பி. எல். தொடர் ஆரம்பமாகவுள்ள நிலையில், ஒவ்வொரு அணியும் புதிய வீரர்களுடனும் வியூகங்களுடனும் களமிறங்கத் தயாராகி விட்டனர். அந்தவகையில் றைசிங் புனே சுப்பர் கியன்ற்ஸ் அணியும் பல அதிரடி மாற்றங்களோடு இந்த முறை களமிறங்குகின்றது.

இரண்டு மாதங்களுக்கு முன்னர் அணித்தலைவர் பதவியில் இருந்து டோனியை அதிரடியாக நீக்கிய புனே அணி நிர்வாகம் தலைமைப் பொறுப்பை ஸ்ரீபன் ஸ்மித்திடம் கையளித்திருந்தது. றைசிங் புனே சுப்பர் கியன்ற்ஸ் என்ற தனது பெயரை றைசிங் புனே கியன்ற் என்று மாற்றிக் களமிறங்க உள்ளதாக அறிவித்துள்ளது.

அதாவது சுப்பர் கியன்ற்ஸ் என்ற சொல்லில் உள்ள இறுதி 'எஸ்' என்ற எழுத்தை மட்டும் நீக்கி உள்ளது. நியூமோறொலஜி படி பெயரை மாற்றினால் கிண்ணத்தை கைப்பற்ற முடியும் என்று ஜோசியக்காரர்கள் எவராவது ஆலோசனை கூறியதால் இந்தப் பெயர் மாற்றம் நிகழ்ந்திருக்குமோ என்ற ஐயம் ரசிகர்களிடம் தோன்றாமல் இல்லை. ஆனாலும் இந்தப் பெயர் மாற்றம் மூடநம்பிக்கை சார்ந்து எடுக்கப்பட்ட முடிவல்ல என்று புனே அணி நிர்வாகம் அறிவித்துள்ளது.

கடந்த ஒன்பது வருடங்களாக நடைபெற்று வரும் ஐ.பி.எல் போட்டிகளில் டெக்கான் சார்ஜர்ஸ், புனே வாரியர்ஸ், கொச்சி டஸ்கஸ் போன்ற அணிகள் ஒப்பந்தப் பிரச்சினை காரணமாக நீக்கப்பட்டிருந்தன. அத்தோடு சென்னை சூப்பர்கிங்ஸ், ராஜஸ்தான் றோயல்ஸ் அணிகள் சூதாட்டத்தில் ஈடுபட்டதால் இரண்டு வருடகால தடையை எதிர்நோக்குகின்றனவே தவிர, ஐ.பி.எல் போட்டிகளில் அணிகளின் பெயர்களில் எந்த மாற்றமும் இதுவரை ஏற்படவில்லை. ஆனால் புனே அணி ஐ.பி.எல்லில் அறிமுகமாகி ஒரு வருடத்துக்குள்ளேயே பெயரை மாற்றி களமிறங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இம்முறை ஐ.பி.எல் போட்டிகளில் தலைமை மாற்றம், பெயர் மாற்றம் என்பவற்றோடு புனே அணி மீதுதான் அதிகளவு எதிர்ப்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. இங்கிலாந்து வீரர் பென் ஸ்ரோக்கை பதினான்கு கோடிக்கு ஏலத்தில் எடுத்தமை, ஸ்ரீபன் பிளமிங் ஏற்கனவே பயிற்சியாளராக இருந்தாலும் மேற்கிந்தியத் தீவுகளின் முன்னாள் வீரர் சிம்மொன்ஸை பந்து வீச்சு பயிற்சியாளராவும், இந்திய அணியின் முன்னாள் வீரர் ரிஷிகேஸ் கனிஷ்கரை உதவிப்பயிற்றுநராகவும் நியமித்துள்ளது. கடந்த வருடம் ஏழாமிடத்தைப் பிடித்த புனே அணி இந்த அதிரடி மாற்றங்களால் இந்தமுறை சாதனை படைக்குமா என்பதைப் பொறுத்திருந்து தான் பார்ப்போம்.



# ஆயிரத்தில் ஒருவன்

இத்தாலி உதைபந்தாட்ட அணியின் தலைவரும், கோல் காப்பாளருமான கியன்லுகி புபொன் சில தினங்களுக்கு முன்னதாக 1000 போட்டிகளில் விளையாடிய 18 ஆவது வீரர் என்ற சாதனையைப் புரிந்துள்ளார்.

நடைபெற்று முடிந்த இத்தாலி அல்பேனியா அணிகளுக்கிடையிலான உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளுக்கான தகுதிச் சுற்று ஆட்டத்தில் விளையாடியதன் மூலம் இந்த அரிய சாதனையை நிகழ்த்தி உள்ளார். இப்போட்டி இத்தாலிக்காக அவர் விளையாடிய 168 ஆவது போட்டி என்ற வகையில் ஐரோப்பா சார்பில் அதிக போட்டியில் களமிறங்கிய சர்வதேச வீரர் என்ற பெருமைக்கு உரித்துடையவரானார்.

39 வயதான புபொன் தனது உதைபந்தாட்ட வாழ்க்கையை 1991 ஆம் ஆண்டு இத்தாலியின் பர்மா கால்சியோ அணியுடன் ஆரம்பித்தவர். 2001 ஆம் ஆண்டு ஜுவென்ரஸ் அணிக்காக அன்றைய காலகட்டத்தில் 53 மில்லியன் டொலருக்கு ஒப்பந்தமானவர். இதன் மூலம் அதிக தொகைக்கு ஒப்பந்தமான கோல்காப்பாளர் என்ற சாதனையையும் படைத்தவர்.

இத்தாலிய தேசிய உதைபந்தாட்ட அணிக்கு 1997 ஆம் ஆண்டு உள் நுழைந்த புபொன் இதுவரை 1998, 2002, 2006, 2010, 2014 என 5 உலகக் கிண்ணப்போட்டிகளில் பங்குபற்றியவர். 2006 ஆம் ஆண்டு ஜேர்மனியில் நடைபெற்ற உலகக் கிண்ணப் போட்டிகளில் இத்தாலி சம்பியன் பட்டம் வெல்வதற்கு காரணமாகி தங்கக் கையுறை விருதும் பெற்றவர்.

2004ஆம் ஆண்டு உதைபந்தாட்ட ஜாம்பவான் பீலே தெரிவு செய்த 100 சிறந்த வீரர்களின் பட்டியலில் புபொனும் இடம்பெற்றிருந்தவர். அத்தோடு பீபாவின் புள்ளிவிவரவியல் பிரிவு (IFFHS) வழங்கிவரும் சிறந்த கோல் காப்பாளர் விருதை 4 தடவைகள் ஜுவென்ரஸ் அணி சார்பில் பெற்றவர்.

இத்தாலி கழகங்களுக்கிடையில் நடைபெறும் தொடரில் ஜுவென்ரஸ் அணி தொடர்ச்சியாக 5 தடவைகள் கிண்ணம் வென்றமையும், 4 ஐரோப்பிய கிண்ணத்தொடர்களிலும் 2 பிபா கொன்பெடரேஷன் கிண்ணத் தொடர்களிலும் 1996 ஒலிம்பிக் போட்டிகளிலும் இவர் கலந்துகொண்டமை இவரது விளையாட்டுலக வாழ்வில் முக்கிய மைல் கற்களாகும்.

2018 ஆம் ஆண்டு ரஷ்யாவில் நடைபெறப்போகும் உலகக் கிண்ணத் தொடரோடு உதைபந்தாட்டப் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறலாம் என்று கருதப்படுகிறது.




இந்தப் பத்திரிகை லக்ஷ்மி பிறிண்டர்ஸ் (பிறைவேற்) நிறுவனத்தால் 01.04.2017 அன்று 107, இராச வீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org